# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28
விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 319 புரட்டாதி 27ஆம் நாள் திங்கட்கிழமை 14 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


வடக்கில்

# கோத்தபாயவின் தேர்தல் பரப்புரைக்காக தென்னிலங்கை இளையோர் களமிறக்கம்

### யாழ். நகரில் வாடகை வீடுகளில் தங்கியிருந்து அவர்கள் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 14
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளரும், முன்னாள் பாதுகாப்புச் செயலருமான கோத்தபாய ராஜபக்ச வடக்கு மக்களின் வாக்குகளை இலக்கு வைத்து பரப்புரை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளார். அவருக்கு ஆதரவு வழங்கும் கட்சிகள் ஊடாக ஒரு புறம் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டாலும், கோத்தபாயவின் நேரடிக் கட்டுப்பாட்டிலும் வடக்கில் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவற் 23

---

## வாக்கெண்ணும் பணி மத்திய கல்லூரியில்

யாழ்ப்பாணம், ஒக். 14
அரச தலைவர் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு விநியோகப் பொதிகள் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக் 04

---

வாகன

## தண்டனைச் சீட்டு இனி மும்மொழியில்

யாழ்ப்பாணம், ஒக். 14
வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தமிழ்பேசும் மக்களின் நன்மையை கருத்தில் கொண்டு அரச தலைவர் மைத்திரிபாலவிடம் கேட்டுக்கொண்டதற் 04

---

வெளிநாட்டிலிருந்து வந்து

## விருந்தில் பங்கெடுத்தவர் பரிதாபகரமாக உயிரிழப்பு

சாவகச்சேரி, ஒக். 14
கூழ் விருந்தில் பங்கேற்று விட்டு படுக்கைக்குச் சென்ற 31வயது இளம் குடும்பத் தலைவர் வாந்தியெடுத்த நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் சாவடைந்துள்ளார். 23

---

## தேர்தல் போட்டியிலிருந்து இனி விலகவே முடியாது

### மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 14
அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எவரும் தற்போது தேர்தலிலிருந்து விலகிக் கொள்ள முடியாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் 23

---

அரச தலைவர் தேர்தல் தொடர்பில்

# 5 மணிநேரம் பேசியும் முடிவில்லை தமிழ் கட்சிகள் மீண்டும் இன்று பேச்சு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 14
அடுத்த மாதம் இடம்பெறவுள்ள அரச தலைவர் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே ஒருமித்த நிலைப்பாட்டை ஏற்படுத்த யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் ஆரம்பித்த முயற்சியின் 5 ஆம் கட்டப் பேச்சு இன்று மதியம் 1.30 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று மாலை 5 மணிக்கு ஆரம்பமான 4 ஆம் கட்டப் பேச்சு 5 மணி நேரமாக நடைபெற்றும் கட்சிகளிடையே ஒருமித்த நிலைப்பாடு ஏற்படவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வில்லங்கமான முடிவாலேயே இந்த நிலமை ஏற்பட்டது என்று, கூட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். 23

---

நுழைவாயில்




(மேலதிக விவரம் - பக். 21)

## ஈழத் தமிழர் ஆதரவு புலிகளுக்கான ஆதரவு இரண்டும் வேறானது

### மலேசியாவின் ரி.ஐ.டி. தலைவர் தெரிவிப்பு

கோலாலம்பூர், ஒக். 14
ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு வழங்குவது என்பதும் விடுதலைப் புலிகளுக்கான ஆதரவு என்பதும் ஒன்று அல்ல. இவ்வாறு மலேசியாவின் பயங்கரவாத தடுப்புப் பிரிவு தலைவர் அயூப் கான் தெரிவித் 23

---

## அரச தலைவர் தேர்தலில் இருந்து சிவாஜிலிங்கம் விலக வேண்டும்

### ரெலோ தலைமைக் குழு தீர்மானம் கட்சியிலிருந்து இடைநிறுத்தவும் கோரிக்கை

வவுனியா, ஒக். 14
அரச தலைவர் தேர்தலில் இருந்து விலகுமாறு சிவாஜிலிங்கத்தை கோருவதுடன், அமைப்பு விதிகளுக்கு அமைய ஏனைய நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று ரெலோவின் தலைமைக் குழு தீர்மானித்துள்ளதாக கட்சியின் செயலர் ந.சிறிகாந்தா தெரிவித்தார்.

## தமிழர் விவகாரம் தொடர்பில் சஜித்துக்கு எதுவும் தெரியாது


### சுமந்திரன் கூறினார் என்று மகிந்த பகிரங்கமாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 14
சுமந்திரன் என்னைச் சந்தித்த சுமந்திரன், சஜித் பிரேமதாசவுக்கு அரசியல் ரீதியாக எதுவும் தெரியாதென கூறினார் என்று போட்டுடைத்துள்ளார் மகிந்த ராஜபக்ச. 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்!

குரு பகவான் ஒரு ராசியில் இருந்து அடுத்த ராசிக்கு செல்வதற்கு 13 மாதங்கள் அல்லது ஒரு வருடம் ஆகும். இப்படி ஒரு ஆண்டுக்கு ஒருமுறை நிகழக்கூடிய குரு பெயர்ச்சி இந்த வருடம் 29.10.2019 அன்று நிகழ்கிறது. விகாரி வருடம் ஐப்பசி மாதம் 12ஆம் நாள் செவ்வாய்க்கிழமை, வாக்கிய பஞ்சாங்கப்படி, விருச்சிகம் ராசியில் இருந்து தனுசு ராசிக்கு மாறுதலாகி செல்கிறார். குரு பகவான் தனுசு ராசியில் 14.11.2020 வரை சஞ்சாரம் செல்கிறார். குரு பார்க்க கோடி நன்மை என்றும், கோடி தோஷம் விலகும் என்றும் நம்பப்படுகிறது. குரு பெயர்ச்சியினால் நன்மைகள் நடக்கும் என்று பொதுவாக நம்பலாம்.



அன்புக்கு அடிபணியும் மேட ராசி அன்பர்களே!

உங்கள் ராசிக்கு இது வரையில் அஷ்டமத்தில் குரு பகவான் வீற்று இருந்தார். இதனால் பல துன்பங்களை நீங்கள் அடைந்து இருக்கலாம். இதோ உங்களது துன்பங்களுக்கான விடிவு காலம் வந்து விட்டது. வாக்கிய பஞ்சாங்கப்படி 28.10.2019ஆம் திகதியும் திருக்கணிதப் படி 5.11.2019 திகதியும் உங்களது ராசிக்கு 9ஆம் இடத்தில் குரு பகவான் சஞ்சரிக்கிறார்.
இந்தப் பெயர்ச்சி பல விதங்களில் உங்களுக்கு நல்ல திருப்பு முனையாகவே இருக்கும். இதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி தரக்கூடிய நல்ல நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்தேறும். பணவரவு மேம்படும். இதனால் உங்களது தேவைகள் நல்ல படியாக நிறைவேறும். பழைய கடன்கள் கூட சிலருக்குப் படிப்படியாக அடைபட்டு விடும். சிலர் அசையும், அசையா சொத்துக்களை கூட வாங்கி மகிழலாம்.

முக்கியமாக தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கப்பெறும். அலுவலர்களுக்கு எதிர்பார்த்து காத்திருந்த சலுகைகள் கூட கிடைக்கப் பெறும். தேக ஆரோக்கியம் கூடி எதிலும் ஒரு வித சுறு சுறுப்பு தென்படும். சமூகத்தில் உங்களது அந்தஸ்து உயரும். பெரிய மனிதர்களின் சகவாசம் கூட உங்களுக்குக் கிடைக்கப்பெறும். பூர்வீகச் சொத்து சம்பந்தமான பிரச்சினைகள் கூட ஒரு முடிவுக்கு வரும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி ஏற்படும்.




திருமணம் ஆகி பல காலம் குழந்தை பேறு இல்லாதவர்களுக்கு கூட இறை அருளால் குழந்தை பாக்கியத்திற்கு வாய்ப்பு ஏற்படும். சிலர் வெளிநாடு சென்று வரலாம்.
உடன் பிறந்தவர்கள் கூட உங்களுக்கு நல்ல விதத்தில் உதவுவார்கள். எனினும் 24.1.2020 க்கு பிறகு சனி 10 ஆம் வீட்டில் சஞ்சரிக்க உள்ளதால் சிலருக்கு மேற்கண்ட திகதிக்கு பிறகு புதிய பொறுப்புக்கள் தேடி வரலாம். எனினும் வேலை பளு சற்றே அதிகரித்தாலும் சமாளித்து வெற்றி பெற்று விடுவீர்கள். மொத்தத்தில் உங்களுக்கு பெரும்பாலும் இந்த குரு பெயர்ச்சியால் நல்ல பலன்கள் தான் ஏற்படும்.

**பெண்கள்:**
உடல் ஆரோக்கியம் பல விதங்களில் உங்களுக்கு மேம்படும். பணவரவு கூட தேவைக்கு ஏற்றபடி மகிழ்ச்சி தரும். உங்களது குடும்ப தேவைகள் அனைத்தும் கூட நல்ல விதங்களில் பூர்த்தி ஆகும். சிலர் ஆடம்பர பொருள்களை வாங்கி மகிழும் பாக்கியம் கூட உண்டாகும். பழைய கடன்கள் கூட அடைபடும். குடும்ப உறுப்பினர்கள் இனி வரும் காலங்களில் உங்களைப் புரிந்து கொள்வார்கள். திருமண வயதை அடைந்த பெண்களுக்கு நல்ல வரன் தேடி வரும். சிலருக்கு காதல் விவகாரங்களில் வெற்றி கிட்டும்.

**உடல் ஆரோக்கியம்:**
உடல் ஆரோக்கியம் பெரும்பாலும் சிறப்பாகத் தான் இருக்கும். வெகு காலம் பல தரப்பட்ட மருந்து மாத்திரைகள் எடுத்து வந்தவர்களுக்குக் கூட இனி இந்த குரு பெயர்ச்சியால் மருத்துவ செலவுகள் பெருமளவில் குறையும். அன்றாடப் பணிகளில் கூட உற்சாகமாக ஈடுபடுவீர்கள். அப்படியே சனி பெயர்ச்சியால் சிறு, சிறு சஞ்சலங்கள் தோன்றினாலும் கூட குரு பலத்தால் அவற்றை எல்லாம் சமாளித்து நீங்கள் வெற்றி பெறுவீர்கள். ஏன், உங்கள் நெடுநாள் எதிரிகள் கூட நண்பர்களாக மாறுவார்கள்.

**குடும்பம் மற்றும் பொருளாதார நிலை:**
பொருளாதார நிலை மிகவும் சிறப்பாகத் தான் இருக்கும். கடன்கள் கூட படிப்படியாகக் குறையும். சிலருக்கு அசையும், அசையா சொத்துக்களை வாங்கும் பாக்கியம் கூட கிடைக்கப்பெறும். பூர்வீக சொத்து வகையில் கூட அனுகூலமான பலன்கள் உங்களுக்கு ஏற்படும். உற்றார் உறவினர்களுடன் இருந்து வந்த கருத்து மோதல்கள் கூட ஒரு முடிவுக்கு வரும். திருமணம் போன்ற சுப காரியங்கள் கூட நல்ல படியாக நடந்தேறும். எனினும், ஜனவரி மாதத்திற்குப் பிறகு தேவை இல்லாத முன் கோபத்தை மட்டும் குறைத்துக் கொள்ளப் பாருங்கள்.

**தொழில், வியாபாரம்:**
தொழில், வியாபாரம் செய்பவர்கள் எதிர்பார்த்த இலாபத்தை பெறுவார்கள். கூட்டாளிகளுடன் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் கூட இனி வரும் காலங்களில் குறையும். எனினும் சனிப்பெயர்ச்சிக்கு பிறகு பேச்சில் மட்டும் கூடுதல் நிதானத்துடன் இருந்து கொள்ளுங்கள். அதிலும் குறிப்பாக பிறருக்கு வாக்கு கொடுப்பதை தவிர்க்கப்பாருங்கள்.

**அலுவலர்களுக்கு:**
வேலையில் படிப்படியாக மகிழ்ச்சியான காரியங்கள் எல்லாம் நல்ல படியாக நடந்தேறும். அலுவலகத்தில் நீங்கள் மதிக்கப்படுவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டு எதிர்பார்த்த சலுகைகள் என அனைத்தும் இனி வரும் காலங்களில் உங்களுக்கு கிடைக்கப்பெறும். வேலை பளு கூட படிப்படியாக குறையும். எனினும் சனிப்பெயர்ச்சிக்கு பிறகு சிலருக்கு புதிய பொறுப்புகள் தரப்படலாம். ஆனாலும், உடன் இருப்பவர்கள் அனுசரிப்பார்கள். அதனால் கவலை வேண்டாம். சிலருக்கு இந்த குரு பெயர்ச்சிக்குப் பிறகு விரும்பிய இடமாற்றம் கூட கிடைக்கப்பெறும்.

**அரசியல்வாதிகள்:**
அரசியல் வாதிகளுக்கு அனுகூலமான பலன்கள் கிடைக்கப்பெறும். கடந்தகால அவப்பெயர்கள் எல்லாம் விலகி மேலிடத்திற்கு நீங்கள் நெருக்கம் ஆவீர்கள். முயற்சிகளில் கூட வெற்றி கிடைக்கும். சமூகத்தில் மதிப்பு, மரியாதை உங்களுக்கு கூடும். எனினும் சனிப்பெயர்ச்சிக்குப் பிறகு மேடை பேச்சுக்களில் பேசும் சமயத்தில் மட்டும் நீங்கள் கொஞ்சம் நிதானத்தை கடைபிடித்துக் கொள்ளுங்கள். மற்ற படி கட்சிப் பணிகளுக்கு நீங்கள் அடிக்கடி வெளியூர் செல்ல வேண்டி இருக்கலாம்.

**விவசாயம் செய்பவர்கள்:**
விவசாயம் செய்யும் முறையை மாற்றி நல்ல மகசூலை நீங்கள் பெறுவீர்கள். சிலர் புதிய தொழில் நுட்பத்தை தெரிந்து கொண்டு பயிர் செய்து வெற்றி அடைவீர்கள். இதனால் பணவரவு திருப்தி கரமாக இருப்பதுடன் உங்களது தேவைகள் கூட தக்க சமயத்தில் நிறைவேறும். சிலர் பழைய கடன்களை அடைத்து புதிய சொத்துக்களைக் கூட வாங்கும் பாக்கியம் உண்டாகும்.

**மாணவ மாணவியர்:**
கல்வியில் இது வரையில் இருந்து வந்த மந்த நிலை தேக்க நிலை படிப்படியாக மாறும். நீங்கள் எதிர்பார்த்த அளவிற்கு மதிப்பெண்கள் கிடைக்கப்பெறும். உடன் பழகுபவர்கள் ஆதரவு கூட உங்களுக்கு மகிழ்ச்சி தரும். சிலருக்கு படிப்புக்குத் தேவையான உதவிகள் கிடைக்கப்பெறும். விரும்பிய பாடத்தில் இடம் கிடைக்கும். ஆசிரியர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள்.

**பரிகாரம்:**

24.1.2020ஆம் திகதி முதல் சனி பகவான் ஜீவன ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்வதால் சனிப்பிரீதி மட்டும் செய்து கொள்ளுங்கள். குறிப்பாக உடல் ஒத்துழைத்தால் சனிக்கிழமைகளில் நல்லெண்ணெய் ஸ்நானம் செய்யுங்கள். சனிக் கிழமைகளில் உணவுக்காக கஷ்டப்படும் ஏழை மாற்று திறனாளிகளுக்கு சைவ உணவை வாங்கித்தருவது கூட உங்களுக்கு நன்மை தரும். எந்த ஒரு தெய்வத் திற்கும் நல்லெண்ணெய் தீபம் ஏற்றி வழிபடுங்கள்.

வணங்க வேண்டிய தெய்வம் :
**முருகப்பெருமான்**

ராசியான திசை : தெற்கு

ராசிக்கல் : பவளம்

ராசியான கிழமை : செவ்வாய்

ராசியான நிறம் : சிவப்பு

ராசியான எண்கள் : 1,2,3,9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்பு

பாடசாலையில் கிடைக்கின்ற எல்லாவிதமான அனுபவங்களைக் காட்டிலும் மாணவர்கள் வாசிப்புத் திறனை வளர்த்துக் கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளும் அனுபவம், அறிவு, திறன் மனப்பாங்கு மாற்றங்கள் பிள்ளைகளின் சமூக மயமாக்கல் திறன்களைப் புடம்போடுகின்றன.

இன்றைய மாணவர்கள் வாசிக்குத் திறனும் குன்றியவர்களாகவும் வாசிக்கும் ஆர்வம் இன்றியவர்களாகவும் காணப்படுகின்றனர்.

மாணவர்களிடையேவாசிப்புத் திறன் மேம்படுத்த வீட்டில் பெற்றோரும் பாடசாலைகளில் ஆசிரியர்களும் வழிகாட்டுதல் இன்றியமையாததாகும்.

பெற்றோர்கள், பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள். வாசிப்பின் அவசியத்தை உணரவையுங்கள். எமக்கு வழிகாட்டிச் சென்ற அறிஞர்கள், விஞ்ஞானிகள், மாமேதைகள் போன்றோர்வாசிப்பின் மகிமையை எடுத்துரைத்தமையைக் கூறுங்கள்.

- உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல மனப்பயிற்சி புத்தக வாசிப்பு- **இக் மண்ட்**
- பிராய்ட் ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கித் தரும் ஆகச்சிறந்த பரிசு ஒரு புத்தகம் தான் - **வின்ஸ்ட் சேர்க்கின்**


### வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகரப்பகுதியிலிருந்து சுன்னாகம் (K.K.S வீதி) கோண்டாவில் (பலாலி வீதி) வீதியில் சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.

**075 32 95 465**

### வேலையாள்கள் தேவை

சமையல், ரொட்டி போடும் வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை (திருநெல்வேலி)

**077 653 0253**

உதயன்

விளம்பர தொடர்புகளுக்கு

advt@uthayan.com, 021493 1111

### வீடு விற்பனைக்கு

உக்குளாங்குளம், வவுனியா 1 ஆம் ஒழுங்கையில் வீதிக்கருகில் நான்கு பக்கமும் மதிலுடனான 2 1/4 பரப்பு நவீனரக புத்தம் புதிய வீடு (உறுதியுடனான) விற்பனைக்குண்டு.

**077 945 7705, 071 023 2288, 077 615 2992**


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



**அமரர்**
**V.K.கானமூர்த்தி நாகலட்சுமி**

(நாதஸ்வர சக்கரவர்த்தி V.K. கானமூர்த்தியின் அன்பு மனைவி)

தோற்றம் 29 . 05 . 1947

மறைவு 30 . 09 . 2019

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அவரது இல்லத்தில் நாளை (15.10.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறுவதால் அந்நிகழ்வில் கலந்துகொண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தயவு கூர்ந்து இவ்வழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**காளி கோயிலடி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.**

**நாதஸ்வர சக்கரவர்த்தி V.K. கானமூர்த்தி குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

14.10.2019



மண்ணில் 04 . 12 . 1940

விண்ணில் 18 . 09 . 2019

**அமரர் மரியாம்பிள்ளை பேரின்பநாதன்**

உரும்பிராய் இந்துவின் புகழுக்கு புகழ்சேர்த்த பழைய மாணவன் மிகச்சிறந்த உதைபந்தாட்ட வீரன், 1958 ஆம் ஆண்டு அணிக்கு அணிசெய்து சகல வெற்றிகளுக்கும் உரித்தானவர். அன்னாரை இன்றையதினம் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றோம்.

(CS/11461)(11,17) **பழைய மாணவர்சங்கம், உரும்பிராய் இந்துக்கல்லூரி.**

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் கந்தையா நயினார்**

(அம்பாள் பழைய பாட்ஸ்கடை உரிமையாளர்)

தோற்றம் 10.01.1947

மறைவு 14.10.2014

திதி: 14.10.2019

இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடம் ஐந்தாகி விட்டது
நாம் வாழும் நாள்களில் உம் நினைவுகள்
எம்முடன் என்றென்றும் வாழும்...


இல.05, 5ஆம் ஒழுங்கை, அரசடி வீதி,நல்லூர், யாழ்ப்பாணம்.

நீங்கா நினைவுகளுடன்... **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து குமாரசாமி

**(ஓய்வுநிலை பிரதி அதிபர்- யா/ வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம்)**



புத்தூர் வாதரவத்தையினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து குமாரசாமி கடந்த 10.10.2019 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னப்பிள்ளை தம்பதிகளின் இளைய புதல்வரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், சுபத்திரையம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை, இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான முத்துசாமி, கந்தசாமி, இரத்தினசாமி, துரைச்சாமி, அருந்ததியம்மா மற்றும் சிவபாக்கியம், அண்ணாச்சாமி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற கணேசமூர்த்தி மற்றும் பாஸ்கரமூர்த்தி (நோர்வே), புண்ணியமூர்த்தி, சத்தியபாமா (ஆசிரியை - யா/ வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம்), கிருபாகரமூர்த்தி (ஆசிரியர், யா/ வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம்), பிரபாகரமூர்த்தி (பிரதேச செயலாளர், வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி), சத்தியறஜனி (ஆசிரியை - யா/ வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம்), கானமூர்த்தி ( பட்டயப் பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சதீஸ்வரி (நோர்வே), தவக்குமார், கௌரி, சிவதர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), சந்திரகோபன் (எழுதுவினைஞர், இலங்கை மின்சாரசபை, யாழ்ப்பாணம்), தாட்சாயினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதீனா (நோர்வே), திபேரன் ( நோர்வே), றதினிகா (நோர்வே), பபித்திரன், பதுமிதா, பதுமிதன், பாதுசன், பவகரன், பவநிதா, ஆர்த்திகன், ஆராதனா, மதுமிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00மணியளவில் வாதரவத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வாதரவத்தை, புத்தூர்.** (CS/24090)(11,17) **தகவல் குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



பிறப்பு 16 . 12 . 1942

இறப்பு 13 . 10 . 2019

**நாகரத்தினம் கனகமலர்**

மலேசியாவை பிறப்பிடமாகவும் சித்திரமேழி இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் கனகமலர் நேற்று (13.10.2019) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (மலேசிய பென்ஜனியர்) சின்னப்பிள்ளை தம்பதியரின் ஏகபுதல்வியும், கனகசபாபதி நாகரத்தினம் (ஓய்வுபெற்ற படவரைஞர், நீர்ப்பாசன இலாகா) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் மங்கையற்செல்வம், முருகானந்தன் (கனடா), மோகனச்செல்வம் (இலண்டன்), மோகனவிஜி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நித்தியானந்தன் மற்றும் ராஜினி, திலகராஜா, சிவனேசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் கஜானன், கம்ஷாயினி, தரஞ்சன், தனுாசிகா, கிஷானி, கபிஷா (கனடா), செந்தூரன், பானுஷா (இலண்டன்), பிருத்திகா, லிஷாங்கி, அபிரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2019) திங்கட்கிழமை ந.ப 12.00மணியளவில் சித்திரமேழி இளவாலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சித்திரமேழி காடிவளை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சித்திரமேழி, இளவாலை. 021 221 5914

தகவல்: **குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச...

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு சிவாஜிலிங்கம் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ள நிலையில் அது தொடர்பாக ஆராய்வதற்காக ரெலோவின் தலைமைக் குழு வவுனியாவில் நேற்றுக் கூடியது. கூட்டம் காலை 11 மணிக்கு ஆரம்பமானது. சுமார் மூன்றரை மணி நேரம் இடம்பெற்றது.

தலைமைக் குழுவில் இலங்கையைச் சேர்ந்த 21பேரும், வெளிநாடுகளிலுள்ள அமைப்பாளர்கள் 4 பேருமாக 25 பேர் உள்ளனர். இவர்களில் 13பேர் கலந்து கொண்டனர். லண்டன் அமைப்பின் சாம் என்பவரும் பங்குபற்றினார். கூட்டத்தின் முடிவில் சிறிகாந்தா தெரிவித்ததாவது,


கட்சி நிலைப்பாட்டுக்கு மாறாக கட்சியின் அனுமதியின்றி சுயேச்சை வேட்பாளராக சிவாஜிலிங்கம் தேர்தலில் போட்டியிடுகின்றார். கட்சியின் கட்டுப்பாட்டை மீறி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார் என்ற முடிவின் அடிப்படையில், கட்சியின் அமைப்பு விதிகளுக்கு அமைவாக அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஒன்று ஏன் எடுக்கப்படக் கூடாது என்ற காரணத்தை அவர் தெரிவிக்க விரும்பினால், அந்தக் காரணத்தை எழுத்து மூலமாக எதிர்வரும் சனிக்கிழமை மாலைக்குள் சமர்பிக்குமாறு அவரைக் கோருவதென தலைமைக் குழு முடிவெடுத்தி ருக்கிறது.

அவர் விளக்கமளிக்க தவறினால், அல்லது அவர் அளிக்கும் விளக்கம் தலைமை குழுவால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால் அவர் மீது ஒழுக்காற்று விசாரணை முன்னெடுக்கப்படும். உடனடியாக தேர்தல் களத்திலிருந்து விலகுமாறு தலைமை குழு அவருக்கு வேண்டுகோள் விடுக்கின்றது. அந்த வேண்டுகோள் எழுத்து மூலமாக அவரிடம் கையளிக்கபடும். இந்த முடிவுகள் நீண்ட நேர கலந்துரையாடலிற்கும், கருத்து பரிமாற்றத்திற்கும், விவதாங்களிற்கு பிறகு ஏகமனதாக எடுக்கப்பட்டிருக்கின்றது, என்றார்.

இதேவேளை, சிவாஜிலிங்கத்தை உடனடியாக கட்சியிலிருந்து இடைநிறுத்த வேண்டும் என்று நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட பலர் கோரிக்கை விடுத்துள்ளனர். அமைச்சர் விவகாரத்தில் டெனீஸ்வரன் கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய மைக்காக 3 ஆண்டுகள் இடைநிறுத்தப்பட்டார். அதேபோன்று சிவாஜிலிங்கமும் 3 ஆண்டுகளுக்கு இடைநிறுத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது. மேலும் சிவாஜிலிங்கம் தேர்தலில் போட்டியிடுவதற்கான காரணமும் ஒழுங்கு விதிமுறைக்கு அமைவாக அவரிடம் கேட்கவேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

சிவாஜிலிங்கம் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் கிழக்கு மாகாண உறுப்பினர்கள் ஊடகங்களில் முன்வைத்த காரசார கருத்துக்கள் தொடர்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. அதேவேளை, யாழ்ப்பாண மாவட்டக் கிளை சிவாஜிலிங்கத்தின் முடிவை ஆதரிப்பது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டதாக வெளியான தகவலுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. (ஒ.5)

## மரண அறிவித்தல்



### ஐயாத்துரை கணேசலிங்கம்

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் கற்கோவளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை கணேசலிங்கம் நேற்று (13.10.2019) ஞயிற்றுக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை ஈச்சம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும் கார்த்திகேசு துரையம்மா தம்பதிகளின் மருமகனும் மலர்விழியின் அன்புக்கணவரும் காயத்திரி, சதீஸ், கலைச்செல்வி, ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற ஜெயராணி, அற்புதராணி, காலஞ்சென்ற அமிர்தலிங்கம், நடேசலிங்கம் (சின்ராசு-லண்டன்), சுந்தரலிங்கம் (தாசன்), ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.10.2019 அன்று அன்னாரின் இல்லத்தில் (கற்கோவளம்), காலை 09.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகள் மயிலிட்டி இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### தவராசா சரண்குமார்

(யாழ் கொக்குவில்இந்துக்கல்லூரியின் கலைப்பிரிவு உயர்தர மாணவன்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் நீராவியடி, பிறவுண்றோட், முதலாம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட தவராசா சரண்குமார் கடந்த (12.10.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தவராசா-விஜயலட்சுமி தம்பதிகளின் பாசமிகு புதல்வரும் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம்-சரோஜினிதேவி (கிளி) தம்பதிகளின் அன்புப் பேரனும் அருட்சகோதரி இம்மானுவேல் (யேசுமலர் - திருச்சிலுவை கன்னியர்மடம்) அவர்களின் பேரனும் வின்சன்-சிந்தியா தம்பதிகளின் பெறாமகனும் செபஸ்ரியன்-மீரியம் வேஜின் (ராசாத்தி), சிவகுமார்- சாரதா (சுவிஸ்), கேதீஸ்வரன்-கேதீஸ்வரி, மர்லின் பின்ரா ஆகியோரின் அன்பு மருமகனும் நிறோசன், றொசான், நிஷாந்தினி (ஆஷா), சுஜிபா, யூட்றமணன், கீர்த்தனா, மதுசன் ஆகியோரின் சகோதரனும் அன்ரன் சகிதரன் (சதீஸ்), ஆன்சசிரேகா, ஜஸ்ரினா, சசிகலா, கலைமாறன், தர்சிகா ஆகியோரின் மைத்துனரும் ஆன் ஹரிஸ்னா, அக்ஷைவாஸ் ஆகியோரின் மாமனாரும் ரிதீஷ் இன் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாழ்ப்பாணம் இல. 18, பிறவுண் வீதி 1ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள இல்லத்தில் இன்று (14.10.2019) திங்கட்கிழமை பி.ப 1.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்.

## தண்டனைச்...

கிணங்கள் வீதி பயணத்தின்போது வழங்கப்படும் தண்டனைச் சீட்டானது (தடக்கொல) இனிவரும் காலங்களில் மூன்று மொழிகளிலும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆளுநர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இதுவரை காலமும் வாகன சாரதி வீதிப்போக்குவரத்து விதிகளை மீறும் பட்சத்தில் சாரதியின் வாகன உரிமம் பறிமுதல் செய்யப்பட்டு தண்டனைச்சீட்டு வழங்கப்பட்டது. அந்த தண்டனைச்சீட்டில் தண்டனைகள் என்ன ஏது என்பது தொடர்பில் சிங்கள மொழியிலேயே குறிப்பிடப்பட்டிருந்தன.

வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் இதுதொடர்பில் தமக்கு தெளிவின்மை காணப்படுவதாகவும் இதனை மாற்றியமைத்து தமிழில் அவை வழங்கப்பட வேண்டும் என்ற மக்களின் கோரிக்கைக்கு அமைவாக அரச தலைவரிடம், ஆளுநர் கேட்டுக்கொண்டதற்கிணங்க தண்டனைச்சீட்டில் மூன்று மொழிகளிலும் தண்டனைகள் என்ன என்பது தொடர்பில் குறிப்பிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக தண்டனைச்சீட்டில் குறிப்பிடப்படும் இலக்கத்தை அதன் மறு பக்கத்தில் உள்ள தண்டனைப்பட்டியலில் இலகுவில் அறிந்துகொள்ளமுடியும்.

போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்தி சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மற்றும் பொலிஸ் அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலை தொடர்ந்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவால் இதனை நடைமுறைப்படுத்தும் வகையில் அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது, என்றுள்ளது. (ஒ.5)

## வாக்கெண்ணும்...

கிழமை தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்படவுள்ளது. இதுவரை காலமும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டிருந்தாலும், இம்முறை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் வைத்துக் கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதே போன்று, தேர்தல் வாக்கெண்ணும் பணியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலேயே இடம்பெறவுள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலிலிருந்து, அதன் பின்னர் இடம்பெற்ற சகல தேர்தல்களுக்குமான வாக்கெண்ணும் பணிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலேயே இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் நினைவுப் பிரார்த்தனையும்



திருமதி
**இராசலிங்கம் சரஸ்வதி**

தோற்றம் 18.08.1940

மறைவு 25.09.2018

திதி:- 14.10.2019

கடந்த 25.09.2018 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி இராசலிங்கம் சரஸ்வதி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் இன்று (14.10.2019) திங்கட்கிழமை எமது இல்லத்தில் இடம்பெற இருப்பதால் அந்நிகழ்வுக்கு அனைவரையும் குடும்பசகிதம் வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

இல.14, [illegible]ரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(CS/286951)(11.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடீஸ்வர கப்ருக
சீட்டிழுப்பு வாரம்: 506
திகதி: 2019 ஒக்டோ. 11
வர்ணம்: பச்சை வெள்ளி
Q 28 46 62 80
வாசி දුකස 7 9 4 7 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 143,346,668/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 13.10.2019 | வெற்றி வாரம் 2646 | வர்ணம் ஊதா
கன்னி
வெற்றி இலக்கங்கள் 01 14 38 43
திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 082, 202/=
14.10.2019 ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 760
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.10.13
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,946,495/-
வெற்றி இலக்கங்கள் 07 08 42 67 R
விசேட வெற்றி இல. 9769
தொலைபேசி: 0112 333 546-47

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1056
சீட்டிழுப்பு திகதி 2019.10.12 சனிக்கிழமை
J 02 25 45 74
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இருபாலை மக்கள் நலன் காக்கும் பிரிவு - கோப்பாய்
**வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் - 2019**
மேற்படி எமது அமைப்பின் பொதுச்சபைக் கூட்டமும் நிர்வாக தெரிவும் அடுத்த மாதம் **03.11.2019 ஆம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு இருபாலை பழைய வீதியிலுள்ள நிறுவன மண்டபத்தில்** நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொதுச்சபை உறுப்பினர்கள் நலன் விரும்பிகள் கலந்துகொள்ளுமாறு அழைத்து நிற்கின்றோம்.
**077 968 8470**
நிர்வாக சபை சார்பாக
தி.உமாசங்கர்
செயலாளர்,
(cs:28693) (13.17)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்


அல்வாய் தெற்கு (ஓடை) அல்வாயைச் சேர்ந்த யாழ்.நீதிமன்ற சமூக சீர்திருத்த அதிகாரியும், அல்வாய் வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான பரிபாலனசபை உறுப்பினரும், அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலைய ஆலோசகருமான
**திரு. கந்தசாமி சாரங்கன்**
அவர்கள் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பரிபாலன சபையினர்,
அல்வாய் வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.

10 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் பாராட்டு வாழ்த்தும்

மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிசன் வித்தியாலயத்தில் கல்வி கற்று 2019 ஆம் ஆண்டு தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் **176 புள்ளிகளைப்** பெற்ற எமது மகள்
**கோகிலன் - மதுசிகா**
அவர்களை பாராட்டுவதுடன் அவரை கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம். அத்துடன் இன்று 14.10.2019 10 ஆவது பிறந்தநாளைகாணும் அவரை பல்லாண்டுகாலம் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.
மட்டுவில் மத்தி, சிவன்கோவிலடி, சாவகச்சேரி
வாழ்த்துவோர்
அம்மா, அப்பா, தம்பி மற்றும் உறவினர்கள்

# புலிகள் போன்று கட்டமைக்கப்பட்ட ராணுவம் மீண்டும் உருவாகாது

## அநுரகுமார திட்டவட்டம்



கொழும்பு, ஒக். 14

விடுதலைப் புலிகள் அமைப்பு போன்றதொரு கட்டமைக்கப்பட்ட இராணுவம் மீண்டும் உருவாகாது. வடக்கிலுள்ள தாய்மார்கள் மீண்டும் ஒரு போருக்காகவே தமது பிள்ளைகளை வளர்க்கின்றார்கள் என்ற தவறானதொரு எண்ணம் தெற்கிலுள்ள மக்கள் மத்தியில் பரப்பப்படுகின்றது. இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் அரச தலைவர் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

தலவத்துகொடவில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற சட்டத்தரணிகளுடனான சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டிலிருக்கும் சட்டம் சாதாரண மக்கள் மீது மாத்திரமே பாய்கின்றது. இதுவரை இருந்த ஆட்சியாளர்கள் சகலரும் சட்டத்தை மீறியே செயற்பட்டுள்ளனர்.


தேசிய பாதுகாப்பு தொடர்பாக அதிகளவில் பேசப்பட்டாலும் நாட்டில் காணப்படும் பாதுகாப்பற்ற தன்மையை கருத்திற்கொண்டுதான் பாதுகாப்பு கட்டமைப்பும் உருவாக்கப்பட வேண்டும்.

போர் நடந்த காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பானது, தமக்கான சுய ஆட்சி கொண்ட பிரதேச, தரைப்படை, வான்படை, கடற்படை என்பவற்றுடன் இலங்கை இராணுவத்தை எதிர்கொள்ளக் கூடிய வகையிலான இராணுவ கட்டமைப்பாக உருவெடுத்திருந்தது.

மேற்படி அமைப்பொன்று மீண்டும் இலங்கையில் உருவாகுவதற்கான எந்தவொரு சாத்தியமும் இல்லை. வடக்கில் தொடர்ச்சியாக போர் இருக்கும் என்றும் வடக்கிலுள்ள தாய்மார்கள் போருக்காகவே தமது பிள்ளைகளை ஆளாக்குகிறார்கள் என்றும் தவறானதொரு எண்ணக்கரு தெற்கிலுள்ள மக்கள் மத்தியில் பரப்படுகின்றது.

போரால் வடக்குக்கே அதிக பாதிப்பு ஏற்பட்டதால் தெற்கில் போர் ஒன்று ஏற்பட வேண்டும் என்று கருதும் அளவுக்கு கூட வடக்கில் உள்ள மக்கள் போர் ஏற்படுவதை விரும்பவில்லை - என்றார். (ஒ.5)

# ஒற்றுமை



இரவு நேரம். மலையோரத்தில் அழகான குடிசை வீடு. அந்த வீட்டில் எண்ணெய் விளக்கு சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தது. அந்த விளக்கால் அந்த இடமே நல்ல வெளிச்சமாக இருந்தது.

அந்த விளக்கைச் சுற்றி விட்டில் பூச்சிகளும் சிறு சிறுவண்டுகளும்பறந்துகொண்டிருந்தன. விளக்குப்பிரகாசாக எரிந்து கொண்டிருந்தது.

அப்போது அங்கு பூனை வந்தது.

''விளக்கே நீ சுடர் விட்டு எரிவதால் தான் இந்த இடமேவெளிச்சமாக இருக்கிறது. இதற்கு யார் காரணம்?" என்று கேட்க, விளக்குப் பக்கத்தில் இருந்த தீப்பெட்டிசொன்னது

"நான் தான் காரணம். நான் தான் இந்த விளக்கைப் பற்றவைத்தேன்" என்றது.

"இல்லை. இல்லை. விளக்கு எரிய நான் தான் காரணம், ஏனென்றால் நான் தான் விளக்குளியஎண்ணெய்யை இழுத்து மேலே கொடுக்கிறேன" என்றது விளக்குதிரி.

இதைக்கவனித்தஎண்ணெய் சொன்னது,

''விளக்கு எரிய முக்கிய பொருளே எண்ணெய்தான். எனவே விளக்கு எரிய நான் தான் காரணம்" என்றது.

''இவர்கள் எல்லோரையும் தாங்கி நிற்பது நான் தான். எனவே விளக்கு எரிய நான் தான் காரணம்'' என்றது குடுவை.

எல்லோரும் விளக்கு எரிய நான் தான் காரணம். நான் தான் காரணம் என்று சொல்ல, பூனைக்கு ஒரே குழப்பமாக இருந்தது.

இதையெல்லாம் மரத்தின் மீதிருந்து பார்த்துக் கொண்டிருந்த ஆந்தை சொன்னது,


''பூனையே நீ நாளைக்கு வா. தீப்பெட்டி, விளக்குத் திரி, எண்ணெய், குடுவை இவர்களில் விளக்குளிய யார் காரணம் என்று சொல்கிறேன்" என்றது.

மறுநாள் காலை விளக்கு அணைக்கப் பட்டது. அந்தவீட்டுக்காரர் விளக்கை தனிதனியாக கழற்றி துடைத்து காய வைத்தார். ஆந்தையும் பூனையும் வந்தன. தனிதனியாக இருந்த தீப்பெட்டி, விளக்கு திரி, எண்ணெய், குடுவை இவற்றை பார்த்து ஆந்தை சொன்னது,

''உங்களில் யாரால் தனியாக விளக்கை எரிய வைக்க முடியுமோ. அவங்க முன்னாடி வரலாம்' என்று சொல்ல நான்கு பேரும் திரு திருவென முழித்தனர். ''நீங்கள் நான்கு பேரும் ஒற்றுமையாக இருந்தால் தான் விளக்கு எரியும். உங்களில் ஒருவர் இல்லையென்றால் கூட விளக்கு எரியாது" என்றது ஆந்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் முன்னேற்றத்திற்கு கல்வித்தகைமை ஓர் தடையாக உள்ளதா?



**MBA**
**BBA**
**B.Sc**

போட்டி மிகுந்த தொழிற்சந்தையை வெற்றி கொள்வதற்கு உங்கள் அனுபவத்தினையும் கல்வித் தகைமைகளையும் அடிப்படையாகக் கொண்டு நீங்கள் ஓர் பட்டதாரி ஆவதற்கான வாய்ப்பினை IIS வழங்குகின்றது.

ஆர்வமுள்ள மாணவர்களுக்கான நேர்முகத்தேர்வும் அனுமதிகள் தொடர்பான ஆலோசனைகளும் பல்கலைக்கழக பிரதிநிதிகளால் 19/10/2019 அன்று காலை 10:00 மணி முதல் மதியம் 2:00 மணி வரை இல 441 மணிக்கூட்டு கோபுர வீதியில்[பெருமாள் கோவிலுக்கு அருகில்] நடைபெறவுள்ளதால் தங்கள் பதிவுகளை 14/10/2019 திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலதிக விபரங்களுக்கு
**071 777 4666**
**021 222 8060**

**IIS CITY CAMPUS**
**# 441, Clock Tower Road, Jaffna.**
TEL :- 021 222 8060
iis.edu.lk

## நீங்கா நினைவில் பன்னிரண்டு ஆண்டுகள்

கண் மகிழ
03 . 04 . 1978



மண் நெகிழ
27 . 09 . 2007

### அமரர் கோபாலபிள்ளை சுபாஸ்கரன் (சுபாஸ்)

திதி:– பிரதமை
(14.10.2019)



ஆண்டுகள் பன்னிரண்டு கடந்தாலும்
ஆறிடுமோ உந்தன் பிரிவுத்துயர்

கதிரவன் மலரும் காலைப்பொழுதில்
கயவன் உன்னைப் பறித்த அந்தக்கணப்பொழுதில்
காற்றலையில் கலந்து வந்தசெய்தி
மறுபால் உள்ளதடா
கருவிழி மூடி நீள்துயில் கொண்டவனே
கலங்குகிறது உன்னைத் தேடி எம் விழிகள்

என்றும் உந்தன் நினைவுகளுடன்

தற்காலிக முகவரி :
இந்துமகளிர் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(CS-28698)(11.17)

குடும்பத்தினர்.
(நடராஜா வீதி, வேலணை மேற்கு,
வேலணை - 08)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




சுரேஸ்குமார் ஜெயரூபி தம்பதியரின்
செல்வப் புதல்வியும்
பருத்தித்துறை யா/ வட இந்து ஆரம்ப பாடசாலை
மாணவியுமான

### சு.கேம்சிதா

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில்
பரீட்சையில் 171 புள்ளிகளைப் பெற்று
திறமைச் சித்தியடைந்ததையிட்டு மனதாரப் பாராட்டு
வதுடன் மேன் மேலும் பரீட்சைகளில் சித்திபெற்று
பல பதவிகளைப் பெறவேண்டுமென நாராயணப்
பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தாத்தா | - இரகுநாதன் | பெரியப்பா | - நந்தகுமார் | சித்தப்பா | - ரேகன் |
| அம்மம்மா | - அன்னராணி | பெரியம்மா | - மோகனாதேவி | சித்தி | - ஜெயந்தி |
| அப்பா | - சுரேஸ்குமார் | அண்ணா | - சுகேஸ் | தம்பி | - கார்த்திகன் |
| அம்மா | - ஜெயரூபி | அண்ணா | - நிகேஸ் | தங்கை | - றன்சிகா |
| தம்பி | - திவிஸ் | தங்கை | - சப்தஜி | | |

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
25 . 12 . 1947



மறைவு
14 . 09 . 2019

கடந்த 14.09.2019 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் தம்பிஐயா மனோகரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 12.10.2019 சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (14.10.2019) திங்கட்கிழமை காலை எமது இல்லத்தில் இடம்பெற்று தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் நீர்வேலி திருமுருகன் மணிமண்டபத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மேற்படி நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தசுவாமி கோயிலடி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

குடும்பத்தினர்.

(CS 28595)(14.17)

## மரண அறிவித்தல்

### தம்பிராசா சின்னராசா



வடமராட்சி கெருடாவில் தொண்டமானாற்றைச் சேர்ந்த தம்பிராசா சின்னராசா 12.10.2019 காலமானார்.

அன்னார் சின்னராசா சவுந்தர நாயகியின் அன்புக் கணவரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.10.2019 புதன்கிழமை நடைபெறும்.

தகவல் : குடும்பத்தினர்.

3 ஆம் சந்தி, கெருடாவில் தெற்கு,
தொண்டமானாறு.

**0772012858 (கஜீபன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சேனாதிராசா இராசம்மா**

திதி 14.10.2019

மலர்வு 30.10.1930
உதிர்வு 26.09.2018

நீங்கள் தந்த நீங்கா நினைவுகளை
எம் இறுதி மூச்சுவரை சுமந்து
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

(CS/28598)

"சாய் இல்லம்"
கரவெட்டி மத்தி. கரவெட்டி.

**குடும்பத்தினர்.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆசிரியர்
**தங்கராசா நிமலன்**
**Dip in Teach, B.A. (Hons)**

எமது நண்பன் திரு.தங்கராசா நிமலன் அவர்கள் அதிபர் சேவை தரம் III க்கு நியமனம் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் பல உயர்வுகள் பெற்றுவாழ மனதாரப் பாராட்டுகின்றோம்.

**நண்பர்கள்**
**ஹாட்லிக் கல்லூரி**
(A/L 1997)

## சுப்பர் சிங்கர் இசை நிகழ்ச்சி - யாழ்ப்பாணம், வவுனியா



**ரோஷினி செந்தில் - ராஜலக்ஸ்மி அனிருத்**

காலம் - ஒக்டோபர் 13ம் திகதி ஞாயிறு மாலை 3.30
இடம் - யாழ்.கே.கே.எஸ்.வீதி (பூநாறி மடம்). செல்வா பெலஸ் (A/C)

காலம் - ஒக்டோபர் 14ம் திகதி திங்கள் மாலை 6.30
இடம் - வவுனியா நகர சபை கலாசார மண்டபம்

டிக்கட் 500/=,1000/= நிகழ்ச்சி அன்று மண்டபவாசலிலும் பெற்றுக்கொள்ளலாம்
வவுனியா - தொடர்புகளுக்கு - 077 311 1245 / 070 356 8333
யாழ் - தொடர்புகளுக்கு - 077 4718 969 / 071 381 5114
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு K.T. பிரசாத்

(C-7794)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

DMI COMPUTER EDUCATION
TVEC Reg.No.:P25/0056

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க யாழில் பெருமளவு மாணவர்கள் தெரிவு செய்யும்
**Diploma in English**
**Spoken English**

- Dip.in Information Technology
- Dip.in Office Automation
- Dip.in PC Application
- Dip.in Microsoft Office
- Dip.in Web Designing
- Hardware,Mulitmedia, Auto CAD,Java,C++,PHP
- NVQ COURSES( ICT-Full Time,CAA Full/Part Time)

**IT & ENGLISH**
**DUAL DIPLOMA**



**NVQ Courses**
அரச சான்றிதழ்கள்
- ICT (Full Time- 6 Months)
- CAA (Full Time- 3 Months)
- CAA (Part Time- 6 Months)

பதிவுகளினை 15/10/2019 க்கு முன்னர் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்

**சிங்கள வகுப்புக்கள் ஆரம்பம்**
Sinhala Medium இல் கற்ற பட்டதாரி ஆசிரியரால் வகுப்புக்கள் அனைத்து கிளைகளிலும் நடாத்தப்படுகிறது.

# DMI COMPUTER EDUCATION

**யாழ்ப்பாணம்** No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403

| | | | | |
|---|---|---|---|---|
| M.M.V. வீதி, | கண்டி வீதி, (HNB வங்கி அருகாமை) | No.130, கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகாமை) | | A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) |
| **நெல்லியடி** | **சாவகச்சேரி** | **சுன்னாகம்** | **சீரணிச்சந்தி சண்டிலிப்பாய்** | **கிளிநொச்சி** |
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |

## வடமாகாண தொழில் முயற்சியாளர் விருது – 2019

NEDA · CCIY

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றமும் (Chamber of Commerce and Industries of Yarlpanam - CCIY). வணிக அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையும் (National Enterprise Development Authority- NEDA) இணைந்து வருடாந்தம் நடாத்தும் வடமாகாண தொழில் முயற்சியாளர் விருது - 2019ஆம் ஆண்டிற்கான விண்ணப் பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**விருதுகளுக்கான மாவட்டங்கள்**

யாழ்ப்பாணம். கிளிநொச்சி. முல்லைத்தீவு. வவுனியா. மன்னார்

**விருதுகளுக்கான தொழில் முயற்சி பிரிவுகள்**

1. உற்பத்தித் துறை
2. விவசாயம். கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்வளங்கள்
3. விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறை
4. சேவைத்துறை

**வழங்கப்படவுள்ள விருதுகள்**

அதிசிறந்த தொழில்முயற்சியாளர் விருது (வடமாகாண ரீதியாக)-01
சிறந்த தொழில்முயற்சியாளருக்கான விருதுகள் -12 (அட்டவணையிலுள்ளவாறாக)

| தொழில்முயற்சி வகை | நுண்ணியது | சிறியது | நடுத்தரம் | பெரியது |
|---|---|---|---|---|
| உற்பத்தி துறை | 01 | 01 | 01 | 01 |
| விவசாயம் கால்நடை வளர்ப்பு மீன்வளங்கள் | 01 | 01 | 01 | 01 |
| விருந்தோம்பல் சுற்றுலா மற்றும் சேவைத்துறை | 01 | 01 | 01 | 01 |

**விசேட விருதுகள் - 06**

சிறப்பாக செயலாற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு இவை வழங்கப்படவுள்ளன.
- சுற்றுச்சூழலுடன் ஒத்திசைவாக இயங்குகின்ற தொழில்முயற்சி
- சிறந்த ஏற்றுமதியாளர்
- சிறந்த உற்பத்திறனுடன் இயங்கும் தொழில்முயற்சி
- சிறந்த புத்தாக்க தொழில்முயற்சி
- சிறந்த பெறுதிமதிசேர் உற்பத்தி தொழில்முயற்சி
- சிறந்த சக்திவளப்பாவனைக்கான தொழில்முயற்சி

**தகைமை**
- வடமாகாணத்தினை சார்ந்த பதிவு செய்யப்பட்ட தனியார்துறை தொழில்நிறுவனங்கள் (வடமாகாணத்தில் கிளைகளை கொண்டுள்ள தேசிய நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுத்துறை நிறுவனங்கள் விண்ணப்பிக்கமுடியாது)
- சட்டரீதியாக பதிவுசெய்யப்பட்டிருத்தல் அவசியம் (பிரதேச செயலகம் அல்லது கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்)

**விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கும் இடங்கள்**

01. யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம், இல.106. பலாலி வீதி. கந்தர்மடம். யாழ்ப்பாணம்.
தொலைபேசி – 0212226609
02. வடமாகாணத்திலுள்ள பிரதேச செயலகங்களிலுள்ள தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் (NEDA)
03. வவுனியா மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய மன்றம். சத்தியாகட்டடம் இல.57. 01 ஆம் குறுக்கு வீதி.வவுனியா. தொலைபேசி - 0242224313
04. மன்னார் மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய மன்றம். இல.48. மூர் வீதி. மன்னார். தொலைபேசி – 0773949598

**விண்ணப்ப முடிவுத்திகதி 30.11.2019**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை உரிய பிரதி ஆவணங்களுடன் **தலைவர், யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம், இல: 106, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

அனைத்து விருதுகள் தொடர்பாகவும் வெளியக நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதாகும். விருது வழங்கும் நிகழ்விற்கு ஆகக்குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்பு வெற்றியாளர்கள் அறிவிக்கப்படுவார்கள். விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் மார்கழி மாதம் 2019 யாழ்ப்பாணத்தில் மிகவும் சிறப்பாக நடைபெறும்.

**தகவல்**
**தலைவர், யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம்.**
**இல: 106, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

## மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு
## பெறுகைகளுக்கான அறிவித்தல்
## முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கான ANAESTHESIA MACHINE பெறுகை

01. தலைவர். பிராந்திய பெறுகைக் குழுவினால் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு பொருட்கள் வழங்குதலும் விநியோக சேவை மேற்கொள்வதற்குமான தகைமையுள்ள விலைமனுதாரர் களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப்பத்திரம் கோரப்படுகின்றது.
**தேவையான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.**

| இல | பொருள் விபரம் | தொகை | மதிப்பீட்டுக் கிரயம் Mn. Rs. | பிணைப் பணம் Rs. | பிணைப் பணக்காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | ANAESTHESIA MACHINE | 01 | 5.2 | 52,000 | 05.03.2020 வரை |

02. பெறுகை நடைமுறை தேசிய விலைக்கேள்வி போட்டி முறையில் அமையும்.
03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கணக்காளர். மாவட்ட பொது வைத்தியசாலை. முல்லைத்தீவு எனும் முகவரியில் (021-206-1423. தொலைநகல் -021-206-1423. மின்னஞ்சல்: - dghmullaitivu@gmail.com ) பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இம் முகவரியிலே வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.30 மணி வரை பரிசீலிக்க முடியும்.
04. ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை. வேலை நாட்களில் கீழ்க் குறிப்பிட்ட முகவரியில் 15 ஒக்ரோபர். 2019 ஆம் திகதி தொடக்கம் 04 நவம்பர் 2019 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.30 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் ரூபா 2.500 தொகையினை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
05. பெறுகை ஆவணங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட முகவரியிலுள்ள கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில 06 நவம்பர் 2019ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
06. இவ் விலைமனுக் கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனுக் கோரலை ரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழுத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்திய கலாநிதி. செ.கஜன்**
**தலைவர்.**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு**

(IN 11454)(4.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதற்கு...?

ஒற்றுமைக்கு.......காகம்
அமைதிக்கு...........புறா
உழைப்புக்கு...........எறும்பு
சுறுசுறுப்புக்கு..........தேனீ
தந்திரத்துக்கு............நரி
பேச்சுக்கு....................கிளி
பாட்டுக்கு.....................குயில்
ஆடலுக்கு...................மயில்
எதற்கு மனிதன்...............!!



படித்ததில் பிடித்தது



# சிரிக்க மட்டும் அல்ல சிந்திக்கவும்!

ஒருவருக்குத் திடீர் சந்தேகம் வந்தது தன்னுடைய மனைவிக்குக் காது கேட்கவில்லையோ ?
ஆனால் இதை மனைவியிடம் நேரடியாகக் கேட்க அவருக்குத் தயக்கம். தயக்கம் என்ன பயம் தான்.
இந்த விடயத்தை அவரின் குடும்ப மருத்துவரிடம் சொன்னார். அதற்கு அவர் ஒரு எளிய யோசனை சொன்னார் .
இருபது அடி தூரத்தில் இருந்து மனைவியிடம் ஏதாவது பேசிப் பாருங்கள், மனைவியின் காதில் விழவில்லை எனில் சற்று நெருங்கி பதினைந்து அடி தூரத்தில் இருந்துப் பேசுங்கள், பின் பத்து , ஐந்து இப்படி குறைத்துக் கொண்டே நெருங்கிச் சென்று பேசுங்கள்.
எத்தனை அடி தூரத்தில் இருந்து பேசினால் மனைவிக்குக் காதுக் கேட்கவில்லை எனத் தெரிந்தால் அதற்கேற்றபடி சிகிச்சை அளிக்கலாம் என மருத்துவர் சொன்னார். அதைக் கேட்டவுடன் அந்தக் கணவனுக்கு ஒரே குஷி.
உற்சாகமாக வீடு திரும்பிய அவர் வீட்டு வாசலில் இருந்தபடியே உள்ளிருந்த மனைவியிடம் இன்று என்ன சமையல்? எனக் கேட்டார்.
பதில் எதுவும் இல்லை. பின் வீட்டு வரவேற்பறையில் இருந்து அதே கேள்வியைக் கேட்டார். அதற்கும் பதில் இல்லை , ஹாலில் இருந்து கேட்டார் , சமையலறை வாசலில் இருந்தும் மீண்டும் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டார். மனைவியிடமிருந்து பதிலே இல்லை. போச்சு இரண்டு ஸ்பீக்கரும் அவுட் ஆகிவிட்டது போல என்று மனதில் உறுதி செய்து விட்டார்.
கடைசி வாய்ப்பாக மனைவியின் காது அருகே சென்றுச் சத்தமாக "இன்றைக்கு என்ன சமையல் ?" எனக் கேட்டார்.
காதில் ஏதோ குண்டு வெடித்தது போல் இருக்கவே அவர் மனைவி அவரைக் கோபமாக திரும்பிப் பார்த்து, "ஏன் இப்படி கத்துறீங்க , நீங்களும் வாசல் கேட்டிலிருந்து , வரவேற்பறையில் இருந்து , ஹாலில் இருந்து , சமைலறை வாசலில் இருந்து கேட்க , கேட்க நானும் முருங்கைக்காய் சாம்பார் , உருளைக் கிழங்கு பொரியல்னு சொல்லிக்கிட்டே இருந்தேனே. அது உங்கள் காதில் விழவில்லையா ? காதுல என்ன பஞ்சு மூட்டையா வைச்சிருக்கீங்க எனப் பொரிந்துத் தள்ளிவிட்டாள்..."
இப்போது தெரிகிறதா...
பிரச்சினை யார் காதில் என்பது ?
**கதையின் நீதி :**
இப்படித் தான் பலர் பிரச்சினையை எம்மிடம் வைத்துக் கொண்டு அது பிறரிடம் இருப்பதாக நாம் நினைத்து வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம்...

**இந்தப் பதிவு சிரிக்க மட்டும் அல்ல சிந்திக்கவும் கூடத் தான்**

ஆர்வக்கோளாறு™ @motheen_farook
சூழ்நிலையும் வாய்ப்புகளும் மட்டுமே பெரும்பாலும் வாழ்க்கையை தீர்மானிக்கிறது .
முயற்சி மட்டுமே வெற்றியை நிர்ணயிக்கிறது ..!!



# விஜய் தேவரகொண்டாவுடன் நடிக்க ஆசை- ரகுல் பிரீத் சிங்



சூர்யாவுடன் ரகுல் பிரீத் சிங் நடித்த 'என்.ஜி.கே' படம் கடந்த மே மாதம் திரைக்கு வந்தது. தற்போது கமல்ஹாசனுடன் 'இந்தியன்-2' படத்திலும், சிவகார்த்திகேயன் படத்திலும் நடித்து வருகிறார். ரகுல் பிரீத் சிங் அளித்த பேட்டி வருமாறு:
"நான் நடிக்கும் படங்களின் எண்ணிக்கை தற்போது குறைந்துள்ளது. தொடர்ந்து தோல்வி படங்களில் நடித்ததால்தான் பட வாய்ப்புகள் இல்லை என்று சிலர் பேசுகிறார்கள். சினிமாவுக்கு வந்த கொஞ்ச காலத்திலேயே பெரிய நட்சத்திர அந்தஸ்துக்கு எனக்குக் கிடைத்து விட்டது.
வந்த வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்தினேன். அதனால் தோல்வி படங்களிலும் நான் இருக்க வேண்டியது ஆகிவிட்டது. இப்போது கதைகள் தேர்வு செய்வதில் பக்குவமும், முதிர்ச்சியும் வந்து இருக்கிறது.
சும்மா நான்கு பாடல் காட்சிகளில் மட்டும் வந்து விட்டு போவதில் எனக்கு விருப்பம் இல்லை. நல்ல கதைகளைத் தேர்வு செய்து நடிக்கிறேன். தெலுங்கில் அனைத்து முன்னணி கதாநாயகர்களுடன் ஜோடியாக நடித்துள்ளேன். தமிழிலும் பெரிய கதாநாயகர்களுக்கு ஜோடியாக நடித்து விட்டேன். இந்தியில் ரன்வீர் சிங்குடனும், தெலுங்கில் விஜய் தேவரகொண்டாவுடனும் சேர்ந்து நடிக்க ஆசையாக இருக்கிறது."




நானாகத் தேடிவரும் போது
விலகி செல்கிறாய்.......

நீயாகத் தேடிவரும் போது
விரும்பி ஏற்க
சொல்கிறாய்.....

**" தூக்கம் "**





**தவறான பாதையில் வேகமாக செல்வதை விட, சரியான பாதையில் மெதுவாக செல்லுங்கள். வாழ்க்கையை புரிந்து கொள்ளலாம்.!**

twitter

வாழ்க்கையில்
'பொறுமை'
உள்ளவனே
'பெரும்பாக்கியசாலி'

வேர் மறைந்து தான் இருக்கும்,
ஆனால் ஆலமரத்தையே தாங்கி
நிற்கும்..
சிலரின் உழைப்பை போல.

அழகில்லா உருவங்களை ஒதுக்காதீர்கள்!
அதற்குள்ளே ஒரு ஆன்மா
தவித்துக்கொண்டிருக்கிறது.

அழகான உருவங்களுக்கு ஏங்காதீர்கள்!
அங்கே ஆணவம் தலைதூக்கி
நிற்கிறது.......!!

**தினசரி வாழ்க்கையில்
பல கஷ்டங்களை
சந்திக்கவில்லை என்றால்
பல விடயங்கள் கடசி வரை தெரியாமல்
போய்விடும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர் எம்.அரவிந்தன்

# வீதி விபத்துக்களை தவிர்ப்போம்...!




இன்றைய கால நகர்வில் வீதி விபத்துக் காரணமாக ஏற்படுகின்ற உயிரிழப்புக்களின் எண்ணிக்கையானது அதிகரித்துச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. நாளாந்தம் பத்திரிகைகயை வாசிக்கும் போது வீதி விபத்து தொடர்பான ஒரு செய்தியையாவது காண முடிகிறது. அண்மையில் 6 வயதுடைய பச்சிளம் குழந்தை ஒன்று வீதி விபத்தில் பரிதாபமாக உயிரிழந்து போன சம்பவம், வீதி விபத்துக்கள் குறித்த கரிசணையை எம் மத்தியில் ஏற்படுத்தி உள்ளது. பச்சிளம் பாலகனிலிருந்து தள்ளாத வயதுடைய வயோதிபர் வரை அனைவரும் வீதி விபத்து அசம்பாவிதங்களில் சிக்கித் தவிப்பதைக் காணமுடிகின்றது. கடந்து போன முப்பதாண்டு காலப் போரினால் நாம் இழந்து போன உயிர்களை விடவும் வீதி விபத்து அசம்பாவிதங்களினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது அதிகமாகக் காணப்படுகிறது என்ற தகவல் தரவை அண்மையை புள்ளி விவரமொன்று சுட்டிக்காட்டி யுள்ளது.

### அதிகரித்த வாகனப் பயன்பாடு

அதிகரித்த வாகனங்களின் பயன்பாடு, வீதி ஒழுங்குகளை ஒழுகி நடக்காத மனப்பாங்கு, வீதி ஒழுங்கு தொடர்பான கட்டுப்பாடுகளில் போதிய இறுக்கமின்மை மற்றும் அதிகரித்த மதுப்பாவனை போன்றனவே இதற்கு முதன்மைக் காரணங்களாகும். வீதி ஒழுங்கு நடைமுறைகளை மதிக்காது தான் தோன்றித் தனமாக வாகனங்களைச் செலுத்தும் போக்கு இன்று சாதாரண காட்சிநிலையாகிவிட்டது. பாதசாரிகள் கடந்து செல்வதற்குரிய மஞ்சள் கடவையானது என்ன நோக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பில் அநேகமான சாரதிகள் போதிய அறிவின்மையோடு இருக்கின்றனர். மருத்துவமனைகள், பாடசாலைகள் போன்றவற்றுக்கு முன்பாக உள்ள பாதசாரிக் கடவைகளிலும் கூட பய உணர்வுடனேயே பயணிக்க வேண்டியுள்ளது.


எந்தவொரு வேலையோ, அவசரமான காரியமோ இல்லாதபோதிலும் விரைவாக ஒலி எழுப்பியவாறு வாகனங்களை செலுத்திச் செல்லும் போக்கு இன்று நாகரிகமாகிவிட்டது. எம்மவர்களுக்கு தொடருந்து வரும் வேளையில் பாதுகாப்புத் தடை போடப்பட்டிருந்தால் கூட அதனை மீறி ஓடிச் செல்கின்ற தன்மையே மேலோங்கி இருக்கின்றது. இவ்வாறு வேகமுற வாகனங்களைச் செலுத்துவோர் வேலை அல்லது காரண நிமித்தம் செல்பவர்கள் அல்லர். மிகச் சிலரே இவ்வாறான நோக்க வெளியின் பால் வேகமாக வாகனத்தைச் செலுத்துபவர்களாக இருக்கின்றனர். இதை நினைக்கும் போது "நாய்க்கு வேலையில்லை. ஆனால் நடக்க நேரமில்லை" என்ற பழமொழி தான் ஞாபகம் வருகிறது.

### பேருந்துகளின் போட்டித் தன்மை

வீதி விபத்துகள் இடம்பெறுவதற்கான முக்கிய காரணங்களை எடுத்து நோக்கின் அரச மற்றும் தனியார் பேருந்துக்களின் போட்டிச் சவாரியும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. இவர்களின் இத்தகு போக்கின் செயல்வெளி காவு கொண்ட உயிர்கள் எத்தனை? ஐந்து வயது பாலகன் ஒருவனின் உயிர் பறிபோய் சில மாதங்களே ஆன நிலையில், மிக அண்மையில் மருத்துவர் ஒருவரின் உயிரும் காவு கொள்ளப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவின் பின்னரும் இவர்களின் வெறிகொண்ட ஓட்டப் போட்டிநிறுத்தப்பட்டதாகதெரியவில்லை.

### போதைப் பாவனை

அடுத்து வீதி விபத்துக்கள் அதிகரித்துச் செல்வதற்கான மிக முக்கியமான காரணத்தை நோக்கின், அதிகரித்த மது மற்றும் போதைப் பொருள் பாவனை போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். மது அருந்திய நிலையில் வாகனங்களைச் செலுத்துவோரினால் பந்தாடப்பட்டு உயிரிழந்தோரின் எண்ணிக்கையே அதிகமாகக் காணப்படுகிறது. பதின்ம வயதுச் சிறுவர்களுக்கு நவீன வகையான மோட்டார் வாகனங்களைப் பெற்றோரும் உற்றோரும் வாங்கிக்




கொடுக்கின்றனர். அவர்களும் தலை கால் புரியாமல் 'புஷ்பக விமானத்தில் பறப்பது போன்று வாகனங்களைச் செலுத்துகின்றனர். இதனை அன்றாடம் அவதானம் கொள்ளமுடிகிறது.

### பயணிகள் குறித்து கரிசனை வேண்டும்

இவ்வாறான நடவடிக்ககள் ஊடே இந்தச் சிறுவர்கள் தமதுயிருக்கும் சாலையில் பயணிப்போரது உயிருக்கம் ஆபத்தினை விளைவிக்கின்றனர். ஆரம்ப காலங்களில் வெளிநாட்டிலிருந்து வருவோர் சிறுவர்களுக்கும் இளையோருக்கும் கல்விசார் பொருள்களையே குறிப்பாக புத்தகங்கள் வழங்குவதை தங்களுடைய வழக்கமாக கொண்டிருந்தனர். ஆனால் இன்றைய கால ஓட்டத்தில் அநேகமானோர் நவீன வகை மாதிரியுடைய மோட்டார் வாகனங்கள் மற்றும் தேவைக்கு அதிகமான பணம் போன்றவற்றையே வழங்குகின்றனர்.

எங்கோ ஒரு மூலையில் ஒளிந்திருந்து மது அருந்திய காலங்கள் கடந்து மாமன், மச்சான், பெற்றோர் மற்றும் புதல்வர்கள் என அனைவரும் கூடியிருந்து குதூகலித்து அருந்திச் சுவைத்து திண்டாடும் சமூக வெளியிடையே நாம் அசைவுறுகிறோம். இது ஆபத்தான போக்கின் தொனிப்பு என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். நவீன தொடர்பு சாதனங்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களின் பாவனையும் விபத்துக்கள் இடம்பெறுவதற்கான செயற்கருவியாக அமைந்திருக்கின்றன. வாகனத்தை செலுத்தும் போது விதியைக் கடக்கும்போது கைபேசி அழைப்புக்களில் தமது கவனத்தை செலுத்தி உயிர் இழந்தோரின் எண்ணிக்கையும் அதிகமாகவே கணிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் ஐந்து வயதுப் பாலகனொருவனின் உயிர்காவு கொள்ளப்பட்ட பின்னர், நீதித்துறை வாகனப் போக்குவரத்துக் குறித்த கட்டுப்பாடுகளையும் நடைமுறைகளையும் எடுத்துரைத்திருந்தமை நோக்கப்பட வேண்டியது. "இனியொரு விதி செய்வோம்" என்ற வாசகத்தோடு விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இனிவரும் காலங்களில் வீதி விபத்துக்களைக் குறைத்து மனித உயிர்களின் பெறுமதியையும் மதிப்பையும் காப்பாற்றிட நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டளையாகக் காணப்படுகிறது.

### தீர்வு

வீதி ஒழுங்கு விதிகள் பற்றிய விழிப்புணர்வை பொது மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது மிக அவசியமாகும். மேலைத்தேய நாடுகளில் சிறுவயது முதலே வீதி ஒழுங்கு முறைகள் எடுத்துரைக்கப்படுகின்றன. அந்த நாடுகளில் இவ்வாறான பிரச்சினைகள் அரிதாகவே இடம்பெறுகின்றன. காவல்துறையினர் சனசமூக நிலையங்கள் பொதுசன அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் எனச் சகலரும் ஒன்றிணைந்து இதனை மேற்கொள்ள வேண்டும்.

பாடசாலைச் சிறுவர்களுக்குச் சிறுவயது முதலே வீதி ஒழுங்கு நடைமுறைகள் பற்றிய முழுமையான விளக்கத்தை ஏற்படுத்துவது மிக அவசியமாகும். இதனைக் கல்வியமைச்சு, கல்வித் திணைக்களம் மற்றும் பாடசாலைச் சமூகம் என்பன கருத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும். வீதி ஒழுங்கு நடைமுறைகளை மீறுவோர் மீது எந்தவித கரிசனையுமின்றி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனை மிக இறுக்கமாகக் கடைப்பிடிப்பதன் ஊடே வீதி விபத்துக்களைக் குறைத்துக் கொள்ள முடியும். மது மற்றும் போதைப் பாவனையோடு வாகனம் செலுத்துபவர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும். பதின்மவயது இளையோர்களுக்கு தேவையற்ற விதத்தில் மோட்டார் வாகனங்களைக் கொள்வனவு செய்து வழங்கும் செயற்பாட்டை நிறுத்துவது அவசியமாகும்.

அரச மற்றும் தனியார் பேருந்துகளின் போட்டிச் சவாரிக்கு முற்றுப் புள்ளிவைப்பது மிகவும் அவசியமாகும். நீதி மன்றத்தால் ஏற்கனவே விதிக்கப்பட்ட கட்டளையை இறுக்கமாகப் பின்பற்றுவது அவசியமாகும. வாகனச் சாரதிகளுக்கு வீதி ஒழுங்கு முறைகள் பற்றிய விளக்கங்களையும், அறிவுரைகளையும் குறிப்பிட்ட காலத்துக்கொருமுறை வழங்க வேண்டியது உரியதரப்புக்களின் கடமையாகும்.

பாதுகாப்பற்ற விதத்தில் வாகனங்களைப் பராமரிப்போரை இனம் கண்டு கொண்டு அவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டியதும் அவசியமாகும். குறிப்பாக ஒட்டோக்களின் பாவனையையும் போக்குவரத்து முறைகளையும் ஒழுங்குபடுத்த வேண்டும். வாகனங்களைச் செலுத்தும் போது, வீதியைக் கடக்கும்போதும் கைபேசி போன்ற இலத்திரனியல் உபகரணங்களைப் பயன்படுத்துவதைத் தடைசெய்ய வேண்டும். மோட்டார் வாகனங்களில் செல்லும் போது சிறுவர்கள் தலைக்கவசம் (கெல்மெட்) அணிவது கட்டாயமாக்கப்பட வேண்டும். பெற்றோர்கள் தாங்கள் தலைக்கவசம் அணிந்து கொள்வதைப் போன்று தமது பிள்ளைகளும் அணிவதை உறுதிப்படுத்தல் அவசியமாகும். இறுதியாக நாம் அனைவரும் சிந்தித்து ஒன்றிணைந்து செயற்படுவோமானால் வீதிவிபத்துக்களால் ஏற்படுகின்ற உயிரிழப்புக்களையும், அங்கவீனங்களையும் குறைத்துக் கொள்ள முடியும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# முன்பின் முரண்கள்

இலங்கை பௌத்த கேந்திர நிலையமாக மாற்றப்படும் என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசிய முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச. பௌத்த உயர்பீடங்களுடன் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பின்போது பன்னாட்டுப் பௌத்த பல்கலைக் கழகம் இலங்கையில் அமைக்கப்படுதல், பௌத்த கேந்திர நிலையமாக இலங்கை மாற்றப்படுதல் ஆகிய வாக்குறுதிகள் அவரால் வழங்கப்பட்டுள்ளன.

இதே அரச தலைவர் வேட்பாளர் தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுடனான சந்திப்பின்போது, சிறுபான்மை மக்கள் என்றுகூட ஓர் இனக்குழுமத்தை அடையாளமிடுவதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிவித்திருந்தார். அரச தலைவர் தேர்தலில் நான் வென்றால் இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் ஒரே வகையில் செயற்படும் திட்டங்களையே கொண்டுவரவுள்ளேன். எல்லோருக்கும் ஒரே நீதி என்பதே எனது கொள்கை. இனவாதரீதியான செயற்பாடுகளுக்கு நான் இடமளிக்கமாட்டேன் என்றும் ஆசிரியர்களிடத்தில் வலியுறுத்தியிருந்தார் அவர்.

இதுகாலும் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நகர்வுகள், பௌத்த பேரினவாதம் மேற்கொண்டுள்ள வரலாற்றுப் பதிவுகள் என்பவற்றை சீர்தூக்கிப் பார்த்தால் அரச தலைவர் வேட்பாளரின் கருத்துக்கள் இரண்டும் ஒன்றுடன் இன்னொன்று நெருங்கித் தொடர்புபடுகின்றன. அதேநேரம் முன்பின் முரணாகவும் அமைகின்றன என்பது கண்கூடு.

இலங்கையைப் பொறுத்தவரையில் பௌத்த பேரினவாதத்தின் இருப்பு சிறுபான்மை இனங்கள் நசுக்கப்படுவதிலேயே தங்கியுள்ளது என்பதுதான் எழுதப்படாத விதி. இதற்கு ஏராளமான சான்றுகள் சாட்சிகளாகக் கொட்டிக் கிடக்கின்றன. இதற்கு, தமிழர்களின் தீர்வுத் திட்டங்களுக்குப் போடப்பட்ட முட்டுக்கட்டைகள் முதல் அண்மையில் நீராவிடிப் பிள்ளையார் ஆலயத்தில் நீதிமன்ற உத்தரவுக்கு முரணாக, அதை அவமதித்து பௌத்த பிக்குவின் சடலம் எரியூட்டப்பட்டது வரை இடம்பெற்ற அனைத்தையும் ஒன்றன்பின் மற்றொன்றாக அடுக்கிக்கொண்டே போகலாம்.


நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தினதேரர், பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசாரதேரர் என்று பல்வேறு பிக்குகள் இன்று சிறுபான்மை மக்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளனர். இத்தகையவர்கள் நிறைந்துள்ள இந்த நாட்டில், இத்தகையவர்கள் அரசியலையும் அதன் எதிர்காலத்தையும் தீர்மானிக்கக்கூடியவர்களாக இருக்கும் இலங்கையில் சஜித்தின் கருத்து நகைப்பைத் தருகின்றன.

இலங்கை ஒரு பௌத்த நாடு என்ற அடிப்படையில் இத்தகைய அடக்குமுறைகள் சிறுபான்மையினர் மீது கட்டவிழ்த்து விடப்படுகின்றதென்றால் பௌத்தத்துக்கே கேந்திர நிலையமாக இந்த நாடு மாறினால் நிலமை இன்னும் இன்னும் மோசமாகவே அமையும் என்பது வெள்ளிடைமலை. அத்தகையதொரு நிலையில் 'அனைவருக்கும் ஒரே சட்டம் ஒரே நீதி' என்று சஜித் வெளிப்படுத்தியுள்ள வார்த்தைகள் வெறும் தேர்தல் பரப்புரைகளே அன்றி வேறொன்றும் இல்லை.

வாக்குகள் தேவைதான். வாக்குவங்கிகள் பெருக்கப்படுதல் அவசியம்தான். ஒவ்வொரு வேட்பாளரும் இதையே விரும்புவார். அதற்காக வரலாற்றை மாற்றமுடியுமா?. இலங்கை பௌத்த கேந்திர நிலையமாவது சாத்தியம். ஆனால் அதன் பின்னர் 'அனைவருக்கும் ஒரே சட்டம் ஒரே நீதி' என்பது சாத்தியமில்லை. தமிழர்கள் இதை நன்கு அறிவார்கள் அரசதலைவர் வேட்பாளரே.

# கென்னடி – சே குவேரா இளம் அரசியல் பிம்பம்

**கியூபாவின் சே குவேரா படுகொலை செய்யப்பட்ட நாள் ஒக்டோபர் 9ஆம் திகதி. அமெரிக்காவின் முன்னாள் அதிபர் கென்னடி படுகொலை செய்யப்பட்ட நாள் நவம்பர் 22ஆம் திகதி. கியூபா, அமெரிக்கா இரண்டும் அயல் நாடுகள். ஆனால் பகை நாடுகள். இந்த நாள்கள் நெருங்கும்போது அங்கு இயல்பான உணர்வெழுச்சி ஏற்படுவது தவிர்க்க முடியாதது. இது அத்தகைய ஒரு காலம். சே குவேரா மற்றும் கென்னடி இடையிலான அரசியல் உரசல், கென்னடி சந்தித்த அரசியல் நகர்வுகள் மற்றும் அவரின் மறைவு என்பனபற்றி அலசுகின்றது இந்தக் கட்டுரை.**



புரட்சி, ஆயுதப் போராட்டம் போன்றவற்றில் எல்லாம் ஆர்வமுடைய இளைஞர்களுக்கு உலகம் முழுவதும் ஆதர்சமான முகம் சே குவேரா. தேர்தல் அரசியல், ஜனநாயகம், நல்லாட்சி போன்றவற்றில் ஈடுபாடுடைய நடுத்தர வகுப்புக்கான சே குவேரா ஒருவர் உண்டென்றால், அது ஜான் பிட்ஸ்ஜெரால்ட் கென்னடி. இருவரும் வசீகரமான தோற்றம் உடையவர்கள் என்பதால், ஏறத்தாழ சினிமா நட்சத்திரங்களின் கவர்ச்சி அந்தஸ்தை அடைந்தவர்கள். இருவருக்குள்ளும் மற்றபடி எந்த ஒற்றுமையும் கிடையாது.

சே குவேராவும் கென்னடியும் சம காலத்தவர்கள். பிடல் காஸ்ட்ரோவும் சேவும் புரட்சியை வழிநடத்தி 1957ஆம் ஆண்டில் கியூபாவை விடுவித்தபோது, கென்னடி அமெரிக்க செனட்டராக இருந்தார். அடுத்த நான்கு ஆண்டுகளில் கென்னடி அமெரிக்காவின் தேர்ந்தெடுக்கப்பட்ட மிக இளம் அதிபரானபோது அவருக்கு வயது 43. சேவுக்கு வயது 33.

## கியூபப் புரட்சியும் கென்னடியும்

அதிபரான நான்கே மாதங்களில் கென்னடி கியூபா மீது ரகசியத் தாக்குதலுக்கு உத்தரவிட்டார். இது அவருக்கு முந்தைய அதிபரின் காலத்திலேயே திட்டமிடப்பட்டுவிட்டது. பே ஆப்பிக்ஸ் தீவில் அமெரிக்கச் சிப்பாய்கள் ஆயிரத்து 500 பேர் இறக்கப்பட்டார்கள். ஆனால், அப்போது சேவின் வழிகாட்டுதலில் இயங்கிவந்த கியூப ராணுவம், அதில் சுமார் 500 பேரைக் கொன்றது. மீதி ஆயிரம் பேரும் கைது செய்யப்பட்டார்கள். கென்னடி கியூபாவுடன் பேச்சு நடத்தி, அவர்களை மீட்க வேண்டியிருந்தது. மொத்தம் 5 கோடி டொலர்கள் மதிப்புக்கு உணவுப்பொருள்களையும் மருந்துகளையும் கியூபாவுக்குக் கொடுத்துத் தன் சிப்பாய்களை மீட்டது அமெரிக்கா. சே குவேரா 1961ஆம் ஆண்டில் கென்னடிக்குக் கிண்டலான நன்றிக் கடிதம் ஒன்று அனுப்பினார். 'எங்கள் புரட்சி முடிந்த பின்னர், அது நிலைகொள்ளாமல் தள்ளாடிக் கொண்டிருந்தது. நீங்கள் நடத்திய தாக்குதலின் உதவியால் இப்போது எங்கள் புரட்சி மக்களிடையே நிலைப்பட்டுவிட்டது. நன்றி.' கென்னடி இதற்கு எதுவும் பதில் சொன்னதாகத் தெரியவில்லை.

நன்றிக் கடிதம் மட்டுமல்ல... சே குவேராவும் அமெரிக்க அதிபர் கென்னடியின் உரைகளை எழுதுபவருமான ரிச்சர் குட்வின்னும் ரகசியமாக பிரேசிலில் சந்தித்துப் பேசினார்கள். அமெரிக்காவும் கியூபாவும் ஏதேனும் நல்லிணக்க உறவுக்கு வர முடியுமா என்று விவாதித்தார்கள். புகழ் பெற்ற ஹவானா சுருட்டுகளை கென்னடிக்குப் பரிசாக அனுப்பிவைத்தார் சே. அவரும் ரிச்சர்டும் விவாதித்தது போன்ற எந்த உடன்பாட்டுக்கும் இரு நாடுகளும் வரவே இல்லை. சுருட்டைதான் புகைப்பதற்கு முன்னால் ரிச்சர்டைப் புகைத்துக் காட்டும்படி கென்னடி ரிச்சர்டிடம் கிண்டல்செய்தார். காரணம், காஸ்ட்ரோவைக் கொல்ல அவர் புகைக்கும் சுருட்டில் குண்டுவைக்கும் ஒரு திட்டத்தை சி.ஐ.ஏ தீட்டியிருந்தது. தொடர்ந்து, அமெரிக்க சி.ஐ.ஏ காஸ்ட்ரோவைக் கொல்வதற்காகப் பல சதிகள் செய்தது. கியூபாவில் சோவியத் யூனியன் அமெரிக்காவை நோக்கி ஏவுகணைகளை நிறுவியது. கென்னடி அரசை மூன்றாம் உலகப் போருக்கும் முதல் அணுகுண்டுப் போருக்குக் கொண்டுவிட்டுவிடும் அளவுக்கு மூன்று நாடுகளிடையே சிக்கலை ஏற்படுத்தியது. போர் விளிம்பில் சமரசத்துக்கு வந்தார்கள். ஏவுகணைகள் அகற்றப்பட்டன. நான் அவற்றை அமெரிக்கா மீது நிச்சயம் பயன்படுத்தியிருப்பேன் என்று பின்னாளில் சே சொன்னார்.

எனவேதான் 1963ஆம் ஆண்டில் டல்லாஸ் நகரில் திறந்த காரில் ஊர்வலமாக வரும்போது கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டதும், முதல் சந்தேகம் கியூபா மீது எழுந்தது. ஆனால், பின்னர் நடைபெற்ற பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணை கமிஷன்களின் அறிக்கைகள் இந்தக் கொலையில் கியூபா, சோவியத் யூனியன், சி.ஐ.ஏ ஆகியவற்றுக்கெல்லாம் எந்தத் தொடர்பும் இருப்பதாகத்தெரியவில்லைஎன்றுகூறிவிட்டன. ஆனால், படுகொலை நிகழ்ந்து 50 ஆண்டுகளுக்குப் பின்னரும் கென்னடி கொலை மர்மங்கள் நீடிக்கின்றன. எதிர்ப்புறக் கட்டட மாடியிலிருந்து சுட்ட ஆஸ்வால்ட் தனியொருவனாக கென்னடியைச் சுட்டிருக்க முடியாது என்றே கருதப்படுகிறது. ஆஸ்வால்டைச் சில தினங்களிலேயே நீதிமன்ற வாசலில் ரூபி சுட்டுக்கொன்றது, எதை மறைக்க என்பது இன்னும் விவாதிக்கப்படுகிறது. இது தொடர்பாக ஹாலிவுட் எட்டுத் திரைப்படங்களை எடுத்திருக்கிறது.

**பிடலின் சாட்சியம்**

சே, கென்னடி இருவரும் கொல்லப்பட்டு விட்டார்கள். பிடல் காஸ்ட்ரோவுக்கு இப்போது 87 வயது. கென்னடி கொலைக்கும் தங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அண்மையில்கூடச் சொன்னார். ஆனால், சி.ஐ.ஏவும் கியூப எதிரிகளும் கென்னடியைக் கொல்ல சதிசெய்திருக்கலாம் என்பது அவர் கருத்து. கியூபா மீது தாக்குதல் நடத்த வாய்ப்பிருந்தபோது கென்னடி அதைச் செய்யத் தவறியதால், சி.ஐ.ஏவுக்கு அவர்மீது கோபம் என்பது காஸ்ட்ரோ பார்வை. நிச்சயம் ஆஸ்வால்ட் கென்னடியைக் கொன்றிருக்க முடியாது என்று சொல்லும் காஸ்ட்ரோ, கொலை செய்யப் பயன்பட்டதாகச் சொல்லும் துப்பாக்கியின் மாதிரியைக் கொண்டு தாங்கள் அதுபோலத் தொலைவிலிருந்து கொல்ல முடியுமா என்று சோதித்துப் பார்த்ததாகவும், அது சாத்தியமே இல்லை என்று தெரிவதாகவும் சொன்னார். கென்னடி கொலையில் தனக்கு எந்தப் பங்கும் இல்லை என்று நிரூபிக்க காஸ்ட்ரோ, அமெரிக்க அரசு நியமித்த வாரன் கமிஷன் முன்னால் சாட்சி சொல்ல முன்வந்தார். நடுக்கடலில் ஒரு கப்பலில் கமிஷன் அதிகாரியிடம் காஸ்ட்ரோ தன் சாட்சியத்தைப் பதிவும் செய்தார். கென்னடியின் சகோதரி மகள் மரியா தொலைக்காட்சி நிருபராகப் பணியாற்றுகிறார். அவருக்கு காஸ்ட்ரோ சிறப்புப் பேட்டியும் அளித்திருக்கிறார்.

**இளம் பிம்பம்**

கென்னடிதான் அமெரிக்காவின் முதல் இளம் பிம்பம். 43 வயதிலேயே அதிபர் தேர்தலுக்குத் தேர்வானது மட்டுமல்ல கென்னடியின் சிறப்பு. கென்னடிதான் இன்றுவரை அமெரிக்காவின் ஒரே கத்தோலிக்கக் கிறித்தவ அதிபர். அவருக்கு முன்னும் பின்னும் எல்லாரும் புரொட்டஸ்தாந்துக் கிறித்தவர்கள்தான் உச்சமான பதவிக்கு வந்தவர்கள். கத்தோலிக்கர்கள் அமெரிக்க அரசியலில் பாரபட்சமாக நடத்தப்படுவதாக ஒரு குற்றச்சாட்டு இன்றுவரை உண்டு.

புத்தகம் எழுதி புலிட்சர் விருது பெற்ற ஒரே அமெரிக்க அதிபர் கென்னடிதான். அதுவும் அதிபராவதற்கு முன்பே செனட்டராக இருந்தபோது அவர் எழுதியது. ப்ரொபைல்ஸ் இன் கரேஜ் என்ற அந்த நூல், கட்சிக் கொள்கையா, மனசாட்சியா என்ற போராட்டத்தில் மனசாட்சியைத் தேர்வுசெய்து வாக்களித்த செனட்டர்கள் சிலரைப் பற்றியது. கென்னடியின் அரசியல் வாழ்க்கையை அவருக்காகத் திட்டமிட்டு ஊக்குவித்து வளர்த்த அவரது அப்பாவின் செல்வாக்





கால்தான் அவருக்கு புலிட்சர் விருது தரப்பட்டது என்ற விமர்சனமும் உண்டு.
கென்னடியின் கொலைதான் அமெரிக்காவின் முதல் தொலைக்காட்சி நிகழ்வு (டி.வி. ஈவெண்ட்). நாடு முழுவதும் மக்களிடையே ஒரு பிம்பத்தைக் கொண்டுபோய் பதியவைப்பதில் தொலைக்காட்சியின் செல்வாக்கு அந்த நிகழ்ச்சியில்தான் உணரப்பட்டது. அப்போது அமெரிக்காவில் கறுப்புவெள்ளைத் தொலைக்காட்சிதான். வண்ணத் தொலைக்காட்சி வரவில்லை. கென்னடி இறந்த செய்தி வந்தபோது, பல தொலைக்காட்சி நிலையங்களில் கேமராவே இல்லை. ஒரே கேமரா. பழுதாகியிருக்கும் அல்லது வேறு வேலைக்கு அனுப்பப்பட்டிருக்கும். எனவே, நிலையங்கள் முதல் செய்தியை ஒரு அட்டையில் எழுதிதான் தொலைக்காட்சியில் காட்டின. அடுத்த ஒரு மணி நேரத்தில் சுதாரித்துக்கொண்டு, கேமராக்கள் சம்பவ இடங்களில் குவிந்தன. அப்போது கைபேசிகள் கிடையாது. நேரலை ஒளிபரப்புக்கு வழியில்லை. மைக்குக்குப் பதில் தொலைபேசியைப் பயன்படுத்தியெல்லாம் பேட்டியைப் பதிவுசெய்து ஒளிபரப்பியிருக்கிறார்கள். ஆனால், கென்னடியின் இறுதிச் சடங்கின்போது அமெரிக்காவில் தொலைக்காட்சிப் பெட்டி இருந்த ஒவ்வொரு வீட்டிலும் மக்கள் அதன் முன்பே இருந்தார்கள்.

**ஜாக்குலின்**

இளம் வயதில் கொல்லப்பட்ட கென்னடி தொடர்பான பல பிம்பங்கள், புகைப்படங்கள் மூலம் மக்கள் மனதில் பல காலமாக ஆழப் பதிந்திருக்கின்றன. அவரது இளம் மனைவி ஜாக்குலின் கென்னடி, குருதிக் கறை படிந்த மேஜையை அகற்றாமலே தொலைக்காட்சியில் தோன்றினார். வெள்ளை மாளிகையில் கென்னடியின் குழந்தைகள் கென்னடியின் அலுவலக மேசையின் அடியிலும் மேசை மீதும் உட்கார்ந்திருக்க... அவர் கோப்புகளைப் பார்த்தபடி இருக்கும் புகைப்படங்கள் பிரபலமானவை.

இன்று கென்னடியின் வாரிசுகள் என்ன செய்கிறார்கள்? மனைவி ஜாக்குலின் சில வருடங்கள் பொது வாழ்க்கை சேவை நிகழ்வுகளில் பங்கேற்றார். ஆனால், கென்னடியின் சகோதரர் ராபர்ட்டும் கொலை செய்யப்பட்ட பின்னர், தனக்கும் குழந்தைகளுக்கும் கென்னடி என்ற பெயரில் இனி பாதுகாப்பு இல்லை என்று கருதினார். எனவே, கிரேக்க கோடீஸ்வரர் ஒனாசிஸை மணம் செய்துகொண்டார். ஜாக்குலினை உலக ஊடகங்கள், அழகியாக மட்டுமே சித்தரித்திருக்கின்றன. அவர் அறிவுப்பூர்வமானவர். எழுதுவதிலும், ஆசிரியராக இருந்து நூல்களைத் தொகுப்பதிலும், படிப்பதிலும் ஆர்வமுள்ளவர். பதிப்பகங்களில் வேலை பார்த்திருக்கிறார். பாரம்பரியமிக்க இடங்களைப் பாதுகாக்கும் பணிகளில் ஈடுபட்டிருக்கிறார். ஒனாசிஸ் 1975ஆம் ஆண்டில் இறந்ததும் இந்தப் பணிகளை ஜாக்குலின் இன்னும் அதிகமாகச் செய்யத் தொடங்கினார். 1994ஆம் ஆண்டில் ஜாக்குலின் புற்று நோயால் உயிரிழந்தார்.

> இன்றைய அமெரிக்காவில் கென்னடியை, அவரை அறிந்தேயிராத இளம் தலைமுறை கொண்டாடுவதாகச் செய்திகள் வருகின்றன. எந்த கென்னடியைக் கொண்டாடுகிறார்கள்? வசீகரமான சே போன்ற பிம்பத்தையா? அதிபர் கென்னடியையா? அல்லது இரண்டாம் உலகப்போரில் கடற்படை வீரராகச் செயல்பட்டு, நடுக்கடலில் உடைந்த படகில் இருந்த தோழர்களைக் காப்பாற்றுவதற்காக, படகைக் கயிற்றில் கட்டி, இழுத்து நீந்தி வந்து காப்பாற்றிய கென்னடியையா? காலம் தான் பதில் சொல்லும்.

**தொடரும் அவலம்**

கென்னடி ஜாக்குலின் தம்பதிகளின் முதல் குழந்தை பிரசவத்திலேயே இறந்து பிறந்தது. நான்காவது குழந்தை பிறந்த சில நாள்களிலேயே இறந்தது. இரண்டாவது குழந்தை கரோலினுக்கு இப்போது வயது 56. அமெரிக்கத் தூதராக ஜப்பானில் இருந்தவர். பல்வேறு அமெரிக்க அரசு நிர்வாகப் பொறுப்புகளில் பணியாற்றியவர். மூன்றாவது குழந்தை ஜான் 1960ஆம் ஆண்டில் பிறந்தார். வழக்கறிஞராக, 'ஜார்ஜ்' என்ற இதழின் வெளியீட்டாளராக இருந்த ஜான் 1996ஆம் ஆண்டில்தான் திருமணம் செய்துகொண்டார். மூன்றாண்டுகள் கழித்து, அவரும் அவருடைய குடும்பத்தினரும் சென்ற விமானம் கடலில் விழுந்து நொறுங்கி அனைவரும் உயிரிழந்தனர்.

கென்னடி வாழ்ந்தது 46 ஆண்டுகள்தான். அவர் இறந்தே இப்போது 50 ஆண்டுகள் ஆகின்றன. இன்று கென்னடியின் அரசியல் மரபு என்று ஏதாவது உண்டா? கென்னடி கொல்லப்படாமல் இருந்திருந்தால், வியட்நாம் போரை நிறுத்தியிருப்பார் என்று சிலர் கருதுகிறார்கள். அவர், தன் பதவியின் கடைசி நாள்களில் வியட்நாமில் அமெரிக்கப் படையின் எண்ணிக்கையைக் குறைத்து திரும்பப் பெற்றார். அதனாலேயே அவர் சி.ஐ.ஏவால் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் உண்டு. கென்னடி ஆட்சிக் காலத்தில் அவர் பெரிதாக வரிக் குறைப்பு செய்ய ஒப்புக்கொள்ளவில்லை. நலத் திட்டங்களை வலுப்படுத்தினார். கடைசி ஆண்டுகளில் உலகப் பயணங்களின்போது போரை ஒழிப்பது, அமைதி, வளர்ச்சிக்குப் பாடுபடுவது என்பதில் அழுத்தம் கொடுத்துப் பேச ஆரம்பித்தார்.

**கென்னடியின் அரசியல் பாதை**

கென்னடியின் அரசியல் வழிமுறையை, பின்னர் வந்த யாரும் பின்பற்றவில்லை. கிளிண்டன் மட்டும் தன் பிம்ப அரசியலைக் கென்னடியைப் பின்பற்றி அமைத்துக்கொண்டார். அது அவருக்குப் பயனளித்தது. கிளிண்டனைப் போலவே கென்னடிக்கும் பெண்ணாசை பலவீனம் இருந்தது. வெள்ளை மாளிகைக்கு வந்து செல்லும் ஹாலிவுட் பிரபலங்கள் பற்றி அப்போது நிறைய கிசுகிசுக்கள் வெளியாகின. அவர் கொலைக்குக் காரணம், பெண்கள் தொடர்பாக மாபியா கும்பல்களுடன் ஏற்பட்ட உரசலாகவும் இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்.

இன்றைய அமெரிக்காவில் கென்னடியை, அவரை அறிந்தேயிராத இளம் தலைமுறை கொண்டாடுவதாகச் செய்திகள் வருகின்றன. எந்த கென்னடியைக் கொண்டாடுகிறார்கள்? வசீகரமான சே போன்ற பிம்பத்தையா? அதிபர் கென்னடியையா? அல்லது இரண்டாம் உலகப்போரில் கடற்படை வீரராகச் செயல்பட்டு, நடுக்கடலில் உடைந்த படகில் இருந்த தோழர்களைக் காப்பாற்றுவதற்காக, படகைக் கயிற்றில் கட்டி, இழுத்து நீந்தி வந்து காப்பாற்றிய கென்னடியையா? காலம் தான் பதில் சொல்லும்.

*நன்றி:இந்துதமிழ்திசை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர்களிடையே ஆக்கங்கள் கோரல்

சாவகச்சேரி, ஒக்.14

தேசியவாசிப்புமாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையின் சாவகச்சேரிபொதுநூலகத்தால், மாணவர்கள், வாசகர்களிடையே சிறுகதை, கவிதை, கட்டுரை, சித்திரம், இலக்கியம் நயம் போன்றஆக்கங்கங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்கள்சாவகச்சேரி நகரின் தொன்மை நாகரீகம், கலாசாரம், தென்மராட்சியில் பிரபல்யமான இடங்கள், சுற்றுலாத்தலங்கள், கோவில்கள்ஆகியவைபற்றியும், பிரபலமானவர்கள்எழுத்தாளர்கள், துறை சார்ந்தோர், சாவகச்சேரி மண்ணுக்கு ஆற்றிய பங்களிப்புத் தொடர்பாகவும், பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தல், பொலித்தீனுக்கானமாற்றீடுதொடர்பாகவும், சாவகச்சேரி நகரத்துக்கு உட்பட்ட கிராமங்களுக்கான பெயர்கள் உருவானதற்கான காரணங்கள் தொடர்பாகவும் எழுதப்பட வேண்டும்.

வழங்கப்படும்ஆக்கங்களுடன்தொடர்பானஒளிப் படங்கள், புள்ளி விப ரங்கள், வரைபடங்கள் மற்றும் வலுவான ஆதாரங்கள்இருப்பின்அவற்றையும் இணைத்து எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பொது நூலகத்தில் கையளிக்குமாறு நூலகர் அறிவித்துள்ளார்.சிறந்ததாகத்தெரிவு செய்யப்படும் ஆக்கங்களுக்குத் தேசிய வாசிப்பு மாத நிகழ்வில் பரிசில்கள்வழங்கப்படும்என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# 153 தமிழ் பொலிஸாருக்கு பயிற்சிகள் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 14

வடக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் பொலிஸாரைச் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான முதற்கட்ட பயிற்சிகள்வவுனியாவில்நேற்று ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்துகொண்டிருந்தார்.



இலங்கை பொலிஸ் திணைக்களத்தின்நெறிப்படுத்தலின் கீழ் பொலிஸ் ஆள்ச்சேர்ப்புப் பிரிவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர்களை 'பொலிஸ் கொன்ஸ்டபிள்' பதவிக்கு உள்ளீர்ப்பதற்கான நேர்முகத் தேர்வுக்குப் பதிவுசெய்யும் நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டத்தில் கடந்த ஜுன் மாதம் நடைபெற்றது.

பின்னர் வவுனியா, காங்கேசந்துறையில் உடல் பரிசோதனை, மருத்துவப்பரிசோதனைஎன்பன பகுதியாகஇடம்பெற்றன.

வடக்கு மாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு வரும் மக்களும்தமிழ்மொழியிலான விளக்கங்களைப்பெறுவதற்குபல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆகவே தமிழ் இளைஞர்களைச்சேவைகளுக்குள் உள்ளீர்ப்பதன் மூலமாக துறைகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்பும் நோக்கில் இந்த வேலைத்திட்டம்ஆரம்பிக்கப்பட்டது.

தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான முதற் கட்டப் பயிற்சிகள் வவுனியா வானூர்திப் படைப் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பமாகியுள்ளன.

முதன்முறையாகதமிழ்ப் பகுதியில் தமிழ் மொழி பேசும் பொலிஸ் அலுவலர்களுக்கான பயிற்சி இடம்பெற்று வருகின்றது.

பொலிஸ் அலுவலர்களுக்கான பயிற்சியின் முதற்பிரிவில் 153 பேர் இணைக்கப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-7,110)

## வீதிப் பாதுகாப்பு தொடர்பான இணையத்தளம் ஆரம்பிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.14

வீதிப்பாதுகாப்பு வாரத்தின் இறுதி நாளான நேற்றுயாழ்ப்பாணம்மத்திய கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் , வீதிப் பாதுகாப்புவாரத்துக்கான இணையத்தள முகவரி ஒன்று ஆரம்பித்துவைக்கப்பட்டது.




ஆளுநரின் செயலர், வீதிப்பயணிகள்போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் மற்றும் வீதி பாதுகாப்புச் சபையின் பிரதானி ஆகியோரால் இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வீதி விபத்து விழிப்புணர்வுகள்,வீதிவிபத்தைக் குறைக்க கூடிய கருத்துக்களை முன் வைத்தல்,வீதி விபத்துக்கு ஏதுவான காரணிகளை முறையிடல் போன்ற பல்வேறு விடயங்களை கொண்டதாக இந்த இணையத்தளம் செயற்படவுள்ளது. (ஐ-7)

## கமலாசனி வித்தியாலய ஆசிரியர் தின நிகழ்வு

கொடிகாமம், ஒக்.14

மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தின் ஆசிரியர் தின நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

மாணவர் தலைவர் ந.ஊசந்தினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சி வலயப்பிரதிநிதிகளானவிஜிதா ஆரியரட்ண, கி.பிரதீபா ஆகியோரும்,ஆசிரியர்கள்,மாணவர்கள்,பெற்றோர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் கடந்த ஆண்டு பாடசாலையில் இருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்மதிப்பளிக்கப்பட்டனர். அத்துடன்தரம்5புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்று சித்தியடைந்த க.விதோசன் (156) சி.சிந்துஜன் (154) ஆகியோரும் மதிப்பளிக்கப்பட்டனர். (க-159)



## வாணி விழாவும் ஆசிரியர்தினமும்

யாழ்ப்பாணம்,ஒக்.14

சுன்னாகம்ஸ்கந்தவரோதயக்கல்லூரியின்வாணி விழா மற்றும் ஆசிரியர் தினநிகழ்வுகடந்தவாரம் இடம்பெற்றன.

கல்லூரியின் அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில், கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள கந்தப்பெருமான் ஆலயத்தில்வாணிவிழாஇடம் பெற்றது.

பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆலய முன்றலில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன.


அதேவேளைபன்னாட்டு ஆசிரியர்தினத்தைமுன்னிட்டு ஆசிரியர் தின நிகழ்வுகள் கல்லூரியின் மைதானத்தில் இடம் பெற்றன. நிகழ்வில் முதன்மைவிருந்தினராக கல்லூரியின்பழைய மாணவரும் தொழிலதிபருமான லயன் சண்முகவேல் கலந்து சிறப்பித்தார். நிகழ்வில் ஆசிரியர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். (க-104)

# பலாலி வானூர்தி நிலைய நிலவரங்கள் நேரில் ஆய்வு

### அமைச்சர் ரணதுங்க மற்றும் ஆளுநர் சுரேன் ராகவன் களப்பயணம்

யாழ்ப்பாணம்,ஒக்.14

யாழ்ப்பாணம்பன்னாட்டுவானூர்தி நிலையத்தின் தற்போதைய நிலவரங்களை, போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்திச் சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மற்றும்வடக்குமாகாண ஆளுநர்கலாநிதி சுரேன் ராகவன் ஆகியோர் நேற்று நேரில் சென்று ஆராய்ந்தனர். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனமற்றும்தலைமைஅமைச்சர்ரணில்விக்கிரமசிங்கஆகியோர் தலைமையில் எதிர்வரும் 17 ஆம் திகதி 'யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்திநிலையம்'உத்தியோகபூர்வமாக மக்கள் பாவனைக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.



இதனை முன்னிட்டு இருவரும் நேற்று நிலையத்தின் நிர்மாணப் பணிகளின் நிலவரங்களை நேரடியாக ஆராய்ந்தனர்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆளுநர் தெரிவித்ததாவது, இந்த அபிவிருத்தித் திட்டமானது போருக்குப் பின்னரான பெரும் முன்னேற்றகரமான விடயமாகும் . புலம்பெயர்ந்துள்ள நம் உறவுகள் மீண்டும் நேரடியாக யாழ்ப்பாணம் மண்ணில் வந்து தமது உறவுகளை இலகுவாகச் சந்திப்பதற்கான வழியாக இது அமைகின்றது. இந்த வானூர்திப் போக்குவரத்தின் போது தற்போது தமிழ் நாட்டுக்கான 7 சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதனை வாரத்துக்கு12சேவைகளாக்கும்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. -என்றார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய தொழில்தகுதி சான்றிதழ் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஒக்.14

வடக்கு மாகாணத்திலுள்ள வேலையற்ற இளைஞர்களைதேசியஊழியர்படையணியில் இணைத்துக் கொள்வதற்கும், தொழிற்தகுதி மற்றும் தொழில் விருத்தி செயற்றிட்டத்தின்கீழ்தேசியதொழிற்தகுதிச்சான்றிதழ்களை(என்.வி.கியூ) வழங்குவதற்கான குறுங்காலத் தொழிற்பயிற்சி தொடர்பிலான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் குறிப்பிட்ட மாவட்டச் செயலகங்களில் இந்த வாரம் நடைபெறவுள்ளன.

மாவட்டச் செயலகம் மற்றும் ஹைட்ரெக் லங்கா இன்ரநெஷ்னல் ஆகியன இணைந்துவடக்குமாகாணத்திலுள்ள 5 மாவட்டச் செயலகங்களிலும் கருத்தரங்குகளை நடத்தவுள்ளன.

இந்தக்கருத்தரங்கில்மின்னிணைப்பாளர், கனரகவாகன இயக்குனர், கட்டுமானப்பணியாளர் வாகனம் திருத்துநர், தளமேற்பார்வையாளர், ஆட்டோ மொபைல் மற்றும் ஆட்டோ எலக்ரிக்கல் தொழிநுட்பவியலாளர் ஆகிய பயிற்சிகள் இடம்பெறவுள்ளன.

இவற்றில் ஆர்வமுள்ளவர்கள்பிரதேசசெயலகங்களில் பதிவு செய்து, மாவட்டச்செயலகங்களில் இடம்பெறும் கருத்தரங்குகளில் கலந்து கொள்ள முடியும்.

யாழ்ப்பாணமாவட்டச்செயலகத்தில் இன்று திங்கட்கிழமை 9.30மணிக்கும், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இன்று 2 மணிக்கும், முல்லைத்தீவுமாவட்டச்செயலகத்தில் நாளை காலை 9.30 மணிக்கும், வவுனியா மாவட்டச்செயலகத்தில் நாளைமறுதினம் காலை 9.30 மணிக்கும், மன்னார்மாவட்டச்செயலகத்தில் வியாழக் கிழமை 9.30மணிக்கும்கருத்தரங்குகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-104)

## வடக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சால்

# யாழ்ப்பாண மாவட்டத்தில் பல வேலைத்திட்டங்கள்

## கடந்த வாரமும் அடிக்கல்

யாழ்ப்பாணம், ஒக்.14

தேசிய கொள்ளைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்சிலகடந்த சனிக்கிழமைஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளனஎன்று அமைச்சின்செயலர் வே.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கொக்குவில் இந்து கல்லூரியின் ஆரம்பபிரிவு பாடசாலைக்கான இரண்டு மாடிக் கட்டடம் 12 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.

மாணவர்களின் அறிவுத்திறனைப்புதியதொழிநுட்பங்களைப் பயன்படுத்திவளர்த்துக்கொள்ளும் நோக்குடன் திறன் வகுப்பறைகள் பாடசாலைகளில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைவாகபருத்தித்துறைஹாட்லிக்கல்லூரி மற்றும் வட்டு இந்துக்கல்லூரி ஆகியவற்றில் திறன் வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 100 திறன் வகுப்பறைகள் 44 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டுள்ளன. திறன் வகுப்பறைக்கான 3 நாள் தொழிநுட்பப்பயிற்சிகள் 26 பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவர்களில் 52 பேருக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான 10 ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு 2 ஆயிரத்து 925 வீடுகள் அமைச்சால் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் சங்கானை பிரதேச செயலகப்பிரிவில் 139 வீடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன் 69 வீடுகள்முடிவுறுத்தப்பட்டுபயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன. காரைநகர் பிரதேச செயலகப் பிரிவில் 48 வீடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், 21 வீடுகளும் முடிவுறுத்தப்பட்டுபயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

பருத்தித்துறை பிரதேச செயலகப்பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட 105 வீடுகளில் 41 வீடுகள் முடிவுறுத்தப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

கரவெட்டி பிரதேச செயலகப்பிரிவில் 138 வீடுகள்ஒதுக்கப்பட்டு 86 வீடுகள் முடிவுறுத்தப்பட்டுபயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

தெல்லிப்பழைப் பிரதேச செயலகப்பிரிவில் 845 வீடுகள் ஒதுக்கப்பட்டு 500 வீடுகள் முடிவுறுத்தப்பட்டு பயனாளிகளுக்குகையளிக்கப்பட்டுள்ளன.

மாவிட்டபுரம்கந்தசாமிகோயிலுக்கானஅன்னதானமண்டபம் 12.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைப்பதற்கான வேலைத்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றுள்ளது. (க)




# வெவ்வேறு விபத்துக்களில் மூவர் காயம்

சாவகச்சேரி, ஒக்.14

வெவ்வேறு வீதி விபத்துக்களில் சிக்கிக் காயமடைந்த மூவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துக்கள் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளன. சாவகச்சேரி நுணாவில் கிழக்குப் பகுதியில் ஏ9 முதன்மைச் சாலையில் உந்துருளியும் பட்டா ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகின.

அதில் இளைஞன் ஒருவர் காயமடைந்தார்.

நாய்களால் துரத்தப்பட்டு வேகமாக ஓடிவந்த நாய் வீதியில் சென்ற ஈருளியுடன் மோதியது. அதில் பயணித்த மீசாலை கிழக்கைச் சேர்ந்த நபரும், மீசாலை வடக்கைச் சேர்ந்த நபரும் காயமடைந்தனர்.

காயமடைந்த மூவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (க-9)



ஆசிரியர் மற்றும் சிறுவர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு நெடுங்கேணி மாமடுச்சந்தி வெள்ளைப்பிள்ளையார் ஆலய "கற்பகா" அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். (ஐ-222)

# குடிதண்ணீருக்கான நிலுவைப்பணத்தை விரைவாகச் செலுத்துமாறு கோரிக்கை

மன்னார், ஒக்.14

குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்களிடம் நிலுவைப் பணத்தை அறவீடுசெய்வதற்கென இரண்டாம் கட்ட பணிகள் மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசியநீர்வழங்கல்வடிகாலமைப்புச் சபையினரிடமிருந்து குடிதண்ணீரைப் பெறும் வாடிக்கையாளர்களிடமிருந்து நிலுவைப் பணத்தை அறவீடுசெய்யும்முதல்கட்டநடவடிக்கையில் 90 வீதமானோர் தங்கள் நிலுவைப் பணத்தை செலுத்தியுள்ள நிலையில், இரண்டாம் கட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரிடமிருந்து தண்ணீர் பெறும் வாடிக்கையாளர்களில்பெரும்பாலானவர்கள் தங்கள் பணத்தைச் செலுத்துவதில் அக்கறை காட்டாது இருந்து வந்தமையால் பெருந் தொகை பணம்பலரிடம்நிலுவையாகஇருந்து வருகின்றன என்றும், இதனால் அந்தப் பணத்தைபகுதிபகுதியாகப்பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையை தேசியநீர்வழங்கல்வடிகாலமைப்புச் சபை கடந்த மாதம் முன்னெடுத்திருந்தது.

அந்த நடவடிக்கையில் 2 ஆயிரத்து 500 வாடிக்கையாளர்களில் 90 வீத மானவர்கள் தங்கள் நிலுவைப் பணத்தைச் செலுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது இரண்டாம் கட்டமாக மேற்கொள்ளப்பட இருக்கும் பகுதியில் ஆயிரத்து 800 பேர் நிலுவைப் பணத்தை செலுத்த வேண்டியவர்களாக இருப்பதால் இவர்களுக்குஅறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.


அவர்கள் குறிப்பிட்ட தினத்தில் தங்கள் நிலுவைப் பணத்தைச் செலுத்த தவறின் அவர்களுக்கான குடி தண்ணீர் விநியோகம் துண்டிக்கப்படும் நிலை உருவாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடிதண்ணீருக்கான நிலுவைப் பணத்தைச் செலுத்தி குடிதண்ணீர் விநியோகத் துண்டிப்பை நிறுத்திக் கொள்ளுமாறு தேசிய நீர் வழங்கல் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ-60)

# 227 கிலோகிராம் கடலட்டைகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக் 14

சட்ட விரோதமாக பிடிக்கப்பட்ட 227 கிலோ கிராம் கடல் அட்டைகள் தலைமன்னாரில் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளதாக கடற் படை ஊடகம் தெரிவித்துள்ளது. படகொன்றில் இருந்து இந்த கடலட்டைகள் 6 பொதிகளில் வைக்கப் பட்ட நிலையில் கைப்பற்ற பட்டது.



கடல் படையின் ரோந்து நடவடிக்கையின் போது குறித்த பகுதியில் இருந்த படகொன்றில் [illegible] கடலட்டைகள் [illegible] என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலக வாசிப்பும் யோகாசனமும்



கொடிகாமம், ஒக்.14
சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தின் வாசிப்பு தினமும், யோகாசன நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.
நிகழ்வில் ஓய்வு பெற்ற மருத்துவர் லயன் இ.கந்தையா, தென்மராட்சிக் கிழக்கு லயன்ஸ் கழகத்தின் உறுப்பினர்கள், கச்சாய் நூலகப் பொறுப்பதிகாரி திருநாவுக்கரசு, மத்திய கல்லூரி மாணவர்கள், ஆசிரியர் சி.தமிழ்ச்செல்வி, நூலகர் கோ.ராதிகா ஆகியோர் கலந்து கொண்டனர் மனவளக் கலை யோகா துணைப் பேராசிரியர் அ.சரோஜா நிகழ்வில் வளவாளராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு யோகாசனப் பயிற்சியை வழங்கினார்.
தென்மராட்சிக் கிழக்கு லயன்ஸ் கழகத்தினர், மனவளக்கலை யோகா துணைப் பேராசிரியர் திருமதி அ.சரோஜாவின் அனுசரணையுடன் ஒரு தொகுதி நூல்கள் நூலகத்துக்கு அன்பளிப்பு செய்யப்பட்டன.
தென்மராட்சிக் கிழக்கு அரிமாக்கழகத்தின் அனுசரணையுடன், அபிவிருத்திச் சபை இணைந்து நிகழ்வுகளை நடத்தின. (க159)

# ஆசிரியர்களுக்கு செயலமர்வு



கொடிகாமம், ஒக்.14
தரம் 6,7,8,9 வகுப்புகளில் தமிழ்ப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு கிளிநொச்சி பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது.
கிளிநொச்சி கல்வி வலயத்தின் தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வகௌரி சேனாதிராஜா தலைமையில் நடைபெற்ற செயலமர்வில், தேசிய கல்வி நிறுவனத்தின் மூத்த விரிவுரையாளர் இராணி சீதரனால் விளக்கவுரைகள் வழங்கப்பட்டன.
செயலமர்வில் 75 பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (க159)

# உடுவில் மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.14
உடுவில் மகளிர் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் இடம்பெறும்.
அதிபர் திருமதி. சுனித்தா ஜெபமோகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சராகால்டன் முதன்மை விருந்தி னராகக் கலந்து கொள்ளவுள்ளார்.
நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (க104)

# தையல் இயந்திரம் திருத்தும் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,ஒக்.14
கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பயனாளிகளுக்கு தையல் இயந்திரம் திருத்தும் பயிற்சி நெறி கரவெட்டி விதாதா வள நிலையத்தால் இலவசமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.
பயனாளிகள் நேர்முகத் தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட உள்ளதால், தமது சுயவிவரத்தை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் "விஞ்ஞான தொழில்நுட்ப அலுவலகர் விததாத வள நிலையம் கரவட்டி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

# சிறுவர் முதியோர் தின நிகழ்வு

சாவகச்சேரி,ஒக்.14
தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் சிறுவர், முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் தின நிகழ்வு நாளை செவ்வாய்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கீரிமலை கருகம்பனை கலாசார மண்டபத்தில் நடைபெறும்.
பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரத்தினம், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட உதவி மாவட்டச் செயலர் திருமதி ச.கி.நி. கமலராஜன், மதிப்புறு விருந்தி னராகப் பிரதேச முதியோர் சங்கத் தலைவர் வை.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்வர்.
நிகழ்வில் சிறுவர்கள், முதியோர்களின் கலை நிகழ்வுகளும், சிறப்புத் தேவையுடையோர் மதிப்பளிப்பு, பன்னாட்டு சிறுவர், முதியோர் மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோருக்குப் பரிசில்கள் வழங்கல் இடம்பெறும்.

# நியமனத்தை உறுதி செய்ய பயிலுநர்கள் கோரிக்கை

## ஆவணங்களை அனுப்பிவைக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு பணிப்பு

**யாழ்ப்பாணம், ஒக். 14**
**பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர் நியமனத்தை இடைநிறுத்தும் பணிப்புரையை மீளப்பெற்று தமக்கான நியமனத்தை உறுதி செய்யுமாறு பயிலுநர்களாகத் தெரிவானவர்கள் கோரிக்கை விடுத்த நிலையில், அவர்களின் கடமைப் பட்டியலுடன் கோரிக்கை முன் வைக்கு மாறும் அதைப் பரிசீலிப்பதாகவும் மாவட்டச் செயலகத்துக்கு தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

பயிலுநர் செயற்றிட்ட உதவியாளராக நாடுமுழுவதும் 7 ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்ட நியமனத்தை அரசதலைவர் தேர்தல் முடிவடையும் வரையில் இடைநிறுத்தி வைக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய 25 மாவட்டச் செயலர்களுக்கும் பணிப்புரை விடுத்திருந்தார்.
நாடுமுழுவதும் கிராம அலுவலர்களுக்கு உதவியாளர்களாகப் பணியாற்றும் வகையில் தேசிய ரீதியில் க.பொ.த உயர்தரத்துடன் பயிலுநர்களாக ஒப்பந்தப் பணியாளர்களை நியமிக்க கடந்த ஜூன் மாதம் கொழும்பில் நேர்முகத் தேர்வுகள் நடைபெற்றிருந்தன.
அதனடிப்படையில் கடந்த 16 ஆம் திகதி மேற்படி நியமனத்துக்காக 7 ஆயிரம் பேருக்கு கடிதங்கள் வழங்கப்பட்டன. பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் 15 ஆயிரம் ரூபா மட்டும் வழங்கப்படும் எனவும் அந்தக் காலத்தில் ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்படும் எனவும் வழங்கப்பட்ட நியமனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவர்கள் மாவட்டச் செயலகங்களில் தமக்கான கடமைகளை எதிர்பார்த்திருந்த வேளை, அரசதலைவர் தேர்தல் முடிவடைந்த பின்னர் நியமனம் வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் பணிப்புரை அனுப்பியிருந்தார்.
இருப்பினும் குறித்த நியமனத்தின் வகை, இதற்காக நேர்முகப் பரீட்சை இடம்பெற்ற காலம், பெறப்பட்ட அனுமதிகள் என்பன தேர்தல் ஆணைக்குழுவின் கவனத்துக்கு மீண்டும் கொண்டு செல்லப்பட்டது. அவற்றின் அடிப்படையில் குறித்த நியமனத்தை வழங்குவதற்கு தேர்தல்கள் ஆணைக் குழு அனுமதி வழங்க வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவானவர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தனர். இதற்கமைய குறித்த பணியின் தேவை மற்றும் கடமைப் பட்டியலில் போன்றவற்றுடன் கோரிக்கை அனுப்பி வைக்குமாறும் அது பரிசீலிக்கப்படும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (த-105)

# உக்கிளாங்குளத்தில் டெங்குச் செயற்றிட்டம்



வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வரும் டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டம் நேற்று உக்கிளாங்குளத்தில் முன்னெடுக்கப்பட்டது. வவுனியா நகர் பகுதியில் பெருக்கெடுத்துள்ள டெங்கு நுளம்புகளை இல்லாது ஒழிக்கும் செயற்றிடத்தை, வவுனியா சுகாதார சேவைகள் பணிமனையினருடன் இணைந்து, பண்டாரிக்குளம் சிவில் பாதுகாப்பு குழுவினர் மற்றும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்ட 24 பேர் வவுனியாவில் இனங்காணப்பட்டதை அடுத்து, வவுனியா முழுவதும் வவுனியா சுகாதார சேவைகள் பணிமனையினர் பல்வேறு தரப்பினருடன் இணைந்து பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அந்த வகையில் உக்கிளாங்குளம் பகுதியில் டெங்கு நோய் பரவும் வகையில் காணப்படும் இடங்கள் நேற்றுச் சோதனை செய்யப்பட்டதுடன், அவற்றை அழிக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்ப ட்டுள்ளது. (கரி4)

# புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.14
2019 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த வாரம் வெளியாகின. அதனடிப்படையில் பாடசாலை ரீதியான பெறுபேறுகள் வருமாறு

**மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்**
க.விதோசன் - 156, சி.சிந்துஜன் - 154

**கரம்பகம் அ.த.க. பாடசாலை**
ஜெ. கிசாளினி - 154

**கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலை**
ந.சுவஸ்திகன் - 157, பா.டஜிதரன் - 153

**மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை**
சு.டியானுஜன் - 157

**தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்**
ஜெ.ஜொய்சன் - 193

**பளை ஆரம்பப் பாடசாலை**
த.லேனுதரன் - 180, யெ.சஞ்சனா - 178, த.கபிஷா - 171, ப.அபர்ணா - 158, அ.கிருஸ்ரிகா - 157, ர.தட்சிகா - 156,
தி.தனுசன் - 155,யெ.கேசவன் - 153

**சித்தன்கேணி சிறி கணேச வித்தியாலயம்**
ம.ஜிலக்சனா - 164 (க-422, 159, 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் வாக்குகள் சந்தையில் விற்பனையா?

## ஆளுநர் ராகவன் பண்பாட்டு விழாவில் அதிருப்தி



வவுனியா, ஒக்.14

நான் கொழும்பு போகும்போது என்னிடம் அடிக்கடி கேட்கப்படும் கேள்வி தமிழர்களின் வாக்குகளை எப்படிப் பெற்றுக்கொள்ளலாம் சொல்லுங்கள் என்பதே. நான் அவர்களுக்குச் சொல்லும் ஒரே பதில் 72 வருடங்களாக நாம் வேண்டுவதை உங்கள் அரசு, அரசியல்தரப்பினர் புரிந்துகொள்ளாமல் அரசியல் செய்கின்றீர்கள். என்பதே. தமிழர்களுடைய வாக்கு 'சுப்பர்மார்க் கெட்டில்' விற்கப்படுகின்றன என்று அவர்கள் நினைக்கின்றார்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணப் பண்பாட்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தநாட்டில் சமத்துவமாக, சமகுடிகளாக, மதிப்புடன் தமிழர்கள் எப்போது வாழ்கின்றார்களோ அப்போதுதான் இலங்கை முழுமையான நாடாக மாறும். அதனைக் கேட்கவேண்டியவர்களுக்கு நாம் பகிரங்கமாகச் சொல்லத் தயாராக இருக்கின்றோம்.

'தமிழ்' என்று சொல்லும் போதே தடங்கல் இருக்கும் என்பதை ஆளுநராகக் கடமையாற்றிய கடந்த 8 மாதங்களில் அறிந்துகொண்டேன். ஆனால் அந்தத் தடைகளை நாம் உடைத்து மீண்டும் தலைதூக்கிய ஒரு தேசமாக, உலகம் எம்மை திரும்பிப் பார்க்கக்கூடிய ஒரு தேசமாக உலகுக்கு நன்மைசெய்யக் கூடிய தேசமாக மாறவேண்டும். அதற்காக உடைந்து போயிருக்கின்ற அத்திபாரக் கற்களை ஒன்றாகச் சேர்த்து மணிமண்டபம் கட்ட வேண்டும் என்பதுதான் எனது எதிர்பார்ப்பு.

நான் கொழும்பில் வாழ்ந்து பணிபுரிந்து வெளிநாட்டிலே கல்விகற்று என்னுடைய வாழ்கையை எளிமையான பௌத்த சித்தாந்தத்தின் கீழாக வைத்திருந்தாலும் என்னுடைய ஆன்மா இன்னும் தமிழனாக இருக்கிறது என்பதை இந்த நாதஸ்வர வித்துவான்கள் நினைவுபடுத்தினார்கள். நான் அடிப்படையாக தமிழனாக இருக்கின்றேன். அப்படித்தான் இருக்கவேண்டும் என்ற நினைவு எனக்கு வந்தது. இன்று ஒரு அரசியல் தீர்மானம் எடுப்பதற்கு வரலாறு எங்களை தள்ளியிருக்கின்றது. நீதி, நியாயம், தர்மம் எங்கு இல்லையோ, இந்த அப்பாவி மக்களைப் பாதுகாக்கக் கூடிய அரசு, அரசன் எங்கு இல்லையோ அந்த நாடு ஒருநாளும் விடிவடையாது.

இந்த நாட்டில் சமத்துவமான, சமகுடிகளாக, மதிப்புடன் தமிழர்கள் எப்போது வாழ்கின்றார்களோ அப்போதுதான் இலங்கை முழுமையான நாடாக மாறும். இதுதான் எங்களுடைய ஆதங்கம். இதற்காகத்தான் 72 வருடங்களாக எமது ஆவணங்களையும், வேதனைகளையும் வித்தியாசமான முறையிலே முன்வைத்துள்ளோம்.

தமிழர்கள் கேட்கும் ஒரே ஒரு விடயம். எமது கலை, கலாசாரம், அரசியல் இனத்தையும், சமமாக, சமாதானமாக வாழவேண்டிய இடத்தை மட்டும் எங்களுக்குத் தாருங்கள் என்பது மட்டுமே. அந்த வேண்டுகோள் திரும்பவும் கேட்கப்படவேண்டும். அது கேட்க வேண்டியது கொழும்புக்கோ புதுடில்லிக்கோ, ஜெனிவாவுக்கோ என்றாலும், அங்கே கேட்கவேண்டும். தமிழர்கள் ஓர் இனம் ஆகையினால், இனத்துக்குச் சொந்தமான எல்லா உறுதிப்பாடுகளும் எங்களுக்குத் தேவையானவை. அவற்றையும் உண்மைகளையும் எங்களுக்குத் தர வேண்டும் என்பதுதான் எமது வேண்டுகோள்.

**இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட தமிழ்**

தெய்வமான வள்ளுவருக்கு, நாம் முத்திரை வெளியிட்டுள்ளோம். அடுத்த வருடமும் இதே வாய்ப்பு இருக்குமென்றால் வள்ளுவருக்குச் சிலை வைக்கவேண்டும். அதனை வன்னியிலே வைக்கவேண்டும். என்று விரும்புகின்றேன்- என்றார். (த-110)



## கிளி. இரணைதீவுக்கு படகு சேவை ஆரம்பம்

கிளிநொச்சி, ஒக். 14

கிளிநொச்சி இரணைதீவுக்குப் படகு சேவை கடந்த வெள்ளிக்கிழமைஆரம்பிக்கப்பட்டுள்ளது. பூநகரி பிரதேச செயலர் கிருஷ்ணேந்திரன் அதை ஆரம்பித்து வைத்தார்.

இரணைமாதா கடற்தொழிலாளர் சங்கத்தின் முயற்சியால் 15 லட்சம் ரூபா பெறுமதியான படகு ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

படகில் சுமார் 50 பேருக்கும் மேற்பட்டவர்கள் பயணிக்க முடியும் என்று இரணைமாதா கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். படகு சேவை தற்போது சிறப்புத் தேவைகள் மற்றும் சிறப்பு நிகழ்வுகளுக்காக பயன்படுத்தப்படவுள்ளது. (த-6)






## வாக்குரிமை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு

மன்னார்,ஒக்.14

'நீதி மற்றும் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வாக்குரிமையைப் பயன்படுத்துவோம்' எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வுக் கருத்தமர்வு மன்னார் நகர மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்ற கருத்தமர்வில் விரிவுரையை கொழும்பு பல்கலைக்கழகத்தின் பன்னாட்டு சட்டத்துறை சட்ட பீட மூத்த விரிவுரையாளர் சட்டத்தரணி என்.எம்.ஹக்கீம் நிகழ்த்தினார்.

இதன் போது மன்னார்,வவுனியா,கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள்,சமூகச் செயற்பாட்டாளர்கள்,மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள்,இளையோர் எனப் பலர் கலந்து கொண்டனர். குறித்த விழிப்பு ணர்வுக் கருத்தமர்வின்போது வாக்குரிமை தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது (ஐ-56)

## நெற்செய்கை விதைப்பு காலம் 25ஆம் திகதி வரை

முல்லைத்தீவு,ஒக்.14

முல்லைத்தீவு உடையார் கட்டுகுளத்தின் கீழான விவசாயிகளுக்கான பெரும்போக நெற்செய்கைக்கான விதைப்புக் காலம் கடந்த 5ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரை என அறிவிக்கப்பட்டுள்ளது. உடையார் கட்டு குளத்தின் கீழான பெரும்போக நெற்செய்கை இரண்டாயிரத்து ஐநூறு ஏக்கருக்கு மேல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை விவசாயிகளுக்கான உரம் இன்று தொடக்கம் கட்டம் கட்டமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரி3)

## தென்னியன்குளத்தில் யானைகளின் அட்டகாசம் நாளுக்குநாள் அதிகரிப்பு!



முல்லைத்தீவு, ஒக். 14

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்துக்கு உட்பட்ட தென்னியன்குளம், உயிலங்குளம், மற்றும் அம்பலப்பெருமாள் குளம் போன்ற பகுதிகளில் நாளாந்தம் யானைகளின் தொல்லை அதிகரித்து வருகின்றது என்று பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். விவசாய நிலங்களைக் கொண்ட பகுதிகளாகக் காணப்படும் குறித்த இடங்களில் உள்ள விவசாய காணிகளுக்குள் புகுந்து கொள்ளும் காட்டு யானைகள் மக்களின் பயன்தரு தென்னை மரம் வாழை மரங்களை அழித்து வருகின்றன. இதனால் மக்களின் உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

தென்னியன்குளம் பகுதியில் உள்ள காணி [illegible] யொன்றுக்குள் நேற்றுப் [illegible] தென்னங்கன்றுகளை சேதப்படுத்தியுள்ளது.

அத்துடன் குறித்த காணிக்குள் இருந்த மூன்றுமூட்டைநெல்லை உட்கொண்டுள்ளதுடன் பல மூடைகளைச் சேதப் படுத்தியுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ம-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகு ஓடுபாதையை உடன் சீரமைக்கவும்

## மீனவர்கள் கோரிக்கை

தலைமன்னார், ஒக். 14

மன்னார் பாப்பாமோட்டை, பாலமுனைக் கடற்பரப்பிலுள்ள வள்ள ஓடுபாதையை முன்னரே திட்டமிட்டவாறு விரைவில் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீனவர்களால் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

பாப்பாமோட்டை மற்றும் பாலமுனைப் பகுதியில் 265 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இதில் 65 குடும்பங்கள் மீனவக் குடும்பங்கள்.

மீனவக் குடும்பங்கள் சிறு மீன்பிடியாளர்களாக இருக்கின்றபோதும் இவர்கள் தங்கள் படகுகளை சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஒரு ஓடுபாதையூடாகவே தரையிலிருந்து கடலுக்கு இழுத்துச் செல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றனர். இதை இந்தப் பகுதி மீனவர்கள் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக்கொண்டு வந்ததைத் தொடர்ந்து கடந்த வருடம் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் எடுத்துக் கொண்ட முயற்சியால் ஆசிய அபிவிருத்தி வங்கித் திட்டத்தின் கீழ் பத்து மில்லியன் ரூபாவில் வள்ள ஓடுபாதை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் வன இலாகாவினர் தங்கள் காணிப்பரப்பினூடாக ஓடுபாதை அமைக்கத் தடைவிதித்தனர். பின்னர் தடை நீக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் பற்றிக் கவனம் செலுத்திய வடக்கு ஆளுநர் அலுவலகம், மன்னார் மாவட்டச் செயலர், மன்னார் கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆகியோர் பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறும் இது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-60)



# முதியோர் நிலையம் கட்டைக்காட்டில் திறப்பு

மன்னார்,ஒக்.14

மன்னார் கட்டைக்காடு பகுதியில் அமைக்கப்பட்ட கட்டைக்காடு புனித செபஸ்டியார் முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண முதன்மைச் செயலர் ஏ.பத்திநாதன் நிலையத்தைத் திறந்து வைத்தார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை வழங்கிய காணியில் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் நிலையத்தை அமைப்பதற்கான நிதியுதவியை வழங்கியது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் நிலையத்தின் பிரதிநிதிகள், திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-56)

# மணல் ஏற்றி சென்றவர் வாகனத்துடன் கைதானார்

மன்னார், ஒக். 14

மன்னார் அருவியாற்றுப் பகுதியில் அனுமதியின்றி மணல் ஏற்றி வந்தார் என்ற குற்றச்சாட்டில் உழவு இயந்திரத்துடன் அதன் சாரதி சிறப்பு அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் அருவியாற்றுப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழப்படுகின்றது. இது பற்றி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் பேசப்பட்டு வந்தபோதும் எவ்வித நடவடிக்கையும் அதிகாரிகளால் எடுக்கப்படவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர். நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் தி.பரஞ்சோதியும் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி வந்தார்.

இந்த நிலையில், பூவரசங்குளம் சிறப்பு அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் அங்கு சிவில் உடையில் பதுங்கியிருந்துள்ளனர்.

மணலுடன் வந்த உழவு இயந்திரத்தை மடக்கினர். வாகனத்துடன் அதன் சாரதியைத் தடுத்து வைத்து சட்ட நடவடிக்கைக்காக முருங்கன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

அருவியாற்றில் முறையற்ற மணல் அகழ்வால் ஆற்று நீர் உப்பாக மாறுகிறது. பெரு மரங்கள் வேருடன் சரிந்து வீழ்ந்துள்ளன. மேட்டு மடுக்கரை, இராசமடுப் பகுதிகளில் மேட்டு நிலப்பயிர்ச் செய்கை பாதிக்கப்படுகிறது.

அருவியாற்றை அண்மித்த கிராமங்களில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று அங்குள்ளவர்கள் சுட்டிக்காட்டி வருகின்றனர். (த- 213)





# மாணவர்களுக்கு உதவிகள்

முல்லைத்தீவு,ஒக்.14

ஊற்றங்கரை சித்தி விநாயகர் ஆலயத்தின் முதன்மைக் குருக்கள் “பத்மநாதக் குருக்களின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு அவரது உருவச்சிலை ஆலயத்தில் அமைக்கப்பட்டுக் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன் தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் தண்ணீரூற்று இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவிகளும் வழங்கப்பட்டன.

பாடசாலைகளில் தரம் ஒன்று முதல் தரம் ஜந்து வரையான வகுப்புக்களில் கற்கும் மாணவர்களிடையே தேவாரப் போட்டி நடத்தப்பட்டு, தெரிவுசெய்யப்பட்ட 30 மாணவர்களுக்கு இலங்கை வங்கியில் தலா ஆயிரம் ரூபா வைப்பிலிடப்பட்ட வங்கிக் புத்தகங்களும், சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக சிறிய உண்டியலும், கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இந்த உதவிகள் ஊற்றங்கரை ஒன்றியத்தால் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-222)

# பிரதேச சபைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கும் சந்தையடி பிள்ளையார் ஆலயம்

## உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கும் தயாராகின்றது

முல்லைத்தீவு,ஒக்.14

மல்லாவி சந்தையடி பிள்ளையார் ஆலயத்துக்கு தனது ஆளுகையின் கீழுள்ள காணியைத் துணுக்காய் பிரதேச சபை, வழங்க மறுத்துள்ளது.

அத்துடன் ஆலய வெளிவீதி பகுதியில் சந்தைக்குரிய வாகன தரிப்பிடத்தை அமைக்க தயாராகி வருகிறது இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள ஆலய நிர்வாகத்தினர், உரிய தீர்வு கிடைக்காவிடில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

சந்தையடி அதிசய விநாயகர் ஆலயம் 2004 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

போர் முடிந்து மீளக்குடியமர்ந்த பின்னர் அந்த இடத்தில் சந்தை அமைந்திருப்பதால் குறித்த இடம் பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இதனால் பிரதேச சபைக்குரிய காணி எனக் கூறி ஆலய வெளி வீதி அமைந்துள்ள பகுதியில் சந்தைக்கென ஒரு வாகனத்தரிப்பிடத்தை அமைக்க துணுக்காய் பிரதேச சபை முயற்சி செய்து வருகிறது.

“பிரதேசசபை தனக்குரிய காணியில் வாகனத் தரிப்பிடம் கட்டுவது தவறல்ல. அது இன்னொரு தரப்பை பாதிக்கின்றது என்றால் மக்களின் நலனைத் தான் பிரதேச சபை கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆலயத்துக்கு அந்தக் காணி தேவையாயின் அதனை வழங்குவது தான் ஆளுமையான ஒரு பிரதேச சபை செய்ய வேண்டியது.. மக்களின் விருப்பங்களுக்கு மதிப்பளிப்பது தான் மக்கள் பிரதிநிதிகளின் கடமையாகும்.

மக்களைப் பற்றிய கரிசனை கொள்ளாமல் அவர்களுடைய வழிபாட்டு உரிமையைப் பறிக்கும் விதமாகச் செயற்படுவது ஒரு பிரதேச சபையின் நல்ல செயற்பாடாக அமையாது” என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சந்தைக்குள் ஏற்கனவே ஒரு வாகனத்தரிப்பிடம் உள்ளது. அது தற்போது மரக்கறிகள் நிறை அளக்கும் இடமாகவும், தற்காலிக சேமிப்பு இடமாகவும் உள்ளது.

சந்தையின் பாவனையிலுள்ள முதன்மை வாயிலை விடுத்து கோவிலுக்கு அருகாமையால் ஆலயச் செயற்பாடுகளுக்கு இடஞ்சலாக ஒரு வீதியை அமைக்க வேண்டிய தேவை ஏன் என்றும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ள னர்.

சந்தையின் மலசல கூடத்தையும் ஆலயத்தின் வெளி வீதிப்ப பகுதியில் அமைத்துள்ளனர்.

புனிதப்பகுதியாகபேணவேண்டிய ஆலயச் சூழலில் வேண்டத்தகாத செயற்பாடுகளைச் செய்து மக்களின் மனதைப் புண் படுத்துவது ஒரு பிரதேச சபையின் அதிகார துஸ்பிரயோகமே அன்றி ஆரோக்கியமான செயற்பாடல்ல என்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜாவைச் சந்தித்துள்ளனர். எதிர்வரும் 18 ஆம் திகதி பிரதேச சபையினருடன் கலந்துரையாடித் தீர்வைப் பெற்றுத் தருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஆலய நிர்வாகத்தினர் வடக்கு மாகாண ஆளுநருக்கும் கடிதம் அனுப்பியுள்ளனர்.


இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்காவிடில், ஆலயத்தின் புனிதத்தைப் பாதுகாக்கக்கோரி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (க-222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழகம் மண்டபம் பகுதியில் வைத்து

# இலங்கைக்குக் கடத்தப்பட இருந்த 3,200 கிலோ கடலட்டை பறிமுதல்





மன்னார், ஒக். 14
மன்னார் வளைகுடா கடல் வழியாக இலங்கைக்குக் கடத்தப்பட விரு;த 3 ஆயிரத்து 200 கிலோகிராம் கடலட்டைகள் தமிழகம் மண்டபம் பகுதியில் வைத்து மீட்கப்பட்டன. குறித்த கடலட்டைகளைக் கடத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டது என்று கருதப்படும் நாட்டுப்படகு கைப்பற்றப்பட்டதுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.
மன்னார் வளைகுடா கடல் பகுதியில் இருந்து பன்னாட்டுக் கடல் எல்லை வழியாக இலங்கைக்கு கடல் அட்டை கடத்தப்படுவதாக மண்டபம் வனத்துறை வனசரகர் வெங்கடேஸுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பிலேயே இந்த கடத்தல் சம்பவம் முறிய டிக்கப்பட்டது.
இது தொடர்பில் தமிழகம் வேதாளை பகுதியைச் சேர்ந்த சாகுல் ஹமீது (வயது -31) மற்றும் கருப்பையா (வயது-45) ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர். (ம-56)



## ஆசிரியர் தின நிகழ்வு

கொடிகாமம், ஒக். 14
யாழ்ப்பாணம் கைதடி பராசக்தி பாலர் பகல் இல்லத்தின் ஆசிரியர் தின நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை முன்பள்ளி மண்டபத்தில் மாலை 4 மணியளவில் நடைபெற்றது.
நாவற்குழி மகா வித்தியாலய ஆசிரியர் திருமதி சிவலோஜனி கிருஷ்ணமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை விவசாய அமைச்சின் கணக்காளர் திருமதி வசந்தமாலா மனோகரன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
ஆசிரியர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டு பரிசுப் பொருள்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். (ஜ-159)

## மகத்தானதும், மகிழ்ச்சியானதும் ஆசிரியர் தொழில் மாத்திரமே

முன்னாள் ஆசிரியர் தி.பரமானந்தம் தெரிவிப்பு

கொடிகாமம், ஒக். 14
மகத்தானதும், மகிழ்ச்சியானதுமான தொழில் என்றால் அது ஆசிரியர் தொழில் மாத்திரமே. தனது பிள்ளை பரீட்சையில் சித்தியடையாமல் விட்டாலும் பக்கத்து வீட்டு பிள்ளை சித்தி அடைந்தால் சந்தோசம் அடைவது இந்த ஆசிரியர் தொழிலில் மட்டும்தான். இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் தி.பரமானந்தம் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் போக்கட்டி அ.த.க பாடசாலையின் ஆசிரியர் தின நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை வித்தியாலயத்தில் முற்பகல் 10 மணியளவில் அதிபர் தி.அபராஜின் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
பிள்ளைகளுக்கு அடிப்பதில்லை உண்மையில் நாம் அடிவாங்கித்தான் படித்தோம் இப்போது பிள்ளைகளுக்கு அடித்தால் அவர் உள்ளே போக வேண்டும் அப்படியான காலம் இப்போது. இது பிள்ளைகளுக்கு சாதகமாக அமைந்துவிட்டதை காணக் கூடியதாக வுள்ளது. பாடசாலை மாணவர்களிடையே போதைப் பொருள் . மது போன்றவற்றின் பாவனை அதிகரித்து காணப்படுகிறது. இது அவர்களை அடித்து திருத்தாமையால் வந்த விளைவாகவும் கூட இருக்கலாம் . எனவே அதனைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு பெற்றோர்களிடம் இருக்கிறது.
ஆசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள் தனிய புத்தகக் கல்வி மட்டும் மாணவர்களுக்கு போதாது சமூகத்துடன் தொடர்புடைய சில நல்ல விடயங்களையும் அவர்களுக்கு புகுத்த வேண்டும்
பெற்றோர்கள் நாடகம் பார்ப்பதை குறைத்து கொள்ளுங்கள் சின்னத்திரை நாடகங்கள் சமூகத்தை மாற்றி கொண்டு செல்கிறது. எப்படி மற்றவர்களை அழிப்பது குடும்பத்தை குலைப்பது என ஒரு வீதமாவது எங்கள் மனதிலும் பதிகிறது இந்த நாடகங்கள். தேவையில்லாது நாடகங்களை பார்ப்பதைவிடுத்து பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்த பெற்றோர்கள் முன்வர வேண்டும். என்றார்.
நிகழ்வில் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலர் ம. மயூரன். ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஜ-159)

## தொழில் வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொழில்வாய்ப்பற்றவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்குடன் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் தொழில் நிலையத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் செயற்றிட்டத்துக்கு அமைவாக, தனியார் நிறுவனம் ஒன்றில் 300 வரையிலான தொழில் வெற்றிடங்களுக்கான ஆள் சேர்ப்பு செய்யப்படவுள்ளனர். அதற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. நேர்முகத் தேர்வில், க..பொ.த சாதரண தரம் வரை கல்வி கற்றவர்கள் , 18-27 வயதுக்குட்பட்ட பெண்கள் மற்றும் 18- 27 வயதுக்குட்பட்ட ஆண்கள் பங்குபற்றலாம். மேலதிக விவரங்களை 0212219359 என்ற தொ லைபேசி ஊடாக பெற்றுக் கொள்ள முடியும் என்று மாவட்ட மேலதிக செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (க)





முல்லைத்தீவு தண்ணீரூற்று பகுதியில் அமைந்துள்ள வித்தியா கல்வி நிலையத்தில் ஆசிரியர் தின நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் வடமாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மற்றும், உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர் கலந்து கொண்டு ஆசியர்களுக்கு மதிப்பளித்தனர். மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (க-246)

# மன்னார் வலய ஏற்பாட்டில் முழுநிலா கலை நிகழ்வுகள்





மன்னார், ஒக். 14
மன்னார் கல்வி வலயத்தின் முழு நிலா கலை நிகழ்வுகள் நானாட்டான் டிலாசால் கல்லூரியில் நேற்றுமுன்தினம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.
மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஜெ.பிரட்லி தலைமையில் நடைபெற்ற இந்த முழு நிலாக் கலை நிகழ்வில் மன்னார் வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களின் மாகாண கீதம், இஸ்லாமிய கலாசார நிகழ்ச்சி(ஹஸீதா), நாட்டாரிசை, கோலாட்டம், சிறுவர் நாடகம், குழு நடனம், தாளலயம், தமிழிசை போன்ற பண்பாட்டு நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டன.
கலை விழா நிகழ்வின் சிறப்பம்சமாக கடந்த காலங்களில் மன்னார் வலயத்தில் கல்வி பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டனர்.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் யூட் பற்றிக் சுரேந்திரன் மதிப்புறு விருந்தினர்களாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர்களாகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற மனுவேல் ஆபெல் ரெவல் மீரா முகைதீன், முகம்மது சயான், திருமதி செலின் சுகந்தி செபஸ்ரியான் போன்றோர் கலந்து கொண்டனர்.
மன்னார் வலயத்துக்கு உட்பட்ட கோட்டக்கல்வி அலுவலர்கள் வடக்கு மாகாண ஆசிரிய ஆலோ சகர்கள் அனைத்துப் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டிருந்தனர். ஐப்பசி மாத கலை விழா நிகழ்வுக்கு ஏற்பாடுகளை டிலாசால் கல்லூரி அதிபர் அருட்சகோதரர் விஜயதாஸ் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் மிகவும் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தனர். (து-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டை வெடித்தது ஸஹ்ரானல்ல அரசமைப்பின் 19 ஆவது திருத்தமே

## கல்முனையில் ஹிஸ்புல்லா முழக்கம்

*மட்டக்களப்பு, ஒக். 14*

**19 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டால் நாட்டுக்கு அச்சுறுத்தல். பாதுகாப்புக்குப் பெரும் கேடு என்று பலரும் தெரிவித்தோம். அதையும் மீறிக் கொண்டுவந்தனர். ஆனால் நடத்தது என்ன? குண்டை வெடிக்க வைத்தது ஸஹ்ரானல்ல 19 ஆவது திருத்தமே இவ்வாறு தெரிவித்தார் அரச தலைவர் வேட்பாளரான ஹிஸ்புல்லா.**

காத்தான்குடியில் அண்மையில் இடம்பெற்றதேர்தல்பரப்புரைக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1990ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலின்போது அரசே எம்மிடம் ஆயுதங்களைத் தந்தது. அவற்றைக்கொண்டேமுஸ்லிம்களைப் பாதுகாத்தோம். ஆகவேதான் இன்று இந்த மண்ணில் சுதந்திரமாக வாழ்கின்றோம்.

19ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டால் நாட்டுக்கு அச்சுறுத்தல். பாதுகாப்புக்குப்பெரும்கேடுஎன்று பலரும் தெரிவித்தோம். அதையும் மீறிக் கொண்டுவந்தனர். ஆனால் நடத்தது என்ன?. குண்டை வெடிக்க வைத்ததுஸஹ்ரானல்ல. 19ஆவது திருத்தமே.

உலகம் முழுவதும் ஜனாதிபதி ஆட்சிமுறை இருப்பது சிறுபான்மை இனங்களின் பாதுகாப்புக்காகத் தான். முஸ்லிம்களிடம் 14 லட்சம் வாக்குகள் உள்ளன. சஜித்தோ அல்லது கோத்தாவோ எவர் அரச தலைவராகவரவேண்டுமானாலும் முஸ்லிம்களிடம் வரவேண்டும். முஸ்லிம்கள் இல்லாமல் அவர்களின் வாக்குகள் இல்லாமல் எவராலும்அரசதலைவராகவரமுடியாது.

ஏப்ரல் தாக்குதல் பற்றி எச்சரிக்கை வந்தபோது அரச தலைவர், தலைமை அமைச்சர், பாதுகாப்புச் செயலர் என அனைவரும் படுத்துறங்கி விட்டு, இப்பொழுது ஸஹ்ரானை தெரியுமா என்கிறார்கள். இது பைத்தியக்காரத்தனம். நாங்களா குண்டை வைத்தோம்? அரசு என்ன செய்தது?

என்னைப் படுகொலைசெய்ய பன்னாட்டு அளவில் பாரிய வலைப்பின்னல்பின்னப்பட்டுள்ளது. என்னைப் பொறுத்த வரையில் 2000ஆம் ஆண்டே நான் உயிரிழந்துவிட்டேன். அதன் பின்னரான ஒவ்வொரு நாளும் எனக்கு போனஸ் தான்.



30வருடங்கள்அரசியலில்இருந்த எனக்கு அரச தலைவர் தேர்தலில் போட்டியிட பைத்தியமா?. அரச தலைவராகும் எண்ணம் எனக்கில்லை. எவர் அரச தலைவராக வந்தாலும் நான் அமைச்சராக வருவேன் - என்றார்.

(ம)

# மக்கள் தவறை உணர்ந்ததால் பெரமுன பலமாக மாறியுள்ளது

## *ஏக்கநாயக்க தெரிவித்தார்*

கொழும்பு, ஒக்.14

2015ஆம்ஆண்டுதேர்தலில் தாங்கள் செய்த தவறை மக்கள் இன்று உணர்ந்துள்ள காரணத்தால்தான் சிறிலங்கா பொதுமக்கள்முன்னணி பலமானதொருகட்சியாக மாற்றமடைந்துள்ளது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்சி.பி.ஏக்கநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் 30 வருடங்களாகநீடித்தபோரைநிறைவுக்குக்கொண்டுவர இராணுவத்தினர் மேற்கொண்ட செயற்பாடுகளையும் அவர்களின் தியாகங்களையும் நாம் மறக்கவில்லை.

2005ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச அரச தலைவர் தேர்தலில் களமிறங்கியபோது, மக்கள் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்றுமட்டும்தான்விரும்பினார்கள். அவரிடமிருந்து வேறு எந்தவொரு சலுகையையும் மக்கள் எதிர்ப்பார்க்கவில்லை.



அதனால்தான் கோத்தபாய ராஜபக்சவால் போரை நிறைவுக்குக் கொண்டுவர முடியுமாக இருந்தது. அத்தோடு நாம் கடந்த காலங்களில் பெரும் அபிவிருத்தி செயற்பாடுகளையும் மேற்கொண்டோம்.

இதுவும் கோத்தபாய ராஜபக்ச தலைமையில்தான் இடம்பெற்றது. அந்தக் காலத்தில் நாம் மிகவும் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்து வந்தோம்.

அவர்கள் மேற்கொண்ட செயற்பாடுகளை நாம் பிற்காலத்தில் மறந்து விட்டோம். அதனால் தான் நாம் 2015 ஆம் ஆண்டுதேர்தலில்தோல்வியடைந்தோம். தற்போதுசுதந்திரக்கட்சியிலிருந்துதனித்துசிறிலங்கா பொதுமக்கள்முன்னணி என்ற கட்சியை ஆரம்பித்துள்ளோம்.

இந்தக் கட்சி இன்னும் சிறிது காலத்திலேயே இலங்கையின் பலமானதொரு கட்சியாக மாற்றமடையும்.

மக்கள், தாங்கள் செய்த தவறை உணர்ந்த காரணத்தினால்தான்குறுகிய காலத்திலேயேஇவ்வாறானதொரு வளர்ச்சியை அடைய முடியுமாக இருந்தது. - என்றார்.

(எ)

## கோத்தாவுக்கு ஆதரவு வழங்க இ.தொ.க. முடிவு

கொழும்பு, ஒக்.14

நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்கும் என்று அறிவித்துள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தேசிய சபைக் கூட்டத்தை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அந்தக் கட்சியின் நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் பல்வேறு அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தியிருந்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் 32 பிரச்சினைகளை முன்னிறுத்தியே, எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவை இ.தொ.கா. எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. (எ)

# போரின் வலியில் இருந்து வடபகுதிவிடுபடவேண்டும்

## ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவிப்பு

போரின் வடு, வலி, துன்பம், இன்னமும் எமது மக்களிடம் தொடர்ந்து கொண்டுள்ளது. அதிலிருந்து வெளிவருவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும் இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் எண்ணக்கருவில், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்ற வீதிப் பாதுகாப்பு வாரத்தின் இறுதி நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரின் வடு வலி துன்பம் இன்னமும் எமது மக்களில் குடிகொண்டுள்ளது. அதில் இருந்து வெளிவருவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். போரின் வலிகளில் இருந்து மீண்டெழ நாம் அனைவரும் திடசங்கற்பம் பூண வேண்டும். படித்தவர்கள், பாமரர்கள் என்று அனைத்துத் தரப்பினரும் ஒன்றுசேரும்போது தான் இது சாத்தியமாகும்.

யாழ்ப்பாண ஊடகங்கள் உலகத்தரம் வாய்ந்தவையாக அமையவேண்டும். இங்கு 13 லட்சம் பேர் வாழ்கின்றனர். இந்த இடத்தில் 13 கோடி சோகக் கதைகள் உள்ளன. அதை நீங்கள் உலகத்துக்குக் காட்டவேண்டும். அதற்கு நான் உங்களுக்க உதவி செய்வேன் - என்றார். (ம-7)

# நாமலின் ஊடகப் பிரிவின் கீச்சக பக்கத்துக்கு தடை!

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் ஊடகப் பிரிவின் கீச்சக கணக்கு அந்த சமூக ஊடக நிறுவனத்தால் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அந்தக் கணக்கில் நுழைபவர்களுக்கு, கீச்சக நிறுவனத்தின் விதிமுறைகளை மீறியதால் இந்தக் கணக்கு இடை நிறுத்தப்பட்டுள்ளது என்ற அறிவித்தல் காண்பிக்கப்படுகிறது. இந்த கீச்சக கணக்கை மீளவும் செயற்பட வைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று நாமல் ராஜபக்சவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ)

# ஐ.தே.கவை காக்கவே சந்திரிகா கோத்தபாயவை எதிர்க்கிறார்

## *சேமசிங்க கூறுகின்றார்*

ஐக்கிய தேசிய கட்சியை காப்பாற்றுவதற்காகவே முன்னாள் அரசதலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சிறிலங்கா பொது மக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு சுதந்திரக்கட்சி ஆதரவு தெரிவித்துள்ளமைக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சந்திரிகா குமாரதுங்கவுக்கு முன்னர் இருந்த தலைவர்கள் உண்மையில் அந்த கட்சியை சிறப்பாக வழிநடத்தினர். ஆனார் இவர் அந்த கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்றதன் பின்னர் ஐக்கிய தேசிய கட்சியை காப்பாற்ற முயற்சித்து சுதந்திரக் கட்சியை பலமிழக்கச் செய்துவிட்டார்.

மகிந்த ராஜபக்ச தலைமைத்துவம் ஏற்ற பின்னர் அந்த கட்சி மீண்டும் பலமடைந்தது. பின்னர் 2015 ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலின் போது சுதந்திர கட்சி எடுத்த தவறான முடிவின் காரணமாக மீண்டும் பிளவடைந்தது. எனினும் எடுத்த முடிவு தவறு என்று உணர்ந்ததன் பின்னர் தேசிய அரசாங்கத்திலிருந்து விலகுவதாக சு.க எடுத்த முடிவும், தற்போது பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்து செயற்படப் போவதாக எடுத்துள்ள முடிவும் சிறந்த முடிவாகும். இதன்மூலம் சு.க மீண்டும் பலமான கட்சியாக கட்டியெழுப்பப்படும்.

ஆனால் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க இதனை தடுப்பதற்கே முயற்சிக்கின்றார் என்றே தோன்றுகிறது. எவ்வாறிருப்பினும் அவரால் இவ்வாறான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டாலும் சு.க எடுத்த முடிவில் உறுதியாக இருக்கும் என்று நம்புகின்றோம். எனவே அவர் கூறும் விடயங்களை நாம் ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை. - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பரப்புரைப் பதாகைகளை அகற்ற தேர்தல்கள் ஆணைக்குழு பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.14

உள்ளூராட்சி மன்றங்களுக்குட்பட்ட மின் கம்பங்கள், தொலைத் தொடர்புக் கம்பகங்களில் காணப்படும் தேர்தல் விளம்பரப் பதாகைகளை அகற்றுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு பணித்துள்ளது. உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்களுக்கு இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அரச தலைவர் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், தேர்தலையொட்டி சிறிய உள்ளூராட்சி சபைகள் தமது எல்லைக்குட்பட்ட கம்பங்களில் காணப்படும் சிறிய விளம்பரங்களைத் தொழிலாளர்கள் மூலம் அப்புறப்படுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

வரும் அரச தலைவர் தேர்தலில் தேர்தல் பிரசார நடவடிக்கை தொடர்பாக அரசியல் கட்சிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் தங்கள் கட்சி சார்பான சிறிய அளவிலான தேர்தல் பிரசார விளம்பரங்கள் மற்றும் தங்கள் கட்சி சார்பான பல்வேறு அலங்காரங்கள் என்பன வற்றை அரச நிறுவன வளாகங்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள முதன்மை வீதிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பிரசார நடவடிக்கை முற்றிலும் சட்டவிரோதமானது எனவே ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் இதுபோன்ற விளம்பரங்களைக் குறித்த உள்ளூராட்சி மன்றங்களின் தொழிலாளர்களை அனுப்பி நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ -9)

# எல்பிட்டிய சபை வெற்றி பாதிப்பை ஏற்படுத்தாது

*அஜித் பி பெரேரா தெரிவிப்பு*



கொழும்பு, ஒக்.14

எல்பிட்டிய தேர்தலின் ஊடாக மக்கள் கூற முற்பட்ட செய்தியை நாம் புரிந்துக்கொண்டுள்ளோம் என்று இராஜாங்க அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல்கள் முடிவுகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் புதிய பயணத்தை தற்போது முன்னெடுக்க உள்ளோம். எல்பிட்டிய தேர்தல் முடிவுகளை நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

இதன் ஊடாக மக்கள் கூற முற்பட்ட செய்தியையும் நாம் புரிந்துக்கொண்டுள்ளோம். இந்தக் குறைகளை நிவர்த்தி செய்து பயணிக்க வேண்டும் என்பதுதான் எமது குறிக்கோளாகும். எல்பிட்டிய போன்று இந்த நாட்டில் 330 தொகுதிகள் காணப்படுகின்றன. எல்பிட்டிய என்பது இதில் ஒன்றாகும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர், சிறிலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்துக் கொண்டு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டாலும், சுதந்திரக் கட்சியின் பிரதேசசபை உறுப்பினர்கள் என்றும் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இந்த வெற்றி அரச தலைவர் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தாது. - என்றார். (எ)

# எல்பிட்டிய சபை வெற்றியை பெரிதாகக் கருத முடியாது

*நளின் பண்டார தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.14

எல்பிட்டிய தேர்தலில் மகிந்த ராஜபக்சவினர் பெற்றுக் கொண்ட வெற்றியை, அரசியல் தெரிந்த எவரும் பெரும் வெற்றி எனக் கூறமாட்டார்கள் என பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் முடிவுகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எல்பிட்டிய என்பது இலங்கை அல்ல. அது நாட்டின் சிறியதொரு பகுதியாகும். 2015ஆம் ஆண்டு நடைபெற்ற அரச தலைவர் தேர்தலையும், பொதுத் தேர்தலையும் நாம் வெற்றிக் கொண்டுள்ளோம்.

பிரதேச சபைத் தேர்தல் முடிவுகளை வைத்து ஒட்டு மொத்த மக்களின் நிலைப்பாட்டையும் கணித்துவிட முடியாது. - என்றார். (எ)

# உறுதியான தலைவர் இன்மையே தற்போதைய நிலைக்கு காரணம்

*திசாநாயக்க எம்.பி. கண்டுபிடிப்பு*

கொழும்பு, ஒக்.14

இலங்கையில் உறுதியான தலைவர் ஒருவர் இல்லாது இருப்பதே, நாட்டின் தற்போதைய நிலைமைக்குக் காரணம் என மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எல்பிட்டிய பிரதேசசபை தேர்தலில் வெற்றிப் பெறுக்காட்டுமாறு ஐக்கிய தேசியக் கட்சி சவால் விடுத்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் மேடைகளில் இதனை வென்றுக் காட்டுமாறு கூறினார்கள். நாம் இன்று வெற்றிப் பெற்றுள்ளோம். இந்த வெற்றியை நாம் அரச தலைவர் தேர்தலிலும் பெற்றுக்கொள்வோம். நிச்சயமாக இதுபோன்ற தொரு பெறுபேறுதான் எமக்கு அரச தலைவர் தேர்தலிலும் கிடைக்கும்.

1960களில் இலங்கையைவிட மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த சிங்கப்பூர், தற்போது அசுர வளர்ச்சியடைந்துள்ளது. இதற்கு என்ன காரணம்? அங்கு உறுதியான பலமிக்கதொரு தலைவர் இருந்தார்.

அதேபோல, இலங்கையில் போர் முடிவடைந்தவுடன், நகர அபிவிருத்தி மற்றும் அழகுப்படுத்தும் பொறுப்பை மகிந்த ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்சவுக்கு வழங்கினார். அந்த காலத்தில் ஆசியாவிலேயே அழகானதும், வேகமாக வளர்ச்சியடைந்துவரும் நகரமாக கொழும்பு மாற்றமடைந்தது.

இவையனைத்தையும் இந்த அரசு நிறுத்தியது. அதனால் இன்று இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவை மக்கள் தினமும் உணர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். - என்றார். (எ)

# சீனப்பெண் கைது

கொழும்பு, ஒக்.14

கொழும்பு கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் குடிவரவு குடியகல்வுச் சட்டத்தை மீறி நுழைவிசைவு இன்றி நாட்டில் தங்கியிருந்த சீனப் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் 39 வயதுடையவர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. பொலிஸாரால் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# போதை பொருளுடன் 25 பேர் கைது

கொழும்பு, ஒக்.14

அவிசாவளைதெம்பிலியானபகுதியில் போதைப் பொருளுடன் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்தப் பகுதியிலுள்ள விருந்தகம் ஒன்றில் பேஸ்புக் மூலமாக ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வில் பங்குபற்றியவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

4 பெண்கள் உட்பட 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# சு.கவைப் பாதுகாக்கவே பெரமுனவுடன் இணைவு

*தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.14

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பெறுமதி மற்றும் கௌரவத்தை பாதுகாப்பதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி ஒன்றிணைந்தன என்று தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகப்பூர்வ முகநூல் பக்கத்தில் அவர் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் கூட்டணி அமைத்தமை தொடர்பாக முன்னாள் அரச தலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அனுப்பிய கடிதத்துக்குப் பதில் வழங்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பண்டாரநாயக்கவின் சுதந்திரக் கட்சியை ஆபத்திற்குள்ளாக்குவதற்காக எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி எமது கட்சியின் கொள்கைகளுடன் முரண்படுவதால், கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்குவதற்கு தீர்மானித்தோம்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டு அரசு ஒன்றை அமைப்பதற்கு எடுத்த தீர்மானமே, கடந்த காலங்களில் சிறிலங்கா சுதந்திரக்



கட்சி பின்னடைவை சந்தித்தமைக்கு பிரதான காரணம்.

இந்த இணக்கப்பாடு காரணமாக நாட்டில் முன்னிலையில் இருந்த சிறி லங்கா சுதந்திரக் கட்சி கடந்த 5 வருடங்களில் மூன்றாம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது. அதனால் மத்திய செயற்குழு எடுத்த தீர்மானத்துக்கு அமைய செயற்பட்டுள்ளோம்.

வளமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு கட்சி மற்றும் தனிப்பட்ட அரசியல் கொள்கைகளுக்கு அப்பால் செயற்பட வேண்டும். என்று தெரிவித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இடியுடன் கூடிய மழை பெய்வதற்கு சாத்தியம்

கொழும்பு, ஒக்.14
நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மாலையில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியம் உயர்வாகக் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ, மத்திய, ஊவா, தென், வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மி.மீற்றர் அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல் மற்றும் தென் மாகாணங்களிலும் புத்தளம் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களிலும் கரையோரப் பகுதிகளில் சிறிதளவான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்னல் தாக்கங்களினாலும் பலத்த காற்றினாலும் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அத்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (எ)

# முதுகெலும்பு உள்ள தலைவராக மக்களுக்கு சேவையாற்றுவேன்

## புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.14
நான் ஆட்சிக்கு வந்தால் அதிகாரம் கொண்ட, முதுகெலும்புள்ள அரச தலைவராக மக்களுக்கு சேவையாற்றுவேன். பழைய தாளத்துக்கு ஆடமாட்டேன் என புதிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் பரப்புஜரக் கூட்டங்களில் பிரதான கூட்டமொன்று நேற்று வெள்ளவாய பிரதேசத்தில் இடம்பெற்றது. ஐக்கிய தேசிய கட்சியின் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் மத்தியில் அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

இளம் சமுதாயத்திருக்கு உரிய இடத்தை வழங்க வேண்டும் என்பதும், பெண்கள் பொருளாதார ரீதியில் சிறப்பாக வாழக் கூடிய நிலைமைகளை உருவாக்கிக்கொடுக்க வேண்டும் என்பதே எமது நோக்கம்.

நானும் எனது அரசுமும் பலமானதும் சிறப்பானதுமான இலங்கையை கட்டியெழுப்புவோம். அதில் நாட்டு மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழ முடியும் என்ற வாக்குறுதியை கொடுக்கின்றேன். அதேபோல் தேசிய பாதுகாப்புத் தொடர்பாக அச்சம் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. எனது அரசில் சரத் பொன்சேகா பாதுகாப்பு அமைச்சராக கடமையாற்றுவார். அதேபோல் தேசிய பாதுகாப்பு விடயத்தில் அரச தலைவர் என்ற ரீதியில்நானும்சகலபொறுப்பையும் ஏற்றுக்கொள்வேன். - என்றார். (எ)

# வாக்குறுதிகளை நம்பி எமக்கு வாக்களியுங்கள்

## கோத்தபாய கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.13
நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் நிலையான தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுத்து அனைத்து மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கும் நாம் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்போம். எமது வாக்குறுதிகளை நம்பி மக்கள் எமக்கு வாக்களியுங்கள்.



இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரசதலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அன்று நாம் பயங்கரவாதத்தை ஒழித்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி கட்டியெழுப்பிய நாட்டைப் புதிய அரசு ஆட்சிக்கு வந்து 4 ஆண்டுகளில் நாசமாக்கி விட்டனர்.

போர் முடிவுக்கு வந்து 10 ஆண்டுகளில் மீண்டும் இந்த நாட்டில் பயங்கரவாத அச்சுறுத்தல் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. எமது அரசு எவ்வாறு பயங்கரவாதத்தை இல்லாது யெ்து நாட்டைக் கட்டியெழுப்ப முயங்சிகள் எடுத்ததோ, அதேபோல் அடுத்த உருவாகும் எமது ஆட்சியில் மீண்டும் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம். - என்றார். (எ)

# கோத்தபாயவுடன் பேசுவதில் என்ன நியாயம் இருக்கின்றது?

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கேட்கிறது



யாழ்ப்பாணம், ஒக். 14
மகிந்த மற்றும் கோத்தபாய ராஜபக்சவினர் இன அழிப்பைச் செய்தவர்கள் என்பதால் அவர்களை வெற்றிபெறச் செய்யக் கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறி வந்தனர். அவ்வாறிருக்க, இப்போது கோத்தபாய ராஜபக்சவுடன் பேசுவதில் என்ன நியாயம் இருக்கின்றது? என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கேள்வியெழுப்பியுள்ளது.

இதுவரைக்கும் தாம் சொல்லிவந்த நிலைப்பாடுகளையும் இப்போது எடுத்திருக்கின்ற நிலைப்பாடுகளையும் வெளிப்படுத்த வேண்டுமென்றும் முன்னணி கோரியுள்ளது.

இது பற்றி கட்சியின் பொதுச் செயலர் செ.கஜேந்திரன் யாழ்ப்பாணம் கொக்குவிலிலுள்ள கட்சித் தலைமையகத்தில் அண்மையில் நடத்திய ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

**புறக்கணிப்பு என்பது ஆதரவளிப்பதல்ல**

இந்தத் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டுமென்று நாங்கள் தற்போது கூறுகின்றமை கோத்தபாய ராஜபக்சவை வெல்லவைப்பதற்கே என்று சிலர் எம் மீது குற்றஞ்சாட்டு கின்றனர். தேர்தலைப் புறக்கணிப்பதென்ற எங்கள் நிலைப்பாடு நாங்கள் யாரையும் ஆதரிப்பதாக என்று அல்ல.

அரசதலைவர் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இந்தத் தேர்தலில் எத்தகைய முடிவுகளை எடுப்பது என்பது தொடர்பாகக் கட்சிகளுக்கிடையே பல்வேறுபட்ட வாதப்பிரதி வாதங்கள் நடைபெற்று வருகின்றன.

தேர்தலில் எவரை ஆதரிப்பது? எவரை ஆதரிப்பதில்லை? பொது வேட்பாளரை நியமிப்பது, தேர்தலைப் புறக்கணிப்பது, என்பன குறித்தான கருத்துக்கள் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றன. சில கட்சிகள் தமது நிலைப்பாடுகளை அறிவித்துமுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோத்தபாய ராஜபக்சவுடன் பேசவுள்ளதாகச்செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

**இன அழிப்புச் செய்தோரே கோத்தபாய ராஜபக்சவினர்**

இனஅழிப்பைச் செய்தவர்கள் மகிந்த மற்றும் கோத்தபாய என்று கூறியவர்கள் இப்போது கோத்தபாயவுடன் பேசுகின்றார்கள் என்றால் அதில் என்ன நியாயயம் இருக்கமுடியும் என்பது தெரியவில்லை.

ராஜபக்சவினர் போர்க்குற்றவாளிகள் என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்களும் இல்லை. இவர்கள் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படவேண்டியவர்கள் என்பது தான் எங்களுடைய கருத்து.

**தமிழருக்குச் சார்பாக தேர்தலை மாற்றவேண்டும்**

இங்கு நடக்கும் அரசதலைவர் தேர்தலை தமிழர்களுக்குச் சாதகமாக மாற்றவேண்டுமாக இருந்தால் இவர்களை நிராகரித்து தேர்தலைப் புறக்கணிக்கவேண்டுமென்று தமிழ் மக்களின் நலன்களின் அடிப்படையில் நாங்கள் கடந்த காலத்திலிருந்து இதுவரை காலமும் சொல்லிவருகின்றோம்.

தீவில் நடைபெறும் பூகோள அரசியலின் அடிப்படையில் பன்னாடுகள் தங்கள் சார்பான ஆட்சியைக் கொண்டுவருவதற்கு அல்லது தாங்கள் விரும்புகின்றவர்களை வெல்லவைப்பதற்கு தமிழ் மக்களின் வாக்குகளைப் பயன்படுத்த தொடர்ச்சியாக முயன்று வருகிறார்கள்.

தேர்தல்களைப் புறக்கணித்தால் அந்த சக்திகள் எங்களுடன் பேசி ஒரு முடிவுக்கு வரலாம் என்ற அடிப்படையில் எங்கள் நிலைப்பாடுகளை வெளியிடுகிறோம். எங்களுடைய இந்தநிலைப்பாடுகள் எவரையும் ஆதரிப்பது என்பதல்ல. இந்தப் பூகோளப் போட்டியைப் பயன்படுத்தி எங்கள் தேசத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதே. - என்றார். (கு-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாழனன்று வானூர்தித் தளம் திறப்பு

# இறுதிநேரத்தில் 400 மீற்றர் பாதையை விடுவிக்க மறுக்கிறது பாதுகாப்புத் தரப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14

**யா**ழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் போக்குவரத்துக்காகத் தீர்மானிக்கப்பட்ட கட்டுவன் மயிலிட்டி வீதியின் 400 மீற்றரை அபகரித்துள்ள இலங்கை வான்படை அதனை விடுவிக்க இறுதி நேரத்தில் மறுத்துள்ளது. வீதியை தார் படுக்கையிடும் (காப்பெற்) பணிகள் பாதிப்படைந்துள்ளது.

பலாலி பன்னாட்டு வானூர்தி நிலையம் எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது. பலாலி வானூர்தி நிலையத்துக்கான நுழைவாயில் பலாலி கிழக்குப் பகுதியிலிருந்து மேற்குப் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது. பிரதான நுழைவாயில் கட்டுவன் மயிலிட்டி வீதியில் அமைக்கப்பட்டுவருகின்றது. கட்டுவன்மயிலிட்டி வீதியை இணைக்கும், வல்லை அராலி வீதியில், தெல்லிப்பழை மருத்துவமனையிலிருந்துகட்டுவன்சந்திவரையான வீதிதார் படுக்கை வீதியாக மாற்றப்பட்டுள்ளது. அதேபோன்று மயிலிட்டியிலிருந்து கட்டுவன் சந்தி வரையான வீதியும் தார் படுக்கையாக மாற்றப்பட்டு வருகின்றது. தற்போது இந்த வீதியிலேயேசிக்கல்நிலைமைதோன்றியுள்ளது. இந்த வீதியின் இடை நடுவில், சுமார் 400 மீற்றர் நீளமான வீதி, வான் படையினரின் பாதுகாப்பு வேலிக்குள் சிக்கியுள்ளது. இதனை விடுவிக்க வேண்டும் என்று, பலாலி வானூர்தித் தளம் தொடர்பான அபிவிருத்திக் கூட்டங்களில் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்தது. இதற்கு சாதகமான நிலைப்பாட்டை பாதுகாப்புத் தரப்பு ஆரம்பத்தில் வெளிப்படுத்தியிருந்தது.

தற்போதுஅந்தப்பகுதியிலுள்ள பாதுகாப்பு வேலியை பின்நகர்த்த வான் படையினர் மறுப்பு வெளியிட்டுள்ளனர். அந்த வேலியைச் சுற்றியுள்ள தனியார் காணி ஊடாக போக்குவரத்து தற்போது இடம்பெற்று வருகின்றது. 8 குடும்பங்களுக்குச் சொந்தமான காணி அதில் உள்ளடங்கியுள்ளது. அந்தக்காணிஊடாகதார்படுக்கையை போடுமாறு வான்படையினர் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரைக் கோரியுள்ளதாகத்தெரியவருகின்றது. தனியார் காணி ஊடாக தார் படுக்கை அமைக்க முடியாது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையினர்பதிலளித்துள்ளதாகஅறிய முடிகின்றது. வானூர்தித் தளம் திறப்பு விழா இன்னும் 3 நாள்களில்நடைபெறவுள்ளநிலையில், வான்படையினரின்திீர்முடிவால், வீதிஅபிவிருத்திப்பணிநெருக்கடியில்சிக்கியுள்ளது. (ஒ.ம,105)

## பலாலி ஓடுபாதை ஆய்வுக்கு வருகிறது இந்தியக் குழு



யாழ்ப்பாணம்பன்னாட்டுவானூர்தி நிலையத்தின் ஓடுபாதையை பரிசீலனை செய்து, இந்திய அரசுக்கு இறுதிஅறிக்கையைக்கொடுப்பதற்காக, இந்திய நிபுணர்கள் குழுவொன்று நாளை பலாலிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இந்திய அரசுக்குச் சொந்தமான எயர்இந்தியாவின்துணைநிறுவனமானஅலையன்ஸ்எயர், வானூர்தி யாழ்ப்பாணம்பன்னாட்டுவானூர்தி நிலையத்துக்கான முதலாவது பயணத்தை மேற்கொள்ளவுள்ளது.

இந்த நிலையிலேயே, புதிதாக அமைக்கப்பட்டுள்ளயாழ்ப்பாணம் பன்னாட்டுவானூர்தி நிலையத்தின் ஓடுபாதையை ஆய்வு செய்து, இந்திய அரசுக்கு இறுதியான அறிக்கையைசமர்ப்பிக்கஇந்தியநிபுணர்களின் குழு நாளை யாழ்ப்பாணம் வரவுள்ளது. (ஒ,5)

## பலாலிக்கு அனுப்பப்படும் 15 குடிவரவு அதிகாரிகள்

யாழ்ப்பாணம்பன்னாட்டுவானூர்திநிலையத்தில்பணியாற்றுவதற்காக குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் 15 பேர் பலாலிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையம் எதிர்வரும்வியாழக்கிழமைதிறந்துவைக்கப்படவுள்ளநிலையில், அங்கு குடிவரவு, குடியகல்வு சோதனைகளை மேற்கொள்வதற்காக, 15 அதிகாரிகள் கொழும்பில் இருந்து அனுப்பப்படவுள்ளனர். குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் பி.ரத்நாயக்க இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

பலாலியில் குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கான தங்குமிட வசதிகள் இன்னமும் செய்து கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கான தங்குமிட வசதிகள்செய்துகொடுக்கப்படும்வரை, இராணுவத்தினரால் அளிக்கப்படும் தங்குமிட வசதிகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள் என்றும் அவர் கூறினார். (ஒ,5)

# பரீட்சார்த்த வானூர்திப் பறப்பே வியாழன்றுபலாலியில்நடக்கும்

யாழ்ப்பாணம், ஒக். 14



கோப்புப் படம் அலையன்ஸ் எயர்

யாழ்ப்பாணம்பன்னாட்டு வானூர்தி நிலையத்துக்கு எதிர்வரும்வியாழக்கிழமை சென்னையில் இருந்து பரீட்சார்த்த வானூர்திப் பறப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும்வியாழக்கிழமை யாழ்ப்பாணம்பன்னாட்டு வானூர்தி நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

அன்றைய நாள், சென்னையில் இருந்து அலையன்ஸ்எயர்நிறுவனத்தின் பரீட்சார்த்த வானூர்தி யாழ்ப்பாணம்பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் தரையிறங்கும். அத்துடன் யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் இருந்து, இந்திய நகரங்களுக்கு மேற்கொள்வதற்கு பயணங்களைஆரம்பிக்கமுன்னதாக தயாரிக்கப்பட்ட திட்டத்திலும்மாற்றம்செய்யப்பட்டுள்ளதாகதெரிகிறது.

முன்னதாக யாழ்ப்பாணத்தில் இருந்து புது டில்லி, மும்பை, கொச்சி போன்ற நகரங்களை இணைக்கும் வகையிலானசேவைகளைஆரம்பிக்கவே திட்டமிடப்பட்டிருந்தது. இந்த நகரங்களில், தமக்கு மிகவும் நெருக்கமான தொடர்புடைய, தமிழ்நாட்டில் உள்ளநகரங்கள்விடுபட்டது குறித்து வடக்கில் உள்ள தமிழ் மக்கள் கவலை எழுப்பியிருந்தனர்.

எனினும், யாழ்ப்பாணத்திலிருந்து சென்னை, திருச்சி மற்றும் கொச்சி ஆகிய நகரங்களுக்கு வானூர்திகளை இயக்க அதிகாரிகள்தயாராகிவருவதால், இந்த திட்டம் இப்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகத்தெரிகிறது

'எமது மக்களுடனான தொடர்புகள்காரணமாக, தென்னிந்தியநகரங்களுடன்சேவையைத்தொடங்குவது தர்க்கரீதியான அர்த்தத்தை தருகிறது, ஆனால், வானூர்தி நிறுவனம் எங்களுக்கு ஒரு உறுதிப்பாட்டைக்கொடுக்கும் வரை, எங்களால் பயண மார்க்கத்தை இறுதி செய்ய முடியவில்லை' என்று வானூர்தி நிலைய வானூர்திசேவைகள், நிறுவனத்தின் உதவித் தலைவர் பிரியந்த காரியப்பெரும தெரிவித்துள்ளார்.

எயர் இந்தியாவின் துணை நிறுவனமான அலையன்ஸ்எயர்நிறுவனம், எதிர்வரும் வியாழக்கிழமை சோதனை வானூர்தி சேவைகளை ஆரம்பிக்க முன்வந்துள்ளது. இந்தநிறுவனம்ஒரு வாரத்தில்மூன்றுவானூர்திகளை இயக்கும், பின்னர் தேவைக்கேற்ப சேவைகளை அதிகரிக்கும்என்று, பேச்சுக்களில் பங்கேற்ற இலங்கை அதிகாரிகள் இந்திய ஊடகத்துக்குத் தெரிவித்தனர். (ஒ,5)

### எல்லா ஏற்பாடுகளும் தயார்

## வானூர்திப் போக்குவரத்து அதிகார சபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தை எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பித்து வைப்பதற்கான அனைத்து கள வேலைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக, சிவில் வானூர்திப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எச்எம்சி நிமலசிறி தெரிவித்துள்ளார்.

'எதிர்வரும்17ஆம்திகதிவானூர்திநிலையத்தை இயக்கி வைப்பதற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் நிறைவுசெய்துள்ளோம். இந்தியாவில்இருந்துவாரத்தில் 7 வானூர்திகளை பலாலிக்கு இயக்குவதற்கு இந்திய அரசின் அனுமதியும் கிடைத்துள்ளது. வானூர்தி நிலையத்தின் செயற்பாடுகளை மேற்பார்வையிடுவதற்கு, சிவில் வானூர்திப் போக்குவரத்து அதிகாரசபையின் இரண்டு அதிகாரிகள் ஆரம்பத்தில் பொறுப்பாக இருப்பார்கள்' என்றும் அவர் கூறினார். (ஒ,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக வலைத் தளம் ஊடாக திட்டமிட்ட பண மோசடிகள்

## பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.14

**சமூக வலைத் தளங்கள் ஊடாக மக்களை ஏமாற்றி பண மோசடியில் ஈடுபடும் திட்டமிட்ட வர்த்தகர்கள் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

சமூக வலைத்தளங்கள் ஊடாக மக்களை அணுகி நம்பிக்கையை வளர்த்து அதன் பின்னரே அவ்வாறானவர்கள் பண மோசடியில் ஈடுபடுகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

பல்வேறு நாடுகளில் நடத்தப்படும் அதிர்ஸ்ட இலாபச் சீட்டு குலுக்கலின் மூலம் பணம் கிடைத்துள்ளது என்றும், அரச சார்பற்ற நிறுவனங்களூடாக பணம் வழங்கப்படுகின்றது என்று தெரிவித்து இந்த மோசடி இடம்பெறுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மிக பெறுமதியான சொத்து அல்லது பணத்தை சுங்க பிரிவுக்கு அனுப்பியுள்ளதாகவும் அவற்றை பெறுவதற்கு ஆரம்ப கட்டணமாக ஒரு தொகை பணத்தை அறவிடுவதாகவும் ஆகவே குறித்த பணத்தை தமது வங்கி கணக்கில் வைப்பிடுமாறும் கேட்டு இந்த மோசடி இடம்பெறுகின்றது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இந்த மோசடிகாரர்கள் கடந்த மாதம் 5 ஆம் திகதி நிட்டம்புவ பகுதியை சேர்ந்த ஒருவருடன் முகப்புத்தகத்தில் அறிமுகமாகி விமான நிலையத்தில் இருந்து பொருள்கள் சிலவற்றை விடுவிக்க 2 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பணம் தேவை என கூறி அவரிடம் இருந்து பணத்தை பெற்று மோசடி செய்துள்ளார் என்று அவர் தெரிவித்தார்.

அதனால் பொறுப்பான நிறுவனம் என உறுதிப்படுத்திக்கொண்டதன் பின்னர் அவர்களுடன் பணம் அல்லது வேறு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர மக்களை கேட்டுள்ளார். (எ)

# குழந்தையின் சாவில் சந்தேகம்

மன்னார் மருத்துவமனையில் உயிரிழந்த ஒரு வயதுக் குழந்தையின் சாவில் சந்தேகம் இருப்பதாகப் பெற்றோர் விசாரணையின் போது தெரிவித்தனர். இதனையடுத்து, உடற்கூற்று மேலதிக விசாரணைகளை கொழும்பில் முன்னெடுக் குமாறு, மன்னார் சட்டமருத்துவ அதிகாரிக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி பணிப்புரை விடுத்தார்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரியின் விசாரணையின்போது குழந்தையின் தாயார் தெரிவித்ததாவது:

கடந்த வியாழக்கிழமை பேசாலை மருத்துவமனையில் குழந்தைக்கு தடுப்பு ஊசி போடப்பட்டது. மறு நாள் மூச்சுத் திணறல் ஏற்பட்டது. பேசாலை மருத்துவமனையில் குழந்தையைச் சேர்த்தேன். மேலதிக சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு குழந்தை அனுப்பி வைக்கப்பட்டது. குழந்தை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டது. பின்னர், 7ஆம் இலக்க விடுதியில் வைத்து சிகிச்சை வழங்கப்பட்டது. நேற்றுமுன்தினம், கண்டிக்கு குழந்தையை சிகிச்சைக்காக அழைத்துச் செல்ல வேண்டும் என்று கூறப்பட்டது. குழந்தைக்கு மயக்க ஊசியும் போட வேண்டி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் நண்பகல் என்னிடமிருந்து குழந்தையைக் கொண்டு சென்ற பின்னரே அவள் உயிரிழந்துள்ளாள், என்றார். இது தொடர்பில் மன்னார் மருத்துவமனையின் பதிலை உடனடியாகப் பெறமுடியவில்லை. (ஒ.5.60)

# ஹிஸ்புல்லாவை களமிறக்கியது வாக்குகளைப் பிரிக்கும் சதி

## ஹக்கீம் காட்டம்

கொழும்பு, ஒக். 14

முஸ்லிம் வேட்பாளர் ஒருவரை அரச தலைவர் தேர்தலில் களமிறக்கியது முழுமையான சதித் திட்டமே. இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பாதுகாப்பு விடயத்தில் சஜித் பிரேமதாசவின் செயற்பாடுகள் முழுமையாக இருக்கும் என்பதை உறுதிப்படுத்த முடியும். அத்துடன் முஸ்லிம் வேட்பாளர் ஒருவர் தேர்தலில் போட்டியிடுவது முஸ்லிம் வாக்குகளை திசைதிருப்பும் நோக்கத்தில் முன்னெடுக்கும் செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம். இது ஒரு சதித்திட்டமே தவிர வேறு ஒன்றும் இல்லை.

முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உட்பட ஏனைய பிரதான முஸ்லிம் தலைமைகள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு அணியாக தீர்மானம் எடுத்துள்ள நிலையில் நாம் இணைந்துள்ள அணியை பலப்படுத்துவதை விடுத்து ஏனைய ஒரு அணிக்காக துணை போவது முஸ்லிம் வாக்குகளை திசைதிருப்ப வேண்டுமென்றே முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படும் வேட்பாளரை ஆட்சிக்கு கொண்டுவரும் நோக்கத்தில் எடுக்கும் சதித்திட்டமாகும், என்றார் ஹக்கீம். (ஒ.5)

# சிறுபான்மையினரின் வாக்குகளை பிரிக்கவே அதிக வேட்பாளர்கள்

## சி.வி.விக்னேஸ்வரன் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 14

சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பிரிப்பதற்காகவே அரச தலைவர் தேர்தலில் சிலர் வேட்பாளர்களாக திட்டமிட்டுக் களமிறக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலர் நாயகமுமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

'நாட்டில் இம்முறை அதிகளவானோர் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுகின்றனர். அதில் முக்கியமான சிலரை விட ஏனையோர் வேறு காரணங்களுக்காக போட்டியிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருப்பார்கள் என்று நம்புகின்றேன். குறிப்பாக சிறுபான்மையினரின் இடங்களில் சிலரை களமிறக்கி அவர்களின் வாக்குகளை பிரிப்பதற்கான ஒரு தந்திரோபாயம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவே தோன்றுகின்றது.

இதனை யார் செய்கின்றார்கள் என்று கூற முடியாது. தேர்தலில் மூன்று முக்கிய கட்சிகள் தான் உள்ளன. ஏனையோர் சிறுபான்மையினரின் வாக்குகளைப் பிரிப்பதற்காக போட்டியிடுவதாகவே நான் பார்க்கின்றேன்' என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

# நீதிக்காகப் போராடிக் கொண்டிருப்போர் கோத்தாவின் கருத்தால் பயப்பீதியில்

கொழும்பு, ஒக். 14

நவம்பர் 17ஆம் திகதி சிறையிலுள்ள இராணுவத்தினர் அனைவரையும் உடனடியா விடுதலை செய்வேன் என்று பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச பரப்புரைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளமை குறித்து மகிந்த ராஜபக்ச அரசின் காலத்தில் பாதிக்கப்பட்டு நீதிக்காக போராடிக்கொண்டிருக்கும் குடும்பங்களை சேர்ந்தவர்கள் கவலையும் அச்சமும் வெளியிட்டுள்ளனர்.

கோத்தபாய அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டால் தனது கணவர் குறித்த விசாரணைகள் முற்றாக கைவிடப்படலாம் என்று காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொட தெரிவித்துள்ளார்.

நான் நேரடியாக ராஜபக்ச குடும்பத்துக்கு எதிராகவே போராடுகின்றேன் என்பதால் எனக்கும் எனது பிள்ளைகளுக்கும் ஆபத்து என்று தெரிவித்துள்ள அவர் படையினர் எந்த குற்றத்தையும் செய்யலாம் அதற்கான தண்டனையை அனுபவிக்கவேண்டியதில்லை என்ற அபிப்பிராயத்தை கோத்தபாய ராஜபக்ச உருவாக்குகின்றார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட டிலான் ஜலாம்டீனின் தாய் ஜெனீபர் வீரசிங்கவும் கோத்தபாய ராஜபக்சவின் பரப்புரை அறிவிப்பு குறித்து அச்சம் வெளியிட்டுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ச விடுதலை செய்ய முயல்பவர்களே எனது மகனை கடத்தினார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்சவின் அறிவிப்பு இலங்கையின் உண்மையான படையினரை அவமதிக்கும் ஒரு நடவடிக்கை எனவும் குறிப்பிட்டுள்ள ஜெனீபர் வீரசிங்க கோத்தபாய ராஜபக்சவின் தேர்தல் அறிவிப்பின் மூலம் படையினர் தாங்கள் நினைத்ததையெல்லாம் செய்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று கூறவருகின்றாரா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

கோத்தபாய ராஜபக்சவின் தேர்தல் வாக்குறுதி அவர் நீதித்துறையை மதிக்கவில்லை அதற்கு அஞ்சவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றது எனவும் ஜெனிவர் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

படையினரை சட்டத்தின் பிடியிலிருந்து பாதுகாக்க கூடிய பாதுகாவலர் ஒருவர் இருப்பதால் படையினர் ஆள்கடத்தலில் கொலைகளில் ஈடுபடலாம் என்று கோத்தபாய ராஜபக்ச தெரிவிக்க முயல்கின்றாரா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தனது மகனை கடத்தியவர்கள் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் தான் வெளிப்படையாக தகவல்களை வெளியிட்டுள்ளதால் எதிர்காலத்தில் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். என்னால் இந்த நாட்டில் தொடர்ந்தும் வாழ முடியுமா என்று தெரியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டால் தான் சட்டத்தையும் நீதித்துறையின் நடவடிக்கைகளையும் தனது கரங்களில் எடுத்துக்கொள்வேன் என்பதையே கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார் என்று வெலிக்கடை சிறையில் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினரின் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி சேனக பெரேரா தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் ஒருவர் நீதித்துறையின் நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது, இது மிகவும் ஆபத்தான அறிக்கை, இதன் மூலம் அரச தலைவர் தான் எப்படி நாட்டை ஆளுவேன் என்பதை அவர் வெளிப்படுத்தியுள்ளார் எனவும் சட்டத்தரணி சேனக பெரேரா தெரிவித்துள்ளார். (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 மணி...

நேற்றைய கலந்துரையாடலில் கட்சிகளிடையே இணக்கப்பாடு ஏற்படும் சூழல் தோன்றியதாகவும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி திடீரென, புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான இடைக்கால அறிக்கையை நிராகரிக்கின்றோம் என்ற வாசகத்தைச் சேர்க்க வேண்டும் என்று கூறியதால் குழப்பம் ஏற்பட்டதாகவும், கூட்டத்தில் பங்கேற்ற ஏனைய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கருத்தை அறிவதற்கு, அந்தக் கட்சியின் செயலர் செ. கஜேந்திரனைத் தொடர்புகொண்டபோதும் பதிலளிக்கவில்லை.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் கலந்துரையாடல் பிரைர்இன் விருந்தினர் விடுதியில் நேற்று மாலை 5 மணிக்கு ஆரம்பமானது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன், புளொட் சார்பில் கட்சித் தலைவர் த.சித்தார்த்தன், பா.கஜதீபன், ரெலோ சார்பில் கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன், செயலர் சிவசக்தி ஆனந்தன், தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் க.அருந்தவபாலன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் கட்சித் தலைவர் கஜேந்திரகுமார்பொன்னம்பலம், செயலர்செ.கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணி க.சுகாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்களுக்கு மேலதிகமாக, மதத் தலைவர்கள், சிவில் அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் எனச் சிலரும் பங்கேற்றனர்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆறும் முன்வைத்த ஆவணத்தின் அடிப்படையில், பல்கலைக்கழக மாணவர்களால் இறுதி ஆவணமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த ஆவணத்தை பிரதான வேட்பாளர்களிடம் சமர்ப்பித்து, அதற்கு சம்மதம் தெரிவிப்பவருக்கே ஆதரவளிக்க வேண்டுமென பல்கலைக்கழக மாணவர்கள் குறிப்பிட்டனர். ஆனால் அந்த வரைவின் உள்ளடக்கத்தில் கட்சிகளுக்கு இடையில் இணக்கப்பாடு எட்டப்பட வில்லை.

இதில் மாற்றங்கள் செய்யப்பட்டன. தொடர்ச்சியாக பல மாற்றங்களை கட்சிகள் மேற்கொண்டன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியே பல மாற்றங்களை மேற்கொண்டதாக கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த வரைவை பொது வேட்பாளர்கள் ஏற்காத பட்சத்தில், அடுத்தது என்ன செய்வதென்பதையும் ஆலோசிக்க வேண்டுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடாப்பிடியாக நின்றது. அதை அடுத்த கட்டமாக ஆராயலாம், இப்பொழுது நிபந்தனைகளை குறிப்பிடுவோம் என்று மற்ற கட்சிகள் குறிப்பிட்டதால், அந்த விடயத்தில் அமைதியாகிய முன்னணி, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசமைப்பின் ஒற்றையாட்சி இடைக்கால வரைவை நிராகரிப்பதாக ஆவணத்தில் குறிப்பிடப்பட வேண்டுமென அடுத்த விடயத்தைக் கிளப்பியது. இதற்கு ஏனைய கட்சிகள் கடும் எதிர்ப்பு வெளியிட்டன. இதனையடுத்து இணக்கப்பாடு குழம்பியது.

இறுதி வரைவை தயாரித்து நாளை (இன்று) காலை 6 கட்சிகளுக்கும் மாணவர் ஒன்றியம் அனுப்பி வைக்கும் என்றும், அதனை ஏற்றுக் கொள்ளும் கட்சிகள் நாளை (இன்று) மதியம் 1.30 மணிக்கு அதில் கையெழுத்திடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ,5,105)

## கோத்தபாயவின்...

றைச் செய்வதற்காக தென்னிலங்கையைச் சேர்ந்த இளையோர் சுமார் 60 பேர் வரையில் வடக்கில் களமிறக்கப்பட்டுள்ளனர். இவர்கள் யாழ்ப்பாண நகரில் வீடுகளை வாடகைக்கு எடுத்துத் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அரச தலைவர் தேர்தல் பரப்புரைகள் நிறைவடைவதற்கு இன்னமும் ஒரு மாதமே எஞ்சியுள்ளது. பிரதான வேட்பாளர்கள் தமது பரப்புரைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் மக்களினது வாக்குகள் முக்கியம் என்பதால் அதனைக் குறிவைத்து தமது பரப்புரைகளை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளனர்.

கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்குவதாக வடக்கைச் சேர்ந்த சில கட்சிகள் பகிரங்கமாக அறிவித்துள்ளன. அதனை விட சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் பிராந்தியப் பணிமனைகளும் வடக்கில் சில இடங்களில் திறக்கப்பட்டுள்ளன. இவர்கள் ஊடான பரப்புரைகளை முன்னெடுக்க, வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர்கள் களமிறங்கியுள்ளனர். இதற்கு மேலதிகமாக, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களும் வடக்குக் களத்தில் குதித்துத்துள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பயிலும் சிங்கள மாணவர்களும், கோத்தபாயவுக்கு ஆதரவான பரப்புரையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். வடக்கின் மூலைமுடுக்கெல்லாம் பரப்புரைபணிகள்தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதனைத் தவிர, தென்னிலங்கையைச் சேர்ந்த இளையோர் 60 பேர் வடக்கில் இறக்கப்பட்டுள்ளனர். கோத்தபாயவுக்கு ஆதரவான பரப்புரைச் சுவரொட்டிகள் ஒட்டுவது முதல் துண்டறிக்கை விநியோகிப்பது வரையில் இவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். இவர்கள் யாழ்ப்பாண நகரில் வீடுகளில் வாடகைக்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர். கோத்தபாய ராஜபக்ச, தமிழ் மக்களின் வாக்குகளை எப்படியாவது பெற்றுக் கொள்வதற்காக இந்தப் பணிகளில் நேரடியாக ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ,5)

## தமிழர்...

தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களை இரண்டு நாள்களுக்கு முன்னர், ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச சந்தித்துப் பேசியிருந்தார். இந்த நிலையில், எதிர்க்கட்சித் தலைவரும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவருமான மகிந்த ராஜபக்ச, தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களை தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுக் காலை சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தல் முடிவுகளில் நாங்கள் வெற்றிபெற்றுள்ளோம். அந்த முடிவுகள், அரச தலைவர் தேர்தலில் வரப்போகும் முடிவுகளை கட்டியம் கூறியுள்ளது. அரசியல் பிரச்சினைகளுக்கு அப்பால் தெற்கில் உள்ள மக்களும் வடக்கில் உள்ள மக்களும் ஒரே பிரச்சினையையே எதிர்கொள்கின்றனர். ஒரே வகையான பொருளாதார பிரச்சினைகளே உள்ளன. பொருளாதாரத்தில் அவர்கள் [illegible] யிகள், பட்ட[illegible], மீனவர்கள், விவசாயிகள் உள்பட்ட எல்லாச் சமூகத்தினர் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். தமிழ் வர்த்தகர்கள் நான்கு பேர் தமது வர்த்தக பின்னடைவு காரணமாக அண்மையில் தற்கொலை செய்து கொண்டதாக என்னிடம் சொல்லப்பட்டது.

அரசியல் தீர்வு குறித்து நாங்கள் எமது தேர்தல் அறிக்கையில் சொல்வோம். பல தரப்பினருடன் நாங்கள் பேசிவருகிறோம். தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடன் கூட நான் அண்மையில் பேசினேன். அது உத்தியோகபூர்வமற்ற சந்திப்பு என்றாலும் கட்சிக்கு அறிவுத்துவிட்டே சுமந்திரன் என்னைச் சந்தித்தாக அறிந்தேன். நாங்கள் எங்களது கொள்கைகளை முன்வைத்த பின்னர் அவர்களுடன் உத்தியோகபூர்வமாகப் பேசுவோம்.

யாரையும் நாங்கள் களவாகச் சந்திக்க மாட்டோம். கூட்டமைப்பினர் தமது மக்களுக்கு எதனையாவது பெற்றுக் கொடுக்க, அதனைச் செய்ய முடிந்த தரப்புடன் இணைய வேண்டும். நான் அறிந்தவரை கூட்டமைப்பு சஜித்துடன் பேசியபோதும் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்வில் அது சம்பந்தமான அறிவு சஜித்துக்கு இருப்பதாக கூட்டமைப்பால் உணர முடியவில்லை. இதை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் என்னிடம் தெரிவித்தார். செய்வோம் என்று கூறும் சஜித் எதனை செய்வது என்பதில் தெளிவில்லாமல் இருக்கிறார்.

எங்களை சர்வாதிகாரிகள் என்கின்றனர். ஆனால் வடக்கு மாகாண சபைத் தேர்தல் உட்பட பல தேர்தல்களை நாங்கள் நடத்தினோம். எவற்றையும் ஒத்திப் போடவில்லை. ஆனால் ரணில் தேர்தல்களை ஒத்திப்போடுவது நியாயம்தானா? ஜனநாயகமா? அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் நாட்டுக்கு நல்லதல்ல. அதிகாரங்கள் கொண்ட இருவர் எப்படி நாட்டை நடத்துவது? எனவே ஒருவர், அரச தலைவர் அல்லது தலைமை அமைச்சர் அதிகாரங்களை கொண்டவராக இருத்தலே நல்லது, என்றார் மகிந்த ராஜபக்ச.

மகிந்த ராஜபக்சவின் கருத்துத் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் கருத்தை அறிய அவரைத் தொடர்பு கொண்டபோதும், அவர் அழைப்பைத் துண்டித்தார். (ஓ,5)

## ஈழத்...

துள்ளதாக பன்னாட்டுச் சேவை செய்திகள் தெரிவிக்கின்றன.

மலேசியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பில் இருந்ததாக 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பாக அந்நாட்டின் பயங்கரவாத தடுப்புப் பிரிவின் தலைவர் அயூப் கான் மொய்தீன் பிச்சை கூறியதாவது,

ஈழத் தமிழர்களுக்கு அனுதாபம் காட்டுவதும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்குவதும் ஒன்று அல்ல. பலஸ்தீனத்தின் மீது அனுதாபம் காட்டலாம். ஆனால் இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்களுக்கு ஆதரவு வழங்குவதை ஏற்க முடியாது.

செயல்படாமல் இருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு நிதி உதவி அளித்தது, நிதி திரட்டியது என்பது உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் 12 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு வீரவணக்கம் நிகழ்ச்சியை நடத்திய 2 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டோரில் சமூக வலைதளங்களில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பதிவிட்டவர்களும் உண்டு. அவர்களிடம் இருந்து புலிகள் இயக்க கொடிகள், புத்தகங்கள், போன்[illegible]பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளுடன் யார் தொடர்பு வைத்திருந்தாலும் கைது செய்யப்படுவார்கள், என்றார்.

இதேவேளை, சட்டத்தின் அடிப்படையில் தான் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர யாரையும் பலவீனப்படுத்த அல்ல என்று மலேசிய தலைமை அமைச்சர் மகாதீர் விளக்கம் அளித்திருக்கிறார். கைது நடவடிக்கையானது பொலிஸாரால் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. சட்டத்தின் அடிப்படையில் தான் நடைபெற்றது. இதில் அரசு எந்த விதத்திலும் தலையிடவில்லை. எந்த ஒரு தரப்பையும் பலவீனப்படுத்த வேண்டும் என்கிற நோக்கம் எதுவும் இல்லை, என்றார்.

வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இந்த விவகாரம் எழுப்பப்பட்டிருக்கிறது. அதில் 2 அமைச்சர்கள் பொலிஸாரின் நடவடிக்கையை கடுமையாக விமர்சித்திருக்கின்றனர். (ஓ,5)

## விருந்தில்...

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 3 மணியளவில் கைதடியில் இடம்பெற்றுள்ளது. சுவிஸிலிருந்து வருகை தந்த கு.குகதாசன் ரஜீவன் (வயது-31) என்பவரே உயிரிழந்தவராவார்.

சிறுவயதில் தந்தை சாவடைய தன்னை வளர்த்த தாத்தாவுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டதையடுத்து சொந்த ஊரான பூநகரி செல்வபுரத்துக்கு வருகை தந்ததாக உறவினர்கள் தெரிவித்தனர்.

நண்பர்களின் வேண்டுகோளின் பிரகாரம் கூழ் விருந்தில் கலந்து கொள்ள மூவருடன் கைதடிக்கு நேற்று முன்தினம் வந்துள்ளார். விருந்து முடிந்ததும் அங்கு படுத்திருந்த வேளையில் அதிகாலை வாந்தியெடுக்கவே வாகனத்தில் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். அவரைச் சோதனையிட்ட மருத்துவர், ரஜீவன் ஏற்கனவே சாவடைந்துள்ளார் எனக் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவரது சாவு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றப் பதில் நீதிவான் முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்தனர். அறிக்கையைப் பார்வையிட்டு சாவகச்சேரி பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் மூலம் விசாரணைகளை நடத்தி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது.

14 வயதில் சுவிஸ் நாட்டுக்குச் சென்ற இவர் கடந்த வருடம் இங்கு வந்து திருமணம் செய்து மனைவியையும் தாயையும் அங்கு அழைத்துச் சென்றுள்ளார் எனவும் சடலம் சுவிஸ் நாட்டுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது. (ஓ,5,9)

## தேர்தல்...

மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகத்துக்கு கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

வேட்பு மனுத் தாக்கல் செய்த எந்தவொரு வேட்பாளரும் வேறு ஓர் வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து, தேர்தலிலிருந்து விலகிக் கொள்ள சட்டத்தில் இடமில்லை. வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ள வேட்பாளர்களின் பெயர்கள் ஏற்கனவே வாக்குச் சீட்டில் உள்ளடக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வேறு ஓர் வேட்பாளருக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்து விலகிக் கொள்ள முடியாது, என்றார் மகிந்த. (ஓ,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானைத் தாக்கியது 'ஹகிபிஸ்' புயல்

## 8 பேர் சாவு; பலருக்குக் காயங்கள்

டோக்கியோ,ஒக்.14
ஹகிபிஸ் என்று பெயரிடப்பட்ட புயல்காற்று நேற்று முன்தினமிரவு இரவு ஜப்பானைத் தாக்கியது. ஜப்பானின் தலைநகர் டோக்கியோவிலிருந்து தென்மேற்குப் பகுதியில் இருக்கும் ஈஸு தீபகற்பத்தில் அது தணிந்து கரை கடந்தது. மணிக்கு 225 கிலோமீற்றர் வேகத்தில் வீசிய இந்தப் புயலால் ஜப்பானில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன.
வேகமாக வீசிய இந்தப் புயலால் 8பேர் சாவடைந்தனர். கிட்டத்தட்ட 60க்கு மேற்பட்டவர்கள் காயங்களுக்கு உள்ளாகினர்.
மகிழுந்து ஒன்று காற்றால் தூக்கி வீசப்பட்டதில் ஒருவர் கொல்லப்பட்டார் என்று சுட்டிக்காட்டப்படு கிறது. இந்தப் புயல் தாக்கியதால் டோக்கியோவில் உள்ள ஆயிரக்கணக்கான வீடுகளில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.
இந்தப் புயல் தாக்கத்தின்போதும் புயலின் பின்னரும் ஜப்பானில் மழை பெய்யும் என்று ஜப்பான் வானிலை முகமை அறிவித்தது.
1959ஆம் ஆண்டில் மணிக்கு 306 கிலோமீற்றர் வேகத்தில் வீசிய வெரா புயலுக்குப் பின் ஜப்பான் எதிர்கொள்ளும் கடுமையான புயல் இது.
வெரா புயலால் 5ஆயிரம் பேருக்கு மேற்பட்டோர் சாவடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.







## நேபாளத்தில் கவிழ்ந்தது பஸ் 14 பேர் சாவு; 98 பேர் காயம்

காத்மண்டு,ஒக்.14
நேபாளத்தின் சிந்துபால்சாக் மாவட்டத்தில் பயணித்துக்கொண்டிருந்த பேருந்து ஒன்று கவிழ்ந்தது. இதில் 14 பேர் சாவடைந்தனர். 98 பேர் பலத்த காயமடைந்தனர்.
காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அதிகளவான பயணிகளைப் பேருந்தில் ஏற்றியதன் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டு இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.
அதேவேளை பேருந்தின் ரயரில் அடைக்கப்பட்டிருந்த காற்றுத் திடீரென வெளியேறியதே இந்த விபத்து ஏற்பட்டதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## கலிபோர்னியாவில் காட்டுத்தீ; ஒரு இலட்சம் பேர் வெளியேற்றம்

வோஷிங்டன்,ஒக்.14
அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தின் தெற்குப் பகுதியிலமைந்த சான் பெர்னாண்டோ பள்ளத்தாக்கில் உள்ள காட்டுப்பகுதியில் கடந்த வியா ழக்கிழமை இரவு தீ பரவியது.
இந்தத் தீ மணிக்கு 800 ஏக்கர் காட்டுப்பகுதியைச் சாம்பலாக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் 76 வீடுகளும், 31 கட்டடங்களும் சேதமடைந்தன. இதுவரை 7 ஆயிரத்து 542 ஏக்கர் நிலப்பரப்பு சாம்பலாகி விட்டது.
தீயை அணைக்கும் பணி நடந்து வருகிறது. ஆயிரம் தீயணைப்புப் பணியாளர்களும், உலங்கு வானூர்திகளும் இந்தக் காட்டுத் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதனால் அந்தப் பகுதிக்கு அருகில் வசிக்கும் சுமார் ஒரு இலட்சம்பேர் வரையில் வெளியேற்றப்பட்டனர்.



## சீனாவில் நிலநடுக்கம்

பீஜிங்,ஒக்.14
சீனாவின் தென் பகுதியிலுள்ள குவாங்சி சுவாங் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு 10.55 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது.
இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.2 ஆக பதிவாகியது.
இந்த நிலநடுக்கத்தின் மையம் 10 கிலோமீற்றர் ஆழத்தில் பதிவாகியிருப்பதாக அரச ஊடகச் செய்தி நிறுவனம் தெரிவித்தது.
நிலநடுக்கத்தால் அந்தப் பகுதியில் உள்ள வீடுகள், கட்டடங்கள் குலுங்கியதால் மக்கள் வீதிகளில் தஞ்சம் அடைந்தனர்.
இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை.

## ஹொங்கொங்கில் பேரணி!



ஹொங்கொங்,ஒக்.14
சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்காங்கில் நேற்றுமுன்தினம் பேரணி நடந்தது. கவ்லூன் நகரில் நடந்த இந்தப் பேரணியில், 2 ஆயிரம் பேர் பங்கேற்றனர்.
கோஷங்களை எழுப்பியபடி சென்ற குறித்த பேரணி கவ்லூன் அதிவேக தொடருந்து நிலையத்துக்கு அருகே சென்றபோது சிலர் கண்ணாடிப் போத்தல்களையும், பெட்ரோல் குண்டுகளையும் வீசியதாகக் கூறப்படுகிறது. இதே நாளில் ஹொங்கொங் பொலிஸ் தலைமையகத்துக்கு முன்பாக ஓய்வூதியர்கள் 200 பேர் அமைதிப் போராட்டம் நடத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

## மசூதிக்குள் புகுந்து தாக்குதல்; 16 பேர் சாவு

வாகடூகு,ஒக்.14
மேற்கு ஆபிரிக்க நாடான பர்கினா பாசோவின் சல்மோசி பகுதியில் உள்ள மசூதியில் நேற்றுமுன்தினம் பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் மீது சரமாரியாக வெடிகுண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.
இந்தத் தாக்குதலில் 16 பேர் பரிதாபமாகச் சாவடைந்தனர். பலர் படுகாயமடைந்தனர். தாக்குதல் நடத்திய ஆயுததாரிகள் தப்பிச்சென்றனர்.
2015ஆம் ஆண்டில் இருந்து அல்கொய்தா மற்றும் ஐ.எஸ். ஆயுததாரிகளின் தாக்குதலை எதிர்கொண்டு வரும் இந்த நாட்டில் இதுவரை 500க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளதும் 2 லட்சத்து 80 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காபனீரொட்சைட் வெளியேற்றத்தைக் குறைக்கவும் பருவநிலை மாறுபாட்டைத் தவிர்க்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரி அயர்லாந்தின் டப்ளின் நகரில் அரச திணைக்களங்களுக்கு முன்னால் விலங்குகளின் முகமூடியணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர் சிலர்.

# துருக்கியின் தாக்குதல்களால் ஒரு லட்சம் மக்கள் பரிதவிப்பு

## கவலை வெளியிடுகிறது ஐ.நா.

நியூயோர்க்,ஒக்.14

குர்திஷ் ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் சிரியாவின் வடக்குப் பகுதியில் துருக்கி மேற்கொண்டு வருகின்ற இராணுவத் தாக்குதல்களால் ஓர் இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டது.



இது குறித்து மேலும் தெரிவித்த ஐ.நா, துருக்கியின் தாக்குதல்காளால் ஓர் இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். அல் ஹசாக்கா மற்றும் டெல் டெமர் ஆகிய நகரங்களில் பலர் பாடசாலைகள், பொது இடங்களில் தஞ்சம் புகுந்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன என்றது.

துருக்கி மேற்கொண்டுள்ள இந்தத் தாக்குதலுக்கு மனிதாபிமானக் குழுக்கள் பல கவலை தெரிவித்து வருகின்றன. ஆனால் யார் என்ன சொன்னாலும் நாங்கள் தாக்குதலை நிறுத்தப் போவதில்லை எனத் துருக்கி அதிபர் எர்டோகன் கூறியுள்ளார்.

**பின்னணி**

சிரியாவில் நிலைகொண்டுள்ள ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு எதிரான தாக்குதலில் அமெரிக்காவுக்கு ஆதரவாகக் குர்திஷ் ஆயுததாரிகள் செயற்பட்டனர். ஐ.எஸ். ஆயுததாரிகள் பலரைச் சிறைப்பிடித்தனர். இந்த நிலையில் அங்கிருந்த தனது துருப்புகளைத் திரும்பப் பெற்றது அமெரிக்கா. அமெரிக்கா தனது படைகளைத் திரும்பப் பெற்றதும் குர்திஷ் ஆயுததாரிகள் மீது தாக்குதலை ஆரம்பித்தது துருக்கி.

குர்து மக்கள் மீதான துருக்கி அதிபர் எர்டோகனின் இனத்துவேசமே இந்தத் தாக்குதல்களுக்கு முக்கிய காரணம் என்று பரவலாக விமர்ச னங்கள் உள்ளன.

# துருக்கிக்கு ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்தியது நெதர்லாந்து

ஆம்ஸ்ரார்டம்,ஒக்.14

வடக்குச் சிரியாவில் குர்திஷ் ஆயுததாரிகள் மீது துருக்கி தாக்குதல் நடத்தி வருவதை அடுத்துத் துருக்கிக்கு ஆயுத ஏற்றுமதிகள் செய்வதை முடக்குவதற்கு நெதர்லாந்து முடிவு செய்துள்ளது.

அத்தோடு அது மற்றைய ஐரோப்பிய நாடுகளையும் தன்னோடு இதில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

சிரியாவின் வட பகுதியில் நிலைகொண்டுள்ள குர்திஷ் ஆயுததாரிகள் மீது துருக்கி மூன்றாவது நாளாக தாக்குதல் நடத்தி வருகிறது.

இதனால் அங்கு பல ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் இலட்சக்கணக்கான மக்கள் உணவின்றித் தவித்து வருவதாகவும் ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டது.

இந்த நிலையில் துருக்கிக்கு இராணுவத் தளபாடங்களை ஏற்றுமதி செய் [illegible] நெதர்லாந்தின் அயலுறவு வர்த்தக அமைச்சர் சிக்ரிட் காக் அந்த நாட்டு நாடாளுமன்றில் அறிவித்தார்.

அத்தோடு ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள், துருக்கிமீது கட்டுப்பாடுகள் விதிக்கவும் ஆயுத ஏற்றுமதிகளை நிறுத்துவதற்கும் தம்மோடு இணைந்து செயலாற்ற வேண்டும் என்று அவர் அழைப்பும் விடுத்தார்.

## இன்றைய நாள்

**மேடம்:** நண்பரிடம் சில விஷயம் பேசுவீர்கள். எதிர்பார்த்த உதவி ஓரளவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பாதுகாப்பது நல்லது. பண பரிவர்த்தனை சுமாராக இருக்கும். அதிக பயன்தராத பொருள் விலைக்கு வாங்க வேண்டாம்.

**இடபம்:** உங்கள் செயல்களில் உற்சாகம் பரிமளிக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி எளிதாக நிறைவேறும். புத்திரரின் தேவையை அறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையுடன் பணி புரிவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனையின் அளவு அதிகரிக்கும். . உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

**கடகம்:** குடும்ப உறுப்பினர்களின் தேவைகள் ஓரளவு பூர்த்தியாகும். தொழில், வியாபாரத்தில் பிறரது செயலால் இடையூறு வராமல் பாதுகாக்க வேண்டும். பணவரவு சராசரி அளவில் இருக்கும்.

**சிம்மம்:** நண்பரிடம் சில விஷயம் பேசுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள இடையூறுகளை சமயோசிதமாக சரி செய்வீர்கள். பண பரிவர்த்தனை சுமாராக இருக்கும்.

**கன்னி:** உங்களின் தனி திறமையினால் அளப்பரிய நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திருப்திகரமான வளர்ச்சி ஏற்படும். உபரி பண வரவில் கொஞ்சம் சேமிப்பீர்கள். பணியாளர்களுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும்.

**துலாம்:** அனுபவ அறிவு பரிமளித்து புதிய நன்மைகளை பெற்று தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை உருவாகும். பண பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட பணிகளில் சில மாற்றம் செய்ய நேரிடலாம். தொழில், வியாபார நடைமுறை தாமத கதியில் இயங்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**தனுசு:** உங்களிடம் மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற கூடுதல் அவகாசம் தேவைப்படும்.

**மகரம்:** உறவினர் அன்பு, பாசத்துடன் உதவுவர். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான பணி மேற்கொள்வீர்கள். சராசரி பண வரவுடன் நிலுவை பணமும் வசூலாகும்.

**கும்பம்:** சிலர் உங்களிடம் உதவி கேட்டு அணுகுவர். தொழில், வியாபாரம் நல்ல வளர்ச்சி பெற அதிக முயற்சி தேவைப்படும்.

**மீனம்:** மனதில் அன்பும், கருணையும் அதிகரிக்கும். இயலாதவர்களுக்கு உதவுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் கூடுதல் பரிமாணம் ஏற்படும். வெகு நாள் விரும்பிய பொருள் வாங்குவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.14
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
சுப்பர் 8 சுற்றின் ஆட்டங்கள் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
நேற்றுமுன்தினம் சனிக்கிழமைமாலை 5 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மற்றுமொரு ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாசையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

---

யாழ்ப்பாணம்,ஒக்.14
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மனோகரா விளையாடுபுடுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
இதில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அண்ணாசிலையடி விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் பதிவு செய்ய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத்தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் 4:3 என்ற கோல் கணக்கில் பொலிகை பாரதி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (23)



# உதயசூரியன் வி.க. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம்,ஒக்.14
வல்வை உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்திய வல்வைக்கு உட்பட்ட கழகங்களுக்கிடையிலான 19 வயதுப் பிரிவினருக்கான 6 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.
நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் உதயசூரியன் கழக அணியை எதிர்த்து றெயின்போ விளையாட்டுக் கழக அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதற்கமைய களமிறங்கிய உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் கஜேந்திரன் 18 ஓட்டங்களையும், வசீகரன் 17 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் அபிஷேக் 2 இலக்குகளையும், கானகச்செல்வன், விவேகன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய றெயின்போ விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 42 ஓட்டங்களை மட்டும் பெற்று 10 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டது. இதில் கானகச்செல்வன் 19 ஓட்டங்களையும், உதயசூரியன் ஆட்டமிழக்காமல் 7 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் கஜேந்திரன், வசீகரன் தலா ஒவ்வொரு இலக்கைக் கைப்பற்றினர்.
ஆட்ட நாயகனாக உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி வீரர் வசீகரன் தெரிவானார். தொடராட்ட நாயகனாக உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி வீரர் கஜேந்திரன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த துடுப்பாட்ட வீரராக றெயின்போ அணியின் கானகச்செல்வன் தெரிவானார். இந்தச் சுற்றுத் தொடரின் மக்கள் மனங்கவர்ந்த வீரனாக றெயின்போ விளையாட்டுக் கழக அணி வீரர் உதயசூரியன் தெரிவானார். (23)

## இருதயராஜா வி.க. அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது



யாழ்ப்பாணம், ஒக்.14
தீவக கால்பந்தாட்டச் சங்கத்தால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திய அணிக்கு 11 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.
நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு அல்லைப்பிட்டி விளையாட்டுக் கழகமைதானத்தில்இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதியது.
இதில் இரு அணிகளும் எந்தவித கோல்களையும் பதிவு செய்யாது போக ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காகச் சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
சிறந்த ஆட்ட நாயகனாக ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணி வீரர் நிந்திரன் தெரிவானார். தொடராட்ட நாயகனாக புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வீரர் கவிதரன் தெரிவானார். சிறந்த கோல் காப்பாளராக புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி கோல் காப்பாளர் நிரோஜன் தெரிவு செய்யப்பட்டார். (23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.14
பருத்தித்துறை லீக்கின் அனுமதியோடு கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டு கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் சுப்பர் 8 சுற்றின் ஆட்டங்கள் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இதில் இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொடிக்குளாய் சத்திவேல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

---

முல்லைத்தீவு மாவட்ட அரச திணைக்களங்களுக்கு இடையிலான மாவட்டச் செயலர் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்றும், நாளையும் புதுக்குடியிருப்பு இரணைப்பாலை மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் இன்னிங்ஸால் வெற்றிபெற்றது இந்தியா

## தொடரையும் கைப்பற்றியது








தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி இன்னிங்ஸால் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

புனேயில் கடந்த 10ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 5 இலக்குகளை இழந்து 601 ஓட்டங்களைப் பெற்றது. அணித் தலைவர் கோக்லி ஆட்டமிழக்காமல் 254 ஓட்டங்களைக் குவித்தார். இது அவரின் 7ஆவது இரட்டைச் சதம். அவரைவிட அகர்வால் 108 ஓட்டங்களையும். ஜடேயா 91 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ரபாடா 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 275 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக கேசவ் மகாராஜ் 72 ஓட்டங்களையும், டுபிளஸி 64 ஓட்டங்களையும், பிளன்டர் 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அஸ்வின் 4 இலக்குகளையும், உமேஸ் யாதவ் 3 இலக்குகளையும், ஜடேயா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

தென்னாபிரிக்க அணி நேற்றையதினம் இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்டது. அந்த அணி 189 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து இன்னிங்ஸாலும் 137 ஓட்டங்களாலும் தோல்வியடைந்தது.

அதிகபட்சமாக எல்கர் 48 ஓட்டங்களையும், பவுமா 38 ஓட்டங்களையும், பிளன்டர் 37 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜடேயா, உமேஸ் யாதவ் இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக இரட்டைச் சத நாயகன் கோக்லி தெரிவானார். (ம)




# பந்து வீசுவதில் விரக்தி இல்லை

## அஸ்வின் தெரிவிப்பு

பந்துவீசுவதில் நான் விரக்தியடைந்ததில்லை என்று தெரிவித்தார் இந்திய அணியின் சுழல் பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின்.

நான் பந்து வீசும்போது விரக்தியடைந்ததே கிடையாது. விரக்தி என்பதை நான் விரும்பியதே இல்லை. அதைக் காட்டிலும் மீண்டும் பந்து வீசவே விரும்புவேன். மீண்டும் மீண்டும்யார் துடுப்பெடுத்தாட வந்தாலும், நான் மீண்டும் பந்துவீச மகிழ்ச்சியாக இருப்பேன். இந்திய அணிக்காக அனைத்து வடிவங்களிலும் களமிறங்கவே விரும்புகின்றேன். வாய்ப்புக்கள் கிடைத்தால் சிறப்பாகப் பயன்படுத்துவேன் - என்றார். (ம)

# ஆரம்ப வீரராக ரோகித் அற்புதமான முடிவுதான்

## சப்பல் புகழாரம்

இந்திய டெஸ்ட் அணியில் ஆரம்ப வீரராகக் களமிறக்கும் முயற்சி மிகச் சிறப்பானது என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் இயன் சப்பல்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: அறிமுக டெஸ்ட் போட்டியிலும் அதற்கு அடுத்த டெஸ்ட்டிலும் ரோகித் சர்மா மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக சதமெடுத்தார், ஆனால் அப்போது 6ஆம் நிலையில் இறங்கினார். தற்போது தென்னாபிரிக்காவுக்கு எதிராக தொடக்கத்தில் இறங்கி 2 சதங்களை அடித்திருக்கிறார். அதுவும் ரபாடா, பிலாண்டர் உள்ளிட்ட வலுவான பந்துவீச்சுக்கு எதிராக அடித்துள்ளார்.

இதில் முக்கியம் என்னவெனில் கோக்லிக்கு முன்னதாக அவர் இறங்கியிருப்பது அவரது டெஸ்ட் வாழ்க்கையின் வெற்றி தோல்வியை முடிவு செய்வதாகும். 2013ஆம் ஆண்டில் டெஸ்ட் வாழ்க்கையைத் தொடங்கிய ரோகித் சர்மா தொடர்ந்து அதில் மங்கலாகி 35 இன்னிங்ஸ்களுக்குப் பிறகு மீண்டும் சதம் எடுத்துள்ளார். இடையில் அவரது மிதமான வெற்றிகள் என்பது அவரை இந்திய அணியில் உள்ளேயும் வெளியேயும் வைத்திருந்தது. அதாவது அவர் தன் இடத்தை நிரந்தரமாக்கிக் கொள்ளவில்லை. இந்நிலையில் அவரைத் தொடக்க வீரராக இறக்கியிருப்பது பொருள் பொதிந்ததாக இருக்கிறது. ஒருநாள் கிரிக்கெட்டில் சக வீரர் விராட் கோக்லிக்கு அடுத்த படியாக அபாயகரமான வீரராக ரோகித் திகழ்கிறார். அதே போல் டெஸ்ட்டிலும் கோக்லிக்கு முன்னதாக அவர் இறங்கி ஆடுவது டெஸ்ட் அரங்கில் அவர் மீண்டும் கோலோச்ச வழிவகை செய்யும்- என்றார். (ம)




# மார்க்ரமுக்கு தேவையில்லாமல் ஆட்டமிழப்பை வழங்கிய நடுவர்

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நான்காம் நாளான நேற்று, தென்னாபிரிக்க ஆரம்ப வீரர் எய்டன் மார்க்ரமுக்குத் தேவையற்ற விதத்தில் ஆட்டமிழப்பை வழங்கினார் நடுவர்.

326 ஓட்டங்கள் பின்தங்கியிருந்த தென்னாபிரிக்க அணியை தொடர்ந்து துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார் இந்திய அணியித் தலைவர் கோக்லி. தென்னாபிரிக்காவின் ஆரம்ப வீரர்களாக எல்கர் மற்றும் மார்க்ரம் ஆகியோர் களமிறங்கினர். ஓட்டமெதையும் பெறாத நிலையில் இசாந் சர்மாவின் வேகப்பந்து வீச்சில் எல்.பி.டபிள்யு ஆனார் மார்க்ரம். உண்மையில் பந்து இலக்குக்கு மேலாகச் சென்றது. ஆனால் மார்க்ரம் நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யவில்லை. இதனால் அவர் பவிலியன் புறப்பட்டார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணப்ப படிவங்கள் விநியோகம்

தென்மராட்சி பிறீமியர் லீக்கினால் 2020ஆம் ஆண்டுக்கான தென்மராட்சி துடுப்பாட்ட அணியைத் தெரிவு செய்வதற்கான சுற்றுப் போட்டியை அடுத்த வருடம் ஏப்ரல் மாதமளவில் நடத்த திட்டமிட்டுள்ளனர். அதற்காக வீரர்களை ஏலம் கோரும் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. கடந்த வருட சுற்றுப் போட்டியில் 10 அணிகள் பங்குபற்றின எனவும் 2020 ஆம் ஆண்டு சுற்றுப் போட்டியில் அதன் எண்ணிக்கை அதிகரிக்கவுள்ளோம் எனவும் தெரிவித்தனர். (9)

# மைதானத்துக்குள் ரசிகர் அத்துமீறல் பாதுகாவலர்களை கடிந்தார் கவாஸ்கர்



புனேயில் நடைபெற்று வரும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியின் போது ரசிகர் ஒருவர் அத்துமீறி மைதானத்துக்குள் நுழைந்ததற்கு கவாஸ்கர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்தியா -தென்னாபிரிக்கா அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் போட்டி புனேயில் நடைபெற்று வருகிறது. நேற்றைய 3ஆவது நாள் ஆட்டத்தின்போது ரசிகர் ஒருவர் மைதானத்துக்குள் அத்துமீறி நுழைந்தார்.

8ஆவது வரிசை வீரர் முத்துசாமி ஆட்டம் இழந்து மைதானத்தை விட்டு வெளியேறும்போது பிலண்டர் களத்துக்கு வந்தார். அப்போதுதான் ரசிகர் ஒருவர் ஆடுகளத்துக்குள் புகுந்தார். அவர் ரோகித் சர்மாவின் காலில் விழுந்து ஆசி வாங்கினார். அப்போது ரோகித் சர்மா நிலை தடுமாறி கீழே விழுந்தார்.

இதற்கு அந்த ரசிகர் மன்னிப்பு கேட்டுக் கொண்டார். இந்தச் சம்பவத்தால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. அந்த ரசிகரை பாதுகாவலர்கள் அழைத்து சென்றனர்.

மைதானத்துக்குள் ரசிகர் நுழைந்தது தொடர்பாக பாதுகாவலர்கள் மீது முன்னாள் இந்திய அணித் தலைவர் கவாஸ்கர் கடுமையாக பாய்ந்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்;

இது மாதிரியான சம்பவங்கள் நடைபெறுவதற்கு காரணம் ரசிகர்கள் பக்கம் கவனம் செலுத்தாமல் பாதுகாவலர்கள் ஆட்டத்தை பார்ப்பதுதான். இந்தியாவில் எப்போதும் இந்தப் பிரச்சினை உள்ளது.

கிரிக்கெட் ஆட்டத்தை பாதுகாவலர்கள் இலவசமாக பார்க்கக்கூடாது. ஆட்டத்தை பார்ப்பதற்காக அவர்கள் அங்கு வரவழைக்கப்படவில்லை. இதுபோன்று அத்துமீறி நுழைபவர்களை தடுப்பதற்காகத்தான் அவர்கள் பணியமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். பாதுகாவலர்களின் பக்கம் ஒளிப்படக் கருவியை திருப்பி அவர்கள் ஆட்டத்தை பார்க்கிறார்களா? அல்லது ரசிகர்களை கவனிக்கிறார்களா? என கண்காணிக்க வேண்டும்.

இதுபோன்று அத்துமீறி நுழையும் ரசிகர்களால் வீரர்களுக்கு ஆபத்து நேரிடலாம். இதுபோல முன்பும் நடைபெற்றுள்ளது. அப்படி இருக்கும்போது அலட்சியமாக இருப்பது ஏன்?

மைதானத்துக்குள் நுழைவது எளிதானது அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஏராளமான தடுப்புகள் இருக்கின்றன. அப்படி இருந்தும் இது போன்ற சம்பவங்கள் இன்னும் தொடர்ந்து நடக்கிறன - என்றார்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 24 . 05 . 1925



உதிர்வு 16 . 09 . 2019

### அமரர் கணபதிப்பிள்ளை நாகம்மா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.10.2019) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளைமறுதினம் (16.10.2019) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

எமது குடும்பத் தலைவியை நாம் இழந்து தவித்தபோது எமக்குப் பலவழிகளிலும் உதவியையும் ஆறுதலையும் தந்த உறவுகளுக்கும், நண்பர்கள், அயலவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுகந்திரபுரம் சந்தி,
உடையார்கட்டு, முல்லைத்தீவு. (CS/28469)(11,17)

பிள்ளைகள்

## பிரத்தியேக வகுப்புக்கு ஆசிரியர் தேவை


தரம் 10 - O/L வரை தமிழ், வரலாறு, சுகாதாரம், கணிதம் ஆகிய பாடங்களை வீடு (கொக்குவில்) வந்து கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை.

(CS/28691)(11.17)

076 396 2454, 076 358 4258

## மரண அறிவித்தல்

மண்ணில் 17 . 04 . 1955



விண்ணில் 11 . 10 . 2019

### சண்முகநாதன் கேதீஸ்வரநாதன்

(நாதன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்/
கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திருக்கேதீஸ்வரம், மன்னார்)

திருக்கேதீஸ்வரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட **சண்முகநாதன் கேதீஸ்வரநாதன்** கடந்த **(11.10.2019)** வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சண்முகநாதன் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா பத்மாவதி தம்பதியினரின் மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், கீர்த்திநாதன் (நியூ சீசன்ஸ், வவுனியா), சத்தியநாதன் (பிரான்ஸ்), ஜீவநாதன் (அசர்பஜான்), கோபிநாத் (திருக்கேதீஸ்வரம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாசனி, யோகேஸ்வரி, புவீந்திரநாதன், ஜீவமலர், சகுந்தலா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நவரெட்ணம், சுமதி, ரூபநாதன், திருச்செல்வம், பாக்கியம், வள்ளியம்மை, விஜயலட்சுமி, முருகானந்தம், நாகேந்திரம், கணேசலிங்கம், கௌரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(15.10.2019)** செவ்வாய்க்கிழமை முற்பகல் **11.00**மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருக்கேதீஸ்வரம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திருக்கேதீஸ்வரம், மன்னார்.

தகவல்:- குடும்பத்தினர்

## அமெரிக்க லொத்தர் இலவச விசா

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன

2021ல் நீங்களும் அமெரிக்காவில்..

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

0768226241

V2 Travels

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 |
| நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 |
| திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238 |
| சுன்னாகம் 0764550670 | கொடிகாமம் 0764550675 |
| புதுக்குடியிருப்பு 0764550673 | மருதங்கேணி 0764550671 |
| பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.

021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org